CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS

# ஆரம்பக்கல்வி



ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா

மலர் 15 } ஜூன் 1954 { இதழ் 6

# வெற்றி! வெற்றி!

## மகத்தான வெற்றி!

ஆரம்ப ஆசிரியர்களின் ஓயாத கிளர்ச்சி வெற்றி பெற்று விட்டது.

ஜனநாயக சக்திகளின் இடைவிடாத போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது.

முற்போக்குக் கட்சிகளின் ஆற்றலும் உழைப்பும் வெற்றி பெற்றுவிட்டன.

நீதியும் நேர்மையும் கல்வி நிபுணர்களின் கருத்துரைகளும் வெற்றி பெற்றுவிட்டன.

சென்னை மாநிலக் குழந்தைகளின் எதிர்காலம் வெற்றி பெற்று விட்டது.

கல்வி உலகத்தைக் கவ்வியிருந்த இருள் ஒழிந்து, கேடு தொலைந்து, அக்கிரமம் மடிந்து, அநீதி பொடிப்பொடியாகி விட்டது.

ஆரம்பப் பள்ளிகளைப் பீடித்திருந்த 'கிரகணம்' விலகி, ஒளி பிறந்து விட்டது.

புதிய கல்வித் திட்டம் ஒழிந்து விட்டது.

ஆமாம், நண்பர்களே, ஆமாம்! தேன் போன்ற சேதி! தென்றலின் இன்பப் பவனி போன்ற சம்பவம்! புதிய திட்டம் இனிக் கிடையாது என்று அறிவித்துவிட்டது காமராஜரின் அமைச்சரவை.

இந்த மாதம் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டதும், சென்ற ஓராண்டுக் காலமாக ஆசிரியர்களின் வேதனையை வளர்த்து வந்த கல்விக் திட்டம் அமுலில் இருக்காது. அதற்கு முன்பு நடைமுறையில் இருந்த திட்டம்தான் மீண்டும் அமுலுக்கு வருகிறது.

எந்தக் கல்வித் திட்டம், குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பட்ட மாபெரும் முட்டுக் கட்டையாக இருந்து வந்ததோ, எந்தக் கல்வித் திட்டம் ஆசிரியர்களின் வேலைப் பளுவை முன்னிலும் பல மடங்காகக்கூட்டிக் காட்டி தொல்லையை வளர்த்ததோ, எந்தக் கல்வித் திட்டம் கல்வி நிபுணர்கள் அத்தனைப் பேராலும் ஒரே மனதுடன் கண்டிக்கப்பட்டு வெறுத்து ஒதுக்கப்பட்டு வந்ததோ, எந்தக் கல்வித் திட்டம் தொடர்ந்து அமுலில் இருக்குமானால் நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டு, கல்வியின் சிறப்பு சீர்குலைந்து, ஆரம்பப் பள்ளிகளின் எழிலும் இனிமையும் மங்கி மறைந்து மண்ணோடு மண்ணாக மாண்டுபோயிருக்குமோ, அந்தக் கல்வித் திட்டம் ஒழிந்துவிட்டது. அந்த மாபெரும் கேடு தொலைந்துவிட்டது. அந்த மகத்தான இடையூறு தூள்தூளாகிவிட்டது.

புதிய கல்வித் திட்டம் என்றைய தினம் கொண்டு வரப்பட்டதோ, அன்றைய தினத்திலிருந்தே அந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பு, மகத்தான அளவில் மூண்டுவிட்டது.

மூளாமல் எப்படி இருக்கும்?

புதிய திட்டத்தைக் கொண்டு வந்த அந்நாள் அமைச்சர் அன்பர் ஆச்சாரியார் எந்த முறையில் அதனைக் கொண்டு வந்தார்?

திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் கல்வி நிபுணர்களை அழைத்து அவர்களுடைய கருத்துரையை அறிய முயற்சித்தாரா? இல்லை!

ஆரம்ப ஆசிரியர்களின் பிரதிநிதிகளை அழைத்து, இப்படி ஒரு திட்டம் வருகிறது — வருவது சரியா — யாது கூறுகிறீர்கள் என்று வினவினாரா? கிடையாது!

மாற்றுக் கட்சிகளின் தலைவர்களை அழைத்து, இந்தத் திட்டத்திற்கு அவர்களுடைய சம்மதம் கிடைக்குமா என்பதைக் கண்டறிய எண்ணினாரா? இல்லை இல்லை!

சட்டசபையைக் கூட்டி, அங்கு வீற்றிருக்கும் மக்கட் பிரதிநிதிகளிடம் திட்டத்தை நீட்டி அவர்கள் தம் ஒப்புதலைப் பெறவேண்டும் என்கிற ஜனநாயகப் பாதைவழி நடந்தாரா? அப்படியுமில்லை.

சட்டசபையைத்தான் கேட்கவில்லை, தன்னுடைய சொந்தக் கட்சியினரையாவது அழைத்து, அவர்களிடமாவது இதுபற்றிக் கூடிக் கலந்து பேசினாரா? இல்லவே இல்லை.

சட்டசபை கூட இருக்கட்டும் ஒரு புறம். தன்னுடைய மந்திரி சபையிலேயுள்ள ஏனைய அமைச்சர்களின் உள்ளக் கருத்தையாவது உணர முயன்றாரா? கிடையாது கிடையாது.

கல்வி நிபுணர்களையும் கேட்கவில்லை—ஆசிரியத் தோழர்களையும் கலக்கவில்லை—சட்டசபையுடனும் பேசவில்லை—சொந்தக் கட்சியிடமும் விவாதிக்கவில்லை—தன் மனம் போன போக்கிலே, தானே கொண்டு வந்தார் இந்தத் திட்டத்தை — எதேச்சாதிகாரப் பாதையிலே நடந்தார்.

"இப்படி நடப்பது முறையல்லவே! எல்லோரையும் கலந்து கொண்டு ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதுதானே ஜனநாயகம்?" என்று, நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் கேட்டபோது, "புத்தரும் ஏசுவும் யாரைக் கேட்டுக்கொண்டு தங்களுடைய சன்மார்க்க நெறிகளை மக்களிடம் பரப்பினார்கள்?" என்று வீண்வாதம் பேசினார்.

"அவர்களைப் போல நீவிரும் ஆட்சிப் பீடத்தில் இல்லாமல ஆசிரமத்திலே இருந்துகொண்டு புதிய திட்டத்தைப் பற்றி உபதேசம் செய்துகொண்டிரும்! கவலையில்லை! ஆனால் அரசாங்க நாற்காலியில் அமர்ந்து கொண்டு அனைவர் மீதும் திட்டத்தைத் திணிக்கிறீரே! இது சரியா? புத்தரும் ஏசுவும் இப்படியா செய்தார்கள்?" என்று பிறர் கடாவியபோது, "அது என் விருப்பம்! நீங்கள் யார் கேட்க?" என்று முழக்கமிட்டார்.

அன்பர் ஆச்சாரியாரின் இந்த ஆகாத போக்கைக் கண்டு, ஆசிரியர் உலகம் கொதித்து எழுந்தது! அரசியல் கட்சிகள் போர்க்கோலம் பூண்டன; கல்வி நிபுணர்கள் கடுங்கோபம் கொண்டார்கள்; காங்கிரஸ் கட்சியிலும் மிகப் பல கண்ணியர்கள், கண்ணீர் வடித்தார்கள்; கடுவேதனை அடைந்தார்கள்.

புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் போராட்டம் தொடங்கிற்று ஆயிரக் கணக்கான வர்கள் அந்த அறப்போரில் ஈடுபட்டு வெஞ்சிறை புகுந்தனர். அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா உட்பட கட்சித் தலைவர்கள் அக்கொடும் பெரும் அடக்கு முறைக்கு ஆளாயினர்.

அதுபோலவே திராவிடர் கழகமும் அதன் தலைவர் பெரியாரின் தலைமையில் கல்வித் திட்ட எதிர்ப்பு மறியல் நடத்திற்று. ஏறத்தாழ ஓராயிரவர் சிறைப்பட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சியும் திட்டத்தைக் கண்டித்துக் கடுமையான முறையில் தீர்மானம் நிறைவேற்றிற்று.

ஆயிரக்கணக்கான பொதுக்கூட்டங்கள் நடைபெற்று, அந்தக் கூட்டங்கள் அத்தனையிலும் திட்டம் கைவிடப்படவேண்டும் என்று மக்கள் முழக்கமிட்டிருக்கின்றனர்.

எதிர்ப்பு—எதிர்ப்பு—எல்லாத் திசைகளிலிருந்தும் எதிர்ப்பு எழுந்தது திட்டத்திற்கு.

கண்டனம் — கண்டனம் — எவ்வெப் பகுதிகளிலுமிருந்தும் கண்டனம் கிளம்பிற்று திட்டத்தை எதிர்த்து.

என்றாலும் ஆச்சாரியார் அசைந்து கொடுக்கவில்லை. அர்த்தமற்ற தன் பிடிவாதத்தைச் சிறிதளவும் தளர்த்தவில்லை.

தளர்த்தவில்லை — எனவேதான் அவர், தொடர்ந்து பதவியில் இருக்க முடியாத நிலை நேரிட்டது.

இப்போதோ, அவர் கொண்டு வந்த திட்டமும் தொலைந்து விட்டது.

ஆசிரியர் உலகத்திற்கு ஒரு மகத்தான வெற்றி ஏற்பட்டு விட்டது.

எந்தக் கல்வியமைச்சர் சுப்ரமண்யனார் இந்தத் திட்டத்தை ஆதரித்து சென்ற ஓராண்டுக் காலமாக இடி முழக்கம் எழுப்பி வந்தாரோ, அதே சுப்ரமண்யனார்தான், சென்ற வாரம், சட்டசபையில், எங்கள் அரசாங்கம் திட்டத்தை வாபீஸ் வாங்கிவிட்டது என்றும் அறிவித்திருக்கிறார்.

இதைவிட மகிழ்ச்சியும் பெருமையும் அளிக்கும் ஓர் நிகழ்ச்சி ஆசிரியர் உலகத்திற்கு வேறென்ன இருக்கமுடியும்?

திட்டத்தை வாபீஸ் வாங்கி யிருப்பதுமட்டுமல்ல. திட்டம் தோல்வியடைந்துவிட்டது என்பதையும் கனம் சுப்ரமண்யனார் தெள்ளத் தெளிவாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஆரம்ப ஆசிரியர்களின் அமைதிக் கிளர்ச்சிக்குக் கிடைத்திருக்கிற மகத்தான வெற்றியல்லவா இது?

திட்டம் வெளிவந்தவுடனே, திட்டம் தோற்றே தீரும் என்று ஆசிரியர்களாகிய நாம், அழுத்தந் திருத்தமாக அறிவித்தோம்.

"திட்டமாவது, தோற்பதாவது, ஒருக்காலுமில்லை!" என்று அப்போது நம்மைக் கேலி செய்தார் கனம் சுப்ரமண்யம்.

ஆனால் இப்போது?

திட்டம் தோற்றுத்தான் போய்விட்டது என்பதை சோகத்தோடு ஒப்புக்கொள்கிறார்.

"புதிய கல்வித் திட்டம் வெற்றி பெறவில்லை. இந்தத் திட்டத்தை ஆதரித்து நாங்கள் எவ்வளவோ பிரசாரம் செய்த போதிலும், பொது மக்களை இதனை ஏற்கும்படி செய்ய எங்களால் முடியவில்லை இந்தத் திட்டம் மட்டுமல்ல, எந்தத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானாலும், அதற்கு, பொதுமக்களின் ஆதரவும் அங்கீகாரமும் ஒத்துழைப்பும் தேவை. ஆனால், இந்தத் திட்டத்திற்கு அத்தகைய ஆதரவும் ஒத்துழைப்பும் அங்கீகாரமும் கிடைக்கவில்லை."

கனம் சுப்ரமண்யனாரின் சட்டசபைச் சொற்பொழிவு இது.

திட்டவட்டமாக ஒப்புக்கொண்டிருக்கிறார் உண்மையை! பாராட்டுகிறோம் அதற்காக! ஆனால் இந்த நேர்மைப் பண்பும் தெளிந்த உள்ளமும் நண்பர் சுப்ரமண்யனாருக்கு இவ்வளவு காலம் பொறுத்தா ஏற்படவேண்டும்? உண்மையை ஒப்புக்கொள்ளும் இந்த உள்ள உரம், அமைச்சர் அவர்களுக்கு ஓராண்டுக் காலத்திற்கு முன்னரே ஏற்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? ஆசிரியர்களின் உள்ளக் குமுறலும் கொந்தளிப்பும் எந்த அளவு குறைந்திருக்கும்? புதிய திட்டத்தின் காரணமாக நாட்டிலே ஏற்பட்ட எத்தனைப் போராட்டங்களை, எத்தனை எத்தனைக் கிளர்ச்சிகளை, எத்தனை அமளிகளை, எத்தனைத் தாயரங்களை நாம் தவிர்த்திருக்க முடியும்? வேறு பல நற்செயல்களில் செலவழிக்கப்பட்டிருக்க வேண்டிய பொதுமக்களின் நேரம் – நினைப்பு – முயற்சி அத்தனையும் இந்த அர்த்தமற்ற திட்டத்தை எதிர்ப்பதிலே வீணாக்கப்பட்டனவே, இந்த வீண் செலவை எவ்வளவு தடுத்திருக்க முடியும்?

"இப்போதும் சரி, புதிய கல்வித் திட்டத்தால்தான் நாட்டின் கல்விப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் என்னுடைய நம்பிக்கை எப்படியிருந்தாலும், என்னுடைய கட்சி, இந்தத் திட்டத்தைக் கைவிட்டாக வேண்டும் என்று

ஏகமனதாக முடிவு செய்து விட்டது. பொது மக்களின் ஆதரவும் இதற்கு இல்லை. இது ஜனநாயக சகாப்தம். இந்த சகாப்தத்தில், ஒரு திட்டம் எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் சரி, அதற்குப் பொது மக்களின் ஆதரவு இல்லையென்றால் அந்தத் திட்டத்தை நாம் கைவிட்டுத்தான் ஆகவேண்டும். ஆகவேதான் திட்டத்தை எங்கள் கட்சி கைவிட்டுவிட முடிவு செய்துவிட்டது"

*சுப்ரமண்யனாரின் சட்டசபைப் பேச்சில் காணப்படும் மற்றொரு பகுதி இது.*

*பொன்னான வாசகங்கள்! போற்றிப் புகழ வேண்டிய சொற்கள்!*

*ஆமாம்! ஆனால், அவர், இந்த அரிய வார்த்தைகளை, மிக எளிதிலா சொல்லியிருக்கிறார்! இந்த வார்த்தைகளை அவருடைய சொற்பொழிவிலிருந்து வரவழைக்க, ஆசிரியர்களும் பிறரும் எத்தனைக் கிளர்ச்சிகளில் ஈடுபட வேண்டியிருந்தது!*

*இரண்டும் இரண்டும் நான்கு என்றுகூறுவது எத்துணை எளிய உண்மையோ அத்துணை எளிய உண்மைதான் அமைச்சரின் இந்தச் சொற்பொழிவில் அடங்கியிருப்பதும்! என்றாலும் இந்த உண்மையை இவரிடமிருந்து பெறுவதற்குத்தான் ஆசிரியர்கள் நூற்றுக்கணக்கான கூட்டங்களைக் கூட்ட வேண்டியிருந்தது. மாற்றுக் கட்சிகள், மாபெரும் போராட்டங்கள் பல நடத்தவேண்டியிருந்தது.*

*ஒரு கருத்து எவ்வளவுதான் நியாயமானது என்றாலும், அந்தக் கருத்தின் பின்னால் போதுமான அளவு பிரசாரபலம் இல்லாவிட்டால், ஜனநாயக சகாப்தத்தில் அந்தக் கருத்து நிலைபெற முடியாது என்கிற உண்மையை, சுப்ரமண்யனாரின் இந்தப் போக்கு, எவ்வளவு தெளிவாக நமக்கு உணர்த்துகிறது!*

*போனது போகட்டும். புதிய திட்டம் ஒழிந்துவிட்டது. கல்வித் துறையில் இனி எத்தகைய மாறுதலை இந்த அரசாங்கம் செய்வதாக இருந்தாலும் சரி, அதனை, அவர்கள், கல்வி நிபுணர்களின் ஒப்புதலின்றிச் செய்யவேண்டாம்.*

*ஆரம்பக்கல்வி முறையில் ஏதாவது திருத்தம் தேவை என்று அரசாங்கம் கருதினால், அரசியல் சார்பற்ற கல்வி நிபுணர்களைக் கொண்ட ஓர் கமிட்டியை அமைக்கட்டும். அந்தக் கமிட்டியின் உறுப்பினர்கள், ஆரம்ப ஆசிரியர்கள் – பொதுமக்கள் – பெற்றோர்கள் – பள்ளிக்கூட நிர்வாகிகள் – பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் – கல்வித் துறை வல்லுநர்கள் ஆகிய பல்வேறு திறத்தினரையும் கண்டு பேசட்டும். அவரவர்தம் கருத்துகளை அறியட்டும், பிறர் கருத்தை அறிந்தபின் எல்லா வகைக் கருத்துகளையும் சீர்தூக்கிப் பார்த்து, அலசி ஆராய்ந்து, அந்தக் கமிட்டியினர் ஒரு முடிவுக்கு*

வரட்டும். அப்படிக் கிடைத்த முடிவை, சட்ட சபையின் ஆலோசனைக்கு வைத்து, அதற்கு அப்புறம் நடைமுறைக்குக் கொண்டு வரட்டும்.

இதுதான் முறை. இந்த முறைப்படி நடந்தால், கிளர்ச்சிகள் இருக்கமாட்டா. போராட்டங்கள் புறப்படா. அதிருப்தி அலைகள் கிளர்ந்தெழா.

# ஆரம்ப ஆசிரியர்களே! கவனம்! கவனம்!!

ஆரம்ப ஆசிரியர்களே! ஆசிரிய மானேஜர்களே! கவனமிருக்கட்டும்! ஜூன் மாதம் ஆரம்பமாகிவிட்டது. பள்ளிகள் திறக்கப்படுகின்றன. உங்களுடைய உரிமை முரசும் உணர்ச்சி முழக்குமாகிய "ஆரம்பக் கல்வி"யை மறந்துவிடாதீர்கள். உங்களுடைய குறைகளை எடுத்துக்காட்டி ஊராள்வோருடன் போராடும் உள்ளத் துணிவு படைத்தது "ஆரம்பக் கல்வி" ஊதிய உயர்வின் இன்றியமையாமையைத் தெள்ளத் தெளிவாகப் புள்ளி விவரங்களுடன் விளக்கிப் பணியாற்றும் பொன்னான ஏடு, "ஆரம்பக் கல்வி." ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளக் குமுறல்களை, மாநாட்டு நிகழ்ச்சிகளை, சங்கங்களின் நடவடிக்கைகளை உடனுக்குடன் தருகின்ற உயர்பணி புரிவது "ஆரம்பக் கல்வி." ஆரம்ப ஆசிரியர்களின் இந்தப் பாதுகாவலன்—இந்தப் போர்வீரன்—இந்த எழிலேடு, சீரும் சிறப்புடன் என்றும் உலவி, ஆசிரியர்களின் குறைகளை நிச்சயம் போக்க வேண்டுமானால், அதன் வளர்ச்சிக்காக வென்றே எம்மால் வெளியிடப்பட்டு வருகின்ற பலவகைப் பாட புத்தகங்களை, ஆசிரியர்கள், தம் தம் பள்ளிகளில் வைத்து, எங்களுக்கு ஊக்கம் ஊட்டுவது மிகவும் அவசியம். இந்த ஆண்டில் வெளியிடப்பட்டிருக்கின்ற எங்களுடைய புத்தகங்கள் சிறந்த முறையில் சீரிய கருத்துக்களை எடுத்துரைக்கப் பெற்றியன. அழகும் சுவையும் நிரம்பியன. கண்ணையும் நெஞ்சையும் கவரும் வகையில் அட்டைப் படங்கள் அமையப் பெற்றன. 'வீரபாண்டியன் வாசகங்கள்' என்கிற தலைப்பில் நாங்கள் வெளியிட்டுள்ள பாட புத்தகங்கள், மாணவர்கள் உளளத்திற்குத் தேனென இனித்துத் தென்றலென இன்பம் தருபவை. அவற்றிலிருந்து சில பாடங்களை, மாதிரிக்காக இந்த இதழின் வேறு பகுதியில் வெளியிட்டிருக்கிறோம். காண்க—மகிழ்க உங்கள் மாணவர்களை அப் புத்தகங்களையும் நாங்கள் வெளியிட்டுள்ள ஏனைய புத்தகங்களையும் படித்துப் பயனடையும்படி செய்க. அன்புள்ள ஆசிரியர்காள் – கவனமிருக்கட்டும்.

# காலமும் கருத்தும்

## யார் செய்வது?
## எப்போது செய்வது?

ஒரு குறிப்பிட்ட காரியம் நியாயமானதாக இருக்கலாம். ஆனால் அது நியாயமானது என்ற காரணத்தாலேயே, அதனை யார் வேண்டுமானாலும் செய்துவிடலாம், எப்போது வேண்டுமானாலும் செய்யலாம் என்றால், அது முறையாகாது. இன்ன பணியினை இன்னார்தான் செய்ய வேண்டும் என்ற முறையுண்டு. இன்ன காரியத்தை இன்ன வேளையில்தான் செய்யவேண்டும் என்ற நியதியும் உண்டு. ஆனால் சென்னை மாநிலத்தில் உள்ள ஜில்லா போர்டுகளும், முனிசிபாலிடிகளும் இந்த நீதி முறையை மறந்துவிட்டிருக்கின்றன. அந்த இரு நிறுவனங்களின் முதல் கடமை, தத்தமது எல்லைக்குள் இருக்கும் இளஞ்சிறார்களுக்கு, ஆரம்பக் கல்வியை அளிப்பதற்கான வசதிகளைச் செய்து தருவதுதான். தம் எல்லைக்குள் வாழ்கிற எல்லாப் பிள்ளைகளுக்கும் தேவையான அளவு ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கிவிட்ட பிறகுதான், அந்த நிறுவனங்கள், உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குவதில் தங்கள் கவனத்தைச் செலுத்தலாம். முதலில் தொடங்கப்படவேண்டியது ஆரம்பப் பள்ளிகள்தான். ஆனால், சென்னை மாநிலத்தில் இருக்கிற 'எல்லா ஜில்லா போர்டுகளுமே பல உயர்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றன. ஆனால், அந்த மன்றங்களின் எல்லைக்குள் இருக்கிற எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வியைத் தர அம்மன்றங்கள் வசதி செய்துவிட்டு அதன் பிறகு இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றனவா என்றால் அதுதான் இல்லை. அடிப்படையை அமைக்காமல் கட்டிடத்தின் சுவர்களை எழுப்புவது எத்தனை அறியாமையோ அத்தனைப் பேதமைதான் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்காமல் உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குவது. எனவேதான் இந்தப் போக்கினை நாம் நெடுங்காலமாகக் கண்டித்து வருகிறோம். சென்னை அரசாங்கம் இத்துறையில் ஈடுபட்டு, ஜில்லா போர்டுகள்-முனிசிபாலிடிகளின், இந்தத் தவறான போக்கைத் தடுத்திட வேண்டும் என்றும் நாம் பலமுறை எழுதியிருக்கிறோம். சென்னை அரசாங்கம் இப்போதுதான் இந்தத் துறையில் தன் எண்ணத்தைச் செலுத்தி, சரியானதோர் உத்தரவையும் சிறந்த முறையில் பிறப்பித்திருக்கிறது. "இனிமேல், ஜில்லா போர்டுகளும், முனிசிபாலிடிகளும், தங்களுடைய எல்லைக்குட்பட்ட வட்டாரத்தில்

போதுமான அளவு ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கி நடத்துகிற வரையில், உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கும் முயற்சியை ஒத்திவைத்தல் வேண்டும்.''

இது, அரசாங்கத்தின் சுற்றறிக்கை. பாராட்டுகிறோம் அரசாங்கத்தை. ஜில்லாபோர்டுகளும் முனிசிபாலிடிகளும், இனியாவது உயர்நிலைப் பள்ளிகள் தொடங்குவதில் தங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவழிக்காமல், ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கி, கல்வி மாளிகையின் அடிப்படையை முதலில் அமைப்பார்களாக. சுவர்களும் கூரையும் பிறகு! அடிப்படை அமைப்பது முதலில்!! இதுதான் கட்டிடம் எழுப்புவதற்கான சரியான மார்க்கம். இதனை நினைவில் கொள்ள வேண்டும் ஜில்லா போர்டுகள்—முனிசிபாலிடிகள்.

## கொள்கைப்படி சரி! ஆனால் நடைமுறையில்?

ஆந்திர மாநிலக் கல்வி நிபுணர் கமிட்டி, அந்த அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துள்ள தன்னுடைய அறிக்கையில், இனி அந்த மாநிலத்தில் உள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று தெரிவித்திருக்கிறது. கொள்கை அளவில் பார்க்கிறபோது இந்த சிபார்சு நியாயமானதுதான். இங்கிலாந்து முதலிய பல நாடுகளில், ஆரம்பப் பள்ளிகள் அத்தனையும் அரசாங்கத்தால்தான் நடத்தப்படுகின்றன. ஆனால், இந்த நாட்டு அரசாங்கங்கள் பணமின்றித் தவிக்கும் இன்றைய நிலையில், இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதுதான் நமது கேள்வி. ஆரம்பப் பள்ளிக்கூடம் செல்லவேண்டிய வயதுடைய மொத்தப் பிள்ளைகளில் ஏறத்தாழ பாதிப் பேருக்கு இப்போது பள்ளிக்கூடங்கள் இல்லை. ஆகவே முதலில் அவர்களுக்கெல்லாம் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியாக வேண்டும். அதற்கு ஏராளமாகப் பணம் தேவைப்படும். அப்படி நிறுவப்படும் புதிய பள்ளிகளுக்குப் புதிய ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். அதற்கும் புதிதாகப் பெருந் தொகை தேவை. இவ்வாறு நியமிக்கப்படுகிற புதிய ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க இப்போதுள்ள பயிற்சிப் பள்ளிகள் போதமாட்டா. அதற்காகப் பயிற்சிப் பள்ளிகள் பல புதிதாகத் தொடங்கியாகவேண்டும். அதற்கும் பணம் ஏராளமாக இருந்தாக வேண்டும். பழைய பள்ளிகளில் உள்ள பழைய ஆசிரியர்களுக்கும் சரி, புதிய பள்ளிகளில் நியமிக்கப்படவேண்டிய புதிய ஆசிரியர்களுக்கும் சரி, இப்போது தரப்பட்டுவருகிற மிகக் குறைந்த ஊதியத்தையே இனியும் தந்து கொண்டிருக்க முடியாது. அவர்களுடைய ஊதியத்தை, கணிசமான அளவுக்கு உயர்த்தியே தீர வேண்டும். இத்தனைப் பணிகளுக்கும் பணம் ஏராளமாகத் தேவைப்படுகிறது. ஆனால் நமது அரசாங்கங்களோ எதற்கெடுத்-

தாலும் பணமில்லை என்கிற பல்லவியையே பாடிக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில், தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் பள்ளிகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்வதென்றால் அதற்கு எவ்வளவு பணம் செலவாகும்? எங்கிருந்து கிடைக்கும் அதற்குத் தேவையான பணம்? ஆகையால்தான் கூறுகிறோம். கொள்கையளவில் அந்த முறை சிறந்ததுதான் என்றாலும், இன்றைய நிலையில் அது சாத்தியமான செய்கை ஆகாது. ஏற்கெனவே இருந்துவருகிற பள்ளிகளை அரசாங்கப் பள்ளிகளாக மாற்றுவதற்குச் செலவழிக்கிற பணத்தை, புதிய ஆரம்பப் பள்ளிகள் பல தொடங்குவதற்குச் செலவழித்தால் கல்வியின்மை தொலையும். எல்லாப் பிள்ளைகளும் கற்றவர்கள் ஆவர். அப்படி எல்லாப் பிள்ளைகளும் கற்றவர்களான பிறகு, எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்கிற முயற்சியில் ஈடுபடலாம். ஆனால் இப்போது அது அவசியமில்லை. இன்றைய நிலையில், அந்தக் கொள்கை, வெறும் ஏட்டுச் சுரைதான். கறிக்குதவாது.

## அருமையான ஆலோசனை—அவசியமான ஏற்பாடு.

ஆந்திர மாநிலக் கல்வி நிபுணர் கமிட்டி, அந்த மாநில அரசாங்கத்திற்குத் தந்துள்ள மற்றோர் ஆலோசனை, நடைமுறைக்கும் ஏற்றது. உடனடியாகவும் செய்ய வேண்டியது. ஆரம்பப் பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பில் தேர்வு பெற்ற மாணவனைக் கூட, ஆறாவது வகுப்பில் சேர்த்துக் கொள்வதில்லை உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள். ஆரம்பப் பள்ளிகள் என்றால் அவை ஏதோ தரத்தில் குறைந்த கல்வி நிலையங்கள் போலவும், உயர்நிலைப்பள்ளிகள் மட்டும் திறமையில் தேர்ச்சி பெற்ற கலைமன்றங்கள் போலவும் ஆரம்பப் பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பை முடித்த மாணவன், உயர்நிலைப் பள்ளிகளின் ஆறாவது வகுப்பிற்கு ஏற்றவனாக இருக்க மாட்டான் என்பது போலவும், ஒரு தவறான கருத்து இப்போது நிலவி வருகிறது. எத்தனையோ முறை பார்த்திருக்கிறோம். ஆரம்பப் பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பை முடித்த மாணவனை மீண்டும் ஐந்தாவது அல்லது நான்காவது வகுப்பில் சேர்த்து விடுகின்றனர் சில உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள். இதனால், அந்த மாணவனுக்கு, ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் வீணாகிவிடுகின்றன. இன்றைய கல்வி முறையில் உள்ள அவசியமற்ற பல குழப்பங்களில் இதுவும் ஒன்று. ஏனோ தெரியவில்லை. நமது அரசாங்கங்கள், இன்றைய வரையில், இந்தக் குழப்பத்தைப் போக்க முனையவில்லை. ஆனால், ஆந்திர மாநிலக் கல்வி நிபுணர் கமிட்டி இந்தக் குழப்பத்தை ஒழிக்க வேண்டுமென்று அழுத்தந் திருத்தமாக அறிவித்திருக்கிறது. ஆரம்பப் பள்ளி ஒன்றில், ஐந்தாவது வகுப்பை, வெற்றிகா

மாக முடித்துவிட்டான் ஓர் மாணவன் என்று, அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியர் நற்சான்றிதழ் தந்துவிட்டால், வேறு பரீட்சைகள் ஏதுமின்றி, அந்த நற்சான்றிதழ் ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு, உயர் நிலைப் பள்ளியில் ஆறாவது வகுப்பில் அவன் சேர்க்கப்படவேண்டும் என்று, நிபுணர் கமிட்டி தெரிவித்திருக்கிறது. ஆந்திர அரசாங்கம் மட்டுமல்ல, சென்னை அரசாங்கமும் இந்த ஏற்பாட்டை உடனடியாக மேற்கொண்டாக வேண்டும். உயர்நிலைப் பள்ளியின் ஐந்தாவது வகுப்பை விட ஆரம்பப் பள்ளியின் ஐந்தாவது வகுப்பு, உண்மையிலேயே தரத்தில் குறைந்தது என்று அரசாங்கம கருதுமானால், தரத்தில் உள்ள வேறுபாட்டை நீக்கட்டும் இருவகைப் பள்ளிகளில் உள்ள ஐந்தாவது வகுப்புகட்கும் ஒரே வகைத் தரத்தை நிர்ணயிக்கட்டும். அதுதான் நேர்மையும் முறையும் ஒழுங்குமே தவிர, ஐந்தாவது வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஒருவனை, அவன் அப்படித் தேர்ச்சி பெற்றது, உயர் நிலைப் பள்ளியில் அல்ல, வேறோர் பள்ளியில் என்கிற காரணத்திற்காக, மேல் வகுப்பில் சேர்க்க மறுப்பது எந்த விதத்திலும் ஒழுங்காகாது. "ஆறாவது வகுப்பில் சேரத் தகுதி உடையவனா அல்லவா என்பதைப்பற்றி அறிய ஒரு பரீட்சை வைப்போம். அதில் அவன் தேறினால்தான் ஆறாவது வகுப்பில் அவனுக்கு இடம். இல்லையேல் இல்லை" என்று பேசுவது, ஆரம்பப் பள்ளிகளுக்குச் செய்யப்படுகிற மகத்தான துரோகமாகும். ஆந்திர மாநிலக் கல்வி நிபுணர் கமிட்டி இந்தத் துறையில் தன் சிந்தனையைச் செலுத்தித் தகுந்த தீர்ப்பை அளித்ததற்காக அவர்களுக்கு நம் நன்றி.

## கிளர்ச்சியும் பலித்தது—பயனும் கிடைத்தது

"இது ஜனநாயக சகாப்தம். இத்தகு சகாப்தத்தில் கிளர்ச்சி செய்பவர்கள்தான் பயன் பெறுபவர். கிளர்ச்சி செய்ய அஞ்சிக் கொண்டு, உண்மையை எடுத்துரைக்காமல் ஊமைகளாய்க் கிடப்பவர்கள், அவர்கள பக்கம் எவ்வளவுதான் நியாயம் இருந்தாலும், அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள்" என்கிற உண்மையை நாம் ஓயாமல் சொல்லி வருகிறோமல்லவா, அது எவ்வளவு நியாயம் என்பதை நிரூபிக்க இதோ மற்றுமோர் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சென்ற ஜனவரி மாதத்தில், சேலம் ஜில்லா போர்டு விசேஷ அதிகாரி, ஆரம்ப ஆசிரியர்களாக இருப்பவர்கள், பிராஞ்சுப் போஸ்ட் மாஸ்டர்களாக இருத்தலாகாது என்றும், இரு பதவிகளில் ஏதேனும் ஒன்றை அவர்கள் விட்டாகவேண்டும் என்றும், திடீர் உத்தரவு ஒன்றை வெடிகுண்டு போல் வீசினார். வீசியவுடனே, அது தவறு—இரு

பதவிகளிலும் ஆசிரியர்கள் இருக்கலாம்—போஸ்ட் மாஸ்டர் வேலை பார்ப்பதால் ஆசிரியர் தொழிலுக்கு இடையூறு ஏதும் ஏற்படாது—உத்தரவை உடனே வாபீஸ் வாங்கவேண்டும் என்று, நம் "ஆரம்பக் கல்வி"யில், நாம் கிளர்ச்சிக் குரல் எழுப்பியிருந்தோம். உத்தரவால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களும், அது போலவே, அரசாங்கத்திற்கு நிலைமையை விளக்கிக் கடிதங்கள் அனுப்பினர். கிளர்ச்சி, இப்போது, தன் பலனைத் தந்துவிட்டது. இரு பதவிகளிலும் ஆசிரியர்கள் இருக்கலாம் தவறில்லை—என்று அரசாங்கம் அறிக்கை பிறப்பித்து விட்டது. கிளர்ச்சி—கிளர்ச்சி—அதுதான் நம் குறைகளைத் தீர்க்கும் மாமருந்து. ஆசிரியத் தோழர்காள்! நெஞ்சில் நிறுத்திடுக இவ்வுண்மையை! உங்களுக்குள்ள குறைகளை அஞ்சாது உரைத்திடுக! பாடுபட்டால்தான் பலன் உண்டு பதுங்கிக் கிடந்தால் பரிதவிக்க வேண்டியதுதான்.

## கையிலே புண்! கண்ணாடி ஏன்?

பொதுவாக எல்லா ஆசிரியர்களும், சிறப்பாக ஆரம்ப ஆசிரியர்களும் எப்படிப்பட்ட குறைகளுக்கு உள்ளாகியிருக்கின்றனர்—அந்தக் குறைகள் தீர யாது செய்தல் வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் புள்ளி விவரங்கள் சேகரித்துத் தெள்ளத் தெளியக் கூறுவதற்காக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஒரு துணைக் குழுவை அமைத்திருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றி, ஆளும் கட்சியினர், இத்தனைக் காலத்திற்குப் பிறகாவது இவ்வளவு அக்கறை காட்டுவது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். காங்கிரஸ் கமிட்டிக்கு நம் வாழ்த்தும் நன்றியும் உரியனவாகுக ஆனால் ஓர் ஐயம். நோய் இன்னது என்பது தெரியாவிட்டால் அல்லவா அதனைக் கண்டறிய ஒரு டாக்டர் தேவை? ஆரம்ப ஆசிரியர்களுக்கு உள்ள 'நோய்' இன்னது என்பதுதான் எல்லோருக்கும் தெரிகிறதே!—வறுமை என்கிற நோய்!! இந்த நிலையில் அதனைக் கண்டறிய ஒரு துணைக் குழு எதற்காக? கைப் புண்ணைக் காணக் கண்ணாடி எதற்கு? நோய் இன்னது என்பது தெளிவாகத் தெரிகிறது. இப்போது தேவைப் படுவதெல்லாம் நோய் போக்கும் மருந்துதான். அதாவது ஊதிய உயர்வுதான். கமிட்டியை அமைப்பதும், புள்ளி விவரங்கள் தேடுவதுமல்ல இப்போது செய்யவேண்டிய செயல்கள். **"அடிப்படை ஊதியம் ரூபாய் 50. பஞ்சப்படி ரூபாய் 25. ஆக மொத்தம் மாத ஊதியம் ரூபாய் 75"** என்கிற நன் மருந்தை உடனே கொடுத்தாக வேண்டும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு. அதுதான் உடனடித் தேவை. அதனை அளிக்கட்டும் அரசாங்கம். அளிக்கும்படி செய்யட்டும் காங்கிரஸ் கமிட்டி.

# சிந்தனைக்கு விருந்து

## மழையோ மழை!

"என்னப்பா, உங்கள் ஊரில் மழை உண்டா?"

"மழையா? அதுதானே கிடையாது! உங்கள் ஊரில்?"

"அதே சோகக் கதைதான். ஆறு ஆண்டுகளாயிற்று நல்ல மழையைக் கண்டு!"

"அப்படியா? அடபாவமே ஆமாம். இப்படியே அடுத்த ஆண்டும் மழை பொழியாவிட்டால் நாம் என்ன செய்வது?"

"என்ன செய்வது? தலைமீது கை வைத்துக்கொண்டு அழ வேண்டியதுதான். வேறென்ன செய்யமுடியும் நாம? இனி ஆண்டவனைப் பார்த்து மழையை அனுப்பினால்தான் உண்டு"

இப்படிப்பட்ட உரையாடல்கள் நம் நாட்டில் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன.

தொடர்ச்சியாக மழை இல்லை யென்றால் நம் மக்களிடம் சோகமும் சோர்வும் தோன்றிவிடுகின்றன. வேதனையும் வாட்டமும் அவர்களைத் தஞ்சமடைந்துவிடுகின்றன.

படிப்பறிவற்ற பாமர மக்கள் மட்டுமல்ல, பல கலை பயின்ற பேரறிஞர்கள்கூட, இந்த நாட்டில், மழை இல்லை என்றவுடன், பஜனை செய்யுங்கள்—பிரார்த்தனை புரியுங்கள் என்கிற உபதேச காண்டத்தைத்தான் வாசிக்கின்றனரே தவிர வேறு உருவான திட்டம் எதையும் தீட்டிக் காட்ட முனைவதில்லை.

ஆனால் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில், மழை இல்லை என்றால், அங்குள்ள மக்கள் யாது செய்கிறார்கள் தெரியுமா?

விஞ்ஞானிகளை நாடுகிறார்கள். செயற்கை மழை நிபுணர்களிடம் ஆலோசனை கேட்கிறார்கள்.

தேவைப்பட்டபோது தேவைப்பட்ட பகுதிகளில் மழையைப் பொழிய வைக்கும் முயற்சியில் அங்கெல்லாம் பற்பல கம்பெனிகள் ஈடுபட்டுள்ளன.

செயற்கை முறையில் மழையைப் பொழியவைக்க இருவகை முறைகள் அங்கே கையாளப்படுகின்றன.

ஆகாய விமானத்திலேறி, மேகங்களைவிட உயரமாகப் பறந்து சென்று, சில்வர் அயோடட் என்னும் மருந்துப்பொடியை மேகங்கள் மீது தூவி, மேகங்களை இளகச் செய்து மழையாகப் பொழியவைப்பது ஒரு முறை.

விமானத்தின் துணை இல்லாமலே, நிலக்கரிப் புகையை உதவியாகக் கொண்டு, சில்வர் அயோடட்டை மேகங்களில் கலக்கச்

செய்து மழையை வரவழைப்பது மற்ேறார் முறை.

அமெரிக்காவில், செயற்கை முறையில் மழையை வரவழைப்பதில், டாக்டர் இர்விங் கிரிக் என்பவர், தலை சிறந்த திறமை படைத்தவராக இருக்கிறாராம்.

கனடா, ஸ்பெயின் முதலிய பல நாடுகள், தங்கள் வட்டாரத்தில் மழையைப் பொழியவைக்க, இவருடைய கம்பெனியின் உதவியை இப்போது நாடியிருக்கின்றனவாம்.

செயற்கை முறையில் மழையைப் பொழியவைக்கும் இம்முறை, நூற்றுக்கு நூறு பங்கும் வெற்றியைத் தருகிறது என்று சொல்லிவிட முடியாது. ஆனால் நூற்றுக்கு அறுபது அல்லது ஐம்பது பங்கு வெற்றி நிச்சயம் என்று தெரிகிறது.

சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட ஜில்லாவில் மழையைப் பொழிவிக்க முயற்சி செய்தால், மழை, வேறோர் ஜில்லாவில் பொழிந்துவிடுகிறதாம். மருந்தைத் தூவியபிறகு, பலமான காற்றடித்து, மேகங்கள் வேறு திசைக்கு விரைந்து சென்று அதன்பிறகு மழையாக மாறுவதுதான் இதற்குக் காரணமாம். இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கும், செயற்கை மழைமுறையை முழு வெற்றி உடையதாக மாற்றுவதற்கும் விஞ்ஞானிகள் பெருமுயற்சி புரிந்து வருகின்றனராம்.

எதிர்பார்க்கப்பட்ட இடங்களில் மட்டுமன்றி, வேறு சில இடங்களிலும் மழை பொழிந்துவிட்டதால், அந்த வேற்றிடங்களைச் சேர்ந்தவர்கள், எதிர்பாரா மழையின் காரணமாகத் தங்களுக்குப் பெருநஷ்டம் விளைந்துவிட்டது என்று கூறி, செயற்கை மழைக் கம்பெனிமீது நஷ்டஈட்டு வழக்குகள் தொடுக்கின்றனராம். இப்படிப்பட்ட வழக்குகள், அமெரிக்க நாட்டு நீதி மன்றங்களில் அடிக்கடி வருவதுண்டாம்.

இத்தகைய சிக்கல்களும் சங்கடங்களும் இல்லாமல், செயற்கை மழை முறையைச் சிறந்த தொன்றாக மாற்றுவதற்காக, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம், ஆராய்ச்சித் துறை ஒன்றை ஏற்படுத்தி, அதன் செலவுக்காக 5 லட்சம் டாலர்களை ஒதுக்கிவைத்திருக்கிறதாம்.

தினசரி இதழ்களிலிருந்து இந்தத் தகவல்களெல்லாம் நமக்குத் தெரிய வருகின்றன.

இங்கே, நாம், மழை இல்லை என்றவுடனே மனம் ஒடிந்து மூலையில் முடங்கி விடுகிறோம். பிரார்த்தனை—பிரார்த்தனை — அது தவிர வேறு வழி இல்லை என்று வேதாந்தம் பேசவும் தயாராகி விடுகிறோம். ஆனால், அங்கேயோ?

ஆராய்ச்சிகள் நடத்துகிறார்கள் —விஞ்ஞானத்தைத் துணைக்கு அழைக்கிறார்கள் — செயற்கை

முறையில் மழையை வரவழைக்கிறார்கள்—ஏராளமான அளவில் பயிர் விளையக் காண்கிறார்கள்.

ஓரளவு வெற்றியைத்தான் அவர்கள் பெற்றிருக்கிறார்கள்—உண்மை — ஆனால் அதனாலென்ன? — முழு வெற்றியை நோக்கி அவர்கள் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நாம்?

இந்தத் துறையில் இன்னமும் காலெடுத்தே வைக்கவில்லை. எல்லாம் எனையாளும் ஈசன் செயல்—அவன் அருள் இருந்தால் மழை கிடைக்கும் என்று பேசுவதோடு நமது முயற்சி முடிந்துவிடுகிறது இத் துறையில்.

முடியலாமா? நாமும் முயல வேண்டாமா மேல் நாட்டினரைப் போல? விஞ்ஞான ஒளி இங்கும் பரவவேண்டாமா? விடை கூற வேண்டாம்—சிந்தித்துப் பாருங்கள்.

## அணுச் சக்தி விளக்கு!

அணுச் சக்தி! இந்தச் சொல்லைக் கேட்டவுடன் எவருக்கும், பயங்கர விளைவுகளைக் கொண்ட அணுக் குண்டும், அதன் பிறகு வந்துள்ள ஜலவாயுக் குண்டும் தான் நினைவுக்கு வரும். ஆனால் அணுச் சக்தி, அணுக் குண்டு—ஜலவாயுக் குண்டு முதலிய அழிவுக் கருவிகளை உற்பத்தி செய்வதற்கு மட்டுமல்ல, மனித சமுதாயத்திற்கு அற்புதமான பல நன்மைகளையும் செய்ய முடியும். இப்போது எப்படி மின்சார சக்தி, மனித வாழ்க்கைக்கு வளமூட்டும் சக்தியாக ஒளிவீசித் திகழ்கிறதோ அதைவிட ஆயிரம் மடங்கு வசதிகளை, அணுச் சக்தி, உலகத்திற்குத் தர முடியும். இயந்திரங்களை ஓட்ட, விளக்குகளை எரிக்க, ரயில் வண்டிகளை இழுக்க, கப்பல்களை ஓட்ட, இன்னும் பலப்பல பணிகளுக்கும் பயன்படுத்த முடியும் அணுச் சக்தியை. அழிவுப் பணியில் இச் சக்தியை ஈடுபடுத்துவதற்காகக் கோடிக் கணக்கில் பணத்தை வீணாக்கும் உலக வல்லரசுகள், அந்தப் பெருந்தொகையை, ஆக்கப் பணியின் பக்கம் அன்புடன் திருப்பிவிட முயன்றால், உலகம் இன்பபுரியாகும். அணுச் சக்தி, மானிட வர்க்கத்தின் மகத்தான தொண்டனாகிவிடும். இப்போதுதான் இந்த வல்லரசுகள் தங்கள் கவனத்தை ஆக்கப் பாதையின் பக்கம் ஓரளவு திருப்பியிருக்கின்றன. நிலக்கரிச் சக்தியைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு மாறாக, அணுச் சக்தியைக் கொண்டு அதனை உற்பத்தி செய்கிற முயற்சியில் பிரிட்டன் இதுபோது ஈடுபட்டிருக்கிறது. இன்னம் மூன்றாண்டுகளுக்குள், அணுச் சக்தியால் தயாரிக்கப்பட்ட மின்சாரம், பிரிட்டனில் உபயோகத்திற்குக் கிடைத்துவிடுமாம். அப்போது பிரிட்டனில் அந்தச் சக்தியின் துணை கொண்டு எரிகிற விளக்குகளை அணுச் சக்தி விளக்குகள் என்று கூறலாமல்லவா?

# வடாற்காடு மாவட்ட
# ஆசிரிய மானேஜர்கள் & மானேஜர்கள் சங்கம், வேலூர்.
## 17-வது மாநாட்டின் நடவடிக்கைகள்.

---

9—4—'54 மாலை 4–30 மணிக்கு வேலூர், திரு. இலட்சுமண சாமி நகர மண்டபத்தில், திரு. இராவ்பகதூர், C. துரைசாமி ஐயர், B. A., B. L., அவர்கள் தலைமையில் 17–வது மாநாடு நடைபெற்றது. அது சமயம் சென்னை மாகாண தொடக்கக்கல்வி உதவி டைரக்டர் Dr. M. D. பால், M. A., M. Sc., Ed. D. (col.) அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார். அவ்வமயம் கீழ்க் கண்டுள்ள தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

## தீர்மானங்கள்.

1. செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் 62 வயது வரை வேலை செய்யலாமென்ற உத்தரவு 31—5—54 உடன் முடிவடைகிறது. இதை நீடித்திருக்க உத்தரவு அளிக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

2. மானேஜ்மெண்ட் கிராண்ட் 15 சதவீதம் கொடுப்பது தற்கால செலவினங்களுக்குப் போதாதாகையால், மேற்படி கிராண்டை 25 சதவிகிதமாவது உயர்த்த உத்தரவு அளிக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

3. உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசியலார் சம்பள விதத்திற்கு மேல் மானேஜ்மெண்டார் கொடுக்கும் அதிக சம்பளத்தை செலவு கணக்கில் (M. G.) சேர்க்க உத்தரவு அளிக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

4. உயர்நிலைத் தொடக்கப்பள்ளிகளில் வேலை செய்யும் சங்கீத ஆசிரியர்களுக்கு கிராண்ட் அளிக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

5. அரசியலார் நடத்தும் E. S. L. C. பொதுத் தேர்வில் தவறினவர்களுடைய மார்க் ஜாபிதாவைத் தெரிவிக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

6. சீனியர் ஆதாரக் கல்வி பாடசாலையில் வேலை செய்யும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 45–3–60–2–90 என்ற விகிதப்படி கொடுப்பது போல் ஜூனியர் ஆதாரக் கல்விப் பாடசாலையில் வேலை செய்யும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் கொடுக்கும்படி ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (64–ம் பக்கம் பார்க்க)

# சோவியத் ஆசிரியர்களின் வாழ்க்கையும் வேலையும்

ஏ. சொலொவ்யோவ்

*"தற்போது ஒரு ஆசிரியரிடமிருந்து நாம் பிரதானமாக எதிர்பார்ப்பது என்னவென்று என்னைக் கேட்டால், ஒரு புதுரக மனிதனை அவர் வளர்த்துக் கொடுக்க வேண்டுமென நான் பதிலளிப்பேன். நம் நாட்டில் சோஷலிஸ்ட் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு புதுரக மனிதன் உண்டாக்கப்பட்டு வருகிறான். மிகச் சிறந்த மானிட இயல்புகள் யாவும் இவனுக்கு ஊட்டப்பட வேண்டும்"—சோவியத் யூனியனின் சிறந்த அரசாங்க மேதையான எம். ஐ. கலினின், சோவியத் ஆசிரியர்கள் ஆற்றிவரும் புனித பணிபற்றி முன்பொரு சந்தர்ப்பத்தில் பேசும் பொழுது இவ்வாறு கூறினார்.*

*சகலருக்கும் உயர் நிலைப்பள்ளியில் பத்தாண்டு கால கல்வி அளிப்பதென்னும் திட்டம் வெற்றிகரமாய் நிறைவேற்றப்பட்டு வரும் சோவியத் நாட்டிலே, பள்ளி ஆசிரியர்கள் உயர்ந்த விஞ்ஞான ரீதியில் தமது வேலையைச் செய்வதற்கு சகல வழிகளிலும் ஊக்குவிக்கப் படுகின்றனர்.*

*சோவியத் ஆட்சி மலர்ந்த பின் ஒரு லட்சத்திற்கு அதிகமான புதிய பள்ளிகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் வெளிச்சம் நிறைந்த விசாலமான பள்ளி அறைகளும், சகலவித வசதிகளையுமுடைய படிப்பு அறைகளும், லாபிரடரிகளும், மற்றும் உடற்பயிற்சி நிலையங்களும், கூட்ட மண்டபங்களும், மாணவர் ஸ்தாபனங்களுக்கான அறைகளும், நூல் நிலையங்களும் உள்ளன. சோதனை சாகுபடி செய்வதற்கென பல பள்ளிக்கூடங்களில் தோட்டங்களும் இருக்கின்றன. செர்ரி பழங்களும் இதர கனி வகைகளும் இவற்றில் பயிரிடப் படுகின்றன.*

**சோவியத் ஆசிரியர்களுக்கு விஸ்தாரமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. கல்வி சம்பந்தமான முக்கிய பிரச்னைகள் யாவும் பள்ளி உபாத்தியாயர் கவுன்சில்களில் ஆசிரியர்களாலேயே முடிவு செய்யப்படுகின்றன. இந்த கவுன்சில்களின் தீர்மானங்களுக்கு அவற்றின் உறுப்பினர்களான ஆசிரியர்கள் மட்டுமின்றி, பள்ளிக்கூட டைரக்டர்களும் கட்டுப்பட்டவர்களாவர்.**

*ஆயிரத்திற்கு மேற்பட்ட ராஜ்ய சர்வகலாசாலைகளிலும், உபாத்தியாயர் கல்லூரிகளிலும் பயிற்சி பெற்று பட்டம் பெற்றவர்களே சோவியத் பள்ளிகளில் ஆசிரியர்களாக வேலை செய்கிறார்கள். 1953-ல் ரஷ்ய சமஷ்டியி*

லுள்ள கல்வி நிலையங்களில் மட்டும் சுமார் 1,00,000 இளம் ஆசிரியர்கள் பட்டம் பெற்று வெளி வந்தனர். இவர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட்டது. தற்போது சோவியத் யூனியனிலுள்ள 2,20,000 பள்ளிக்கூடங்களில் 16 லட்சம் ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள்.

சிறுவர்களுக்குக் கல்வியறிவூட்டி வளர்க்கும் பொழுதே, சோவியத் பள்ளி ஆசிரியர்கள் தங்கள் சொந்த அறிவையும் இடைவிடாமல் செழுமைப் படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஐந்தாண்டுகள் வரை பள்ளிக்கூடத்தில் வேலை செய்துள்ள ஒரு ஆசிரியர் அல்லது ஆசிரியை, உயர்தரப் பயிற்சி அளிக்கும் இன்ஸ்டிடூட்டில் சேர்ந்து ஓராண்டு பயிற்சி பெற்று தன் யோக்கிய தாம்சத்தை உயர்த்திக் கொள்கிறார். இத்தகைய இன்ஸ்டிடூட்டுகள் ஒவ்வொரு பிராந்தியத்திலும், பிரதேசத்திலும், சுய ஆட்சிக் குடியரசிலுமுள்ளன. இந்த ஓராண்டுப் பயிற்சியின்போது அந்த ஆசிரியர் சோவியத் விஞ்ஞானத்தின் மிகச் சமீபகால சாதனைகள் பற்றியும், சிறந்த பள்ளிக்கூடங்களின் அனுபவம் பற்றியும், சிறந்த ஆசிரியர்கள் கையாண்டுவரும் போதனை முறைகள் பற்றியும் நன்கு தெரிந்து கொண்டு விடுகிறார். உன்னத விஞ்ஞானிகளும், போதனை முறை நிபுணர்களும், மற்றும் கல்வி இலாகா போர்டுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் இவர்களுக்குப் பிரசங்கங்கள் நடத்துகின்றனர். இந்த ஓராண்டு பயிற்சியின் போது ஆகும் செலவுகள் யாவற்றையும் அரசாங்கமே மேற்கொண்டு விடுகிறது.

தேசம் பூராவிலும் வருடம் இருமுறை—பள்ளி ஆண்டின் தொடக்கத்திலும் நடுவிலும்—பள்ளி ஆசிரியர்களின் ஜில்லா மகாநாடுகளும் நகர மகாநாடுகளும் நடத்தப்படுகின்றன. இந்த மகாநாடுகளில் பள்ளிகளில் நடந்துள்ள வேலைகளின் பலாபலன்கள் தொகுத்துரைக்கப்படுகின்றன; ஆசிரியர்கள் தங்கள் அனுபவத்தைப் பரிமாறிக்கொள்கிறார்கள்; தங்கள் வேலைகளுக்குக் குந்தகமான குறைபாடுகள்பற்றி விமர்சனம் செய்கிறார்கள்; உடனடியான வருங்காலத்தில் தாங்கள் செய்து முடிக்க வேண்டிய வேலைகளையும் வரையறுத்துக் கொள்கிறார்கள். சமீப ஆண்டுகளில் ஆசிரியர்கள் வாசகக் கூட்டங்கள் எல்லா ஆசிரியர்களுக்கும் பொதுவானதாக்கப்பட்டுள்ளன. இந்தக் கூட்டங்களில் பள்ளி வேலை சம்பந்தமான பல திறப்பட்ட தத்துவார்த்தப் பிரச்னைகள் பற்றியும் நடைமுறை பிரச்னைகள் பற்றியும் ஆசிரியர்கள் ரிப்போர்ட்டுகள் சமர்ப்பிக்கின்றனர். உபாத்தியாய விஞ்ஞானங்களின் அக்கடெமி இவற்றைப் பொதுமைப்படுத்தி தனித்தனி திரட்டு நூல்களாக வெளியிடுகிறது.

கடிதப் போக்குவாத்து மூலம் உபாத்தியாயக் கல்வி போதிக்கும் முறை சோவியத் யூனியனில் விரிவாக வளர்ந்து வருகிறது. இம் முறையின் வாயிலாக எந்த ஆசிரியரும் தன் அன்றாட பள்ளி வேலைகளுக்குத் தடங்கலின்றி உயர்தர உபாத்தியாயக் கல்வி பெறுவது சாத்தியமாகிறது. மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட ஆரம்ப ஆசிரியர்கள் இவ்விதம் கடிதங்கள் மூலம் பயிற்சி பெற்று வருகிறார்கள். பள்ளிக்கூட நிர்வாகங்களும் கல்வி இலாகா போர்டுகளும் பள்ளி ஆசிரியர்கள் கடிதங்கள் மூலம் பயிற்சி பெறுவதற்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்கின்றன. கடிதங்கள் மூலம் கல்வி பெற்ற ஆசிரியர்கள், ஆசிரியர் கல்லூரிகளில் பட்டம் பெற்று ஆசிரியர்களாவோருக்குள்ள அதே உரிமைகளைப் பெற்றுள்ளனர். அவர்களிடம் உயர்ந்த வகுப்புகளும் ஒப்படைக்கப்படுகின்றன.

சோவியத் ஆசிரியர்களின் வேலை இன்ஜினியர்கள், தொழில் நுணுக்க நிபுணர்கள் ஆகியோரின் வேலையுடன் சம அந்தஸ்துடையதாகக் கருதப்பட்டு, அதே அளவு சம்பளமளிக்கப்படுகிறது. உயர் வகுப்பு ஆசிரியரின் சம்பளம் (ஞாயிற்றுக் கிழமைகளைத் தவிர்த்து) மூன்று-மணி-நேர வேலை நாள் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. ஆரம்ப வகுப்பு ஆசிரியரின் சம்பளம் நான்கு-மணி-நேர வேலை நாள் அடிப்படையில் கணக்கிடப் படுகிறது. ஐந்தாண்டு வேலை செய்தபின் ஒரு முறையும், பின்னர் பத்தாண்டுகளுக்குப்பின் ஒரு முறையும் ஆசிரியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்படுகின்றன. தலைமை ஆசிரியர்களும் காப்பி புத்தகங்கள் திருத்தும் ஆசிரியர்களும் கூடுதலாக சம்பளம் பெறுகின்றனர். சோவியத் ஆசிரியர்கள் ஆண்டுதோறும் சம்பளத்துடன் இரண்டு மாத கோடை விடுமுறை பெறுகின்றனர். அவர்களுக்குக் கிடைக்கும் லீவில் உயர்தரப் பயிற்சிக்கான கல்லூரிப் படிப்பிற்குஅவர்கள் செலவிடும் காலம் சேர்க்கப் படுவதில்லை.

சாதாரணமாய் சோவியத் பள்ளி ஆசிரியர்கள் யாவரும் ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்களாவர். இந்தச் சங்கம் ஆசிரியர்களுக்குத் தினந்தோறும் கலாச்சார வசதிகளும் ஓய்வு வசதிகளும் செய்து கொடுப்பதற்குப் பாடுபடுகிறது. உதாரணமாக, ரஷ்ய சமஷ்டி ஆசிரியர்கள் சங்கம் தேசத்தின் சிறந்த தேக ஆரோக்கிய ஸ்தலங்களில் 30-க்கு மேற்பட்ட சானட்டோரியங்களையும் ஓய்வு எடுக்கும் இல்லங்களையும் நடத்தி வருகிறது. இந்த நிலையங்களிலும் இதர பல நிலையங்களிலும் ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான ஆசிரியர்கள் இடம் பெருகிறார்கள். மேலும் தொழிற் சங்க ஸ்தாபனமும் இலவசமாகவோ அல்லது 70 சதமான கழிவுடனோ,

சானெட்டோரியங்களிலும் ஓய்வு இல்லங்களிலும் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறது. நோய் வாய்ப்பட நேர்ந்தால் ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தின் சமூக இன்ஸ்சூரன்ஸ் நிதியிலிருந்து முழுச் சம்பளம் அளிக்கப்படுகிறது.

வலைப் பின்னல்போல் நாடெங்கும் ஆசிரியர்கள் விடுதிகள் (கிளப்கள்) நிறுவப்பட்டுள்ளன. பள்ளி ஆசிரியர்கள் இவற்றில் புதிய சினிமா படங்கள் பார்ப்பதற்கும் கலா நிகழ்ச்சிகளும் பிரசங்கங்களும் கேட்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர்கள் இங்கே எழுத்தாளர்களையும் விஞ்ஞானிகளையும் சந்தித்துப் பேசுகிறார்கள். அமெச்சூர் கலா கோஷ்டிகளில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். அல்லது, படிப்பதற்காக மாலைப் பொழுதை செலவிடுகிறார்கள். சோவியத் யூனியனைச் சேர்ந்த எல்லாக்குடியரசுகளிலும் பள்ளி ஆசிரியர்களுக்கென அவரவர் தாய்மொழியில் ஆசிரியர் பத்திரிகைகளும், மற்றும் கல்வி, சிறுவர் வளர்ப்பு சம்பந்தமான பிரசுரங்களும் வெளியிடப்படுகின்றன.

நீண்டகால சேவைக்காகவும் குற்றங் குறையற்ற ஊழியத்திற்காகவும் பள்ளி ஆசிரியர்களுக்கு சோவியத் யூனியன் பட்டங்களும் பதக்கங்களும் வழங்குகிறது. தலைசிறந்த ஆசிரியர்களுக்கு 'போற்றற்குரிய பள்ளி ஆசிரியர்' என்ற பட்டம் வழங்கப்படுகிறது. 25 ஆண்டுகள் வரை பள்ளியில் வேலைபார்த்துள்ள ஆசிரியர்களுக்கு அதிகப்படியான பென்ஷன் அளிக்கப்படுகிறது. இத்தகைய ஆசிரியர்கள் தொடர்ந்து பள்ளியில் வேலை செய்த போதிலும் இந்த பென்ஷன் தொகை பூராவையும் அரசாங்கம் கொடுத்து வருகிறது.

கிராமங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு சோவியத் சர்க்கார் கூடுதலான பல்வேறு வசதிகளையும் சலுகைகளையும் அளித்துள்ளது. உதாரணமாய், சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள விரும்பும் ஆசிரியருக்கு அரசாங்க அதிகாரம் வகிக்கும் ஸ்தல ஸ்தாபனங்கள் அவருடைய சாஸ்வத உபயோகத்திற்கு இலவசமாக மனைக்கட்டும், மிகவும் சாதகமான நிபந்தனைகளுடன் நீண்டகாலத் தவணைக்கு (10 ஆண்டு காலத்திற்கு) கடனும், வீடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களும், போக்குவரத்து வசதிகளும் கொடுத்துதவுகின்றன. வீடுகளுக்கு அடிப்படையான ரிப்பேர் செய்வதற்கும் கடன்கள் வழங்கப்படுகின்றன. இதன்னியில், கிராமப் பள்ளிக்கூடங்கள் யாவும் அரசாங்க செலவில் வீடுகள் கட்டி, அவற்றை இலவசமாக ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்றன. இந்த வீடுகளுக்குத் தேவையான பொதுநல சேவைகளும் அரசாங்க செலவில் செய்து கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக, மாஸ்கோ பிராந்தியத்தைச் சேர்ந்த கிலியாஸ்

மாவிலுள்ள உயர்நிலைப் பள்ளியை எடுத்துக்கொள்வோம். கூட்டுப்பண்ணை விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த 700 சிறுவர்கள் இதில் படிக்கிறார்கள். இதில் 32 ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் பத்துபேர் அரசாங்க செலவில் சொந்த வீடுகள் கட்டிக்கொண்டு அவற்றில் வசிக்கிறார்கள். மற்றவர்கள் யாவரும் அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் சொந்தமான வீடுகளில் வசிக்கிறார்கள்.

சோவியத் ஆசிரியர்களின் ஆக்க வேலைகள் பள்ளிக்கூடத்துடன் நின்று விடுவதில்லை. நகரங்கள், கிராமங்களின் கலாச்சார, கல்வி வேலைகளிலும், மேலும் அவற்றின் பொது வாழ்வின் சகல துறைகளிலும் அவர்கள் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். ஆசிரியர்களில் பெரும் பகுதியினர் அரசியல், விஞ்ஞான அறிவைப் பரப்புவதற்கு ஆங்காங்கு இயங்கும் கழகங்களில் உறுப்பினர்களாக செயலாற்றுகின்றனர்; விஞ்ஞானம், அரசியல், கல்விபோதனை ஆகியவை சம்பந்தமான விஷயங்கள் குறித்து அவர்கள் பொது மக்களிடையே தொடர்ச்சியாக பிரசங்கங்களும் ரிப்போர்ட்களும் செய்கின்றனர். பல ஆசிரியர்கள் ஸ்தல சோவியத்துகளுக்கும், யூனியன் குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்துகளுக்கும், அகில-யூனியன் சுப்ரீம் சோவியத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்களாகப் பணிபுரிகின்றனர்.

சோவியத் நாட்டில் பள்ளி ஆசிரியர் போற்றிப் புகழப்படும் எல்லோராலும் கௌரவிக்கப்படும் சோவியத் பிரஜையாக விளங்குகிறார். இளந் தலைமுறையினரைப் பராமரித்து வளர்ப்பதற்கு பள்ளி ஆசிரியர்கள், எடுத்துவரும் புனித முயற்சிகள் அரசாங்கத்தினிடமிருந்தும், சோவியத் மக்கள் அனைவரிடமிருந்தும் இடைவிடாமல் ஆதரவு பெற்று வருகின்றன.

(சோ. நா.)

---

# பொன் மொழிகள்

காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது. கலை நிலைத்து நிற்கிறது.

— லாங் பெல்லோ.

இரும்புபோன்ற மனிதனைப் புடமிட்டு உருக்காக்கும் அக்கினியே பெண்.

— ஷா.

# செல்லம்

"சுவாசு"

'செல்லம்' என்றே சில குழந்தைகளுக்குப் பெயர். பிள்ளைகளைச் செல்லமாக வளர்க்கலாமா. அதனால் நன்மையா? தீமையா—எது பெரிதும் உண்டாகிறது என்பது பற்றிச் 'சுவாசு' வாதிக்கிறார். இது சிந்திக்கத்தக்க கட்டுரை. குழந்தை வளர்ப்பைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உலவி வருகின்றன. மனம்போலக் குழந்தைகளை விட்டுவிடவேண்டும்; அவர்கள் மனோ தர்மம் நன்கு வளர உதவவேண்டும். கண்டிப்பதும், இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று தடை உத்தரவு பிறப்பிப்பதும் அவர் தம் மனோ வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் பாதகமாகும் என்பது சிலர் கூற்று. வேறு சிலர் அவர் தம் மனப்போக்கிலேயே விட்டு அவர் தாமாகவே நல்லன, தீயன பிரித்து அனுபவத்தில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கூறுவர். மற்றுஞ் சிலர் குழந்தைகள் மனம் போல் விடுவது தவறு; அறியாப்பிள்ளைகளுக்கு நம் அனுபவத்தினுலும், அறிவினுலும் அறிந்தவற்றைக்கூறி நல்லன செய்யச் செய்து தீயவற்றை விலக்கவேண்டும் எனச் சொல்லுவர். ஆனால் ஒருண்மை நாம் கூறலாம். மனம்போல் வளரும் குழந்தை மிக்க அற்புதச் செயலாற்றும் தெய்வீக ஆற்றல் படைத்தவனாக ஆயினும் ஆகலாம்; அவ்வாறன்றி அதற்கு மாறாக மிக்க கொடியவனாக மாறினும் மாறலாம். இவ்வாறன்றிக் கட்டுப்பாட்டுடன் பெரியோர் மொழிப்படி நல்லன, தீயன பிரித்துணர்ந்து நடக்கும் பிள்ளைகள் நடுத்தரப் பண்பும் வாழ்வும் பெறுவது உறுதிதான்.

[ஆசிரியர்.]

"குழந்தையிலிருந்தே ரொம்பச் செல்வமாக வளர்ந்தவன், உடம்பை வளைக்கக்கூட அவனுக்குத் தெரியாது என்று தனது பேரனைப் பற்றி பெருமைபட்டுக் கொள்ளும் பாட்டியையும், மகனைப் பற்றித் தம்பட்டமடித்துக் கொள்ளும் தாயையும் நாம் கண்டிருக்கிறோம்.

இந்தச் 'செல்லம்' என்பது சிலரது வாழ்க்கையில் எத்தகைய புரட்சிகரமானதொரு பலனை உண்டாக்கிவிடுகிறது என்பதனை ஆராயும்போது, அது எத்தகைய கெடுதலானது என்பதனையும் அறிகிறோம். குழந்தைகளைச் 'செல்லம்' கொடுத்து வளர்ப்பதினால் சில சமயங்களில் அதிக

மானதொரு கெடுதலும் நேர்வதில்லை. ஆனால் பல சமயங்களில் அதனால் கெடுதலே சம்பவிக்கிறது.

செல்லம் கொடுக்கப்பட்டு வளர்ந்த காரணத்தினால் கெட்டுப்போன ஒரு பையனைப்பற்றி நமது பாட்டி வேடிக்கையாக ஒரு கதைகூடச் சொல்வதுண்டு.

"ஒரு தாய் தன் மகனை மிகவும் செல்லமாக வளர்த்தாளாம். பையன் வகுப்பில் படிக்கும்போது, தனது பக்கத்துப் பையனின் 'பல்பத்தை' அவனறியாமல் திருடிவந்து விட்டானும். தாய் கண்டிக்கவேயில்லையாம். பையனுக்கு இது இன்னும் தூண்டுகோல்போல ஆயிற்றும். பிறகு அவன் வகுப்பிலிருந்து பென்சில், பேனா, புத்தகம்—என்று திருட ஆரம்பித்துவிட்டானும். தாய் தன் செல்ல மகனை அத்தருணத்திலும் ஒன்றும் கூறவில்லையாம். பையன் வளர்ந்து பெரியவன் ஆனதும் பெரிய திருட்டுகளில் அகப்பட்டு ஆறு மாதம் சிறைவாசம் செல்ல நேர்ந்ததாம். தாயும் சேயும், அப்போதுதான் தங்களது தவற்றை உணர்ந்தார்களாம். 'நீ என்னை இளவயதிலேயே கண்டித்துத் திருத்தி நல்ல வழியிலே செலுத்தியிருந்தால் எனக்கு இன்று இக்கதி நேர்ந்திருக்குமா? என்று மகன் மனம் நொந்தானும்.' இந்தக் கதை ஒருபுறமிருக்கட்டும்.

தாய்மார்களும், பாட்டிமார்களும் குழந்தைகளுக்குச் செல்லங்கொடுக்கக் காரணமென்ன? அதனால் வரும் கேடுகள் எத்தனை? என்பதனை நோக்குவோம்.

செல்லம் என்பதனை ஒருவித "சலுகை" என்றே கூறலாம். இது சிறப்பாக பாட்டிமார்களால் தான் கொடுக்கப்படுகிறது.

குழந்தைகளுக்கு அவை விரும்பும் பொருள்கள் எல்லாவற்றையும் வாங்கிக்கொடுத்துவிடுவது, அவர்கள் விரும்பும்போதெல்லாம் தின்பதற்குப் பண்டங்களைக் கொடுத்துவிடுவது, தப்பான வழியில் சென்றால், அதைத் தடுக்காமல், அவர்கள் போன போக்கிலேயே விட்டுவிடுவது, போன்றவைகளைச் "செல்லத்தின்" சிறப்பான சாராம்சமாகக் கொள்ளலாம்.

குடும்பத்தில் நீண்ட நாளாகக் குழந்தைச் செல்வமே இருந்திருக்காது. அப்போது ஓர் குழந்தை பிறந்தால் அதற்குச் செல்லங்கொடுத்து வளர்ப்பார்கள். ஒரு பெண்ணிற்குப் பெண் குழந்தைகளாகவே பிறந்து கொண்டிருக்கும். அப்போது ஒரு ஆண் மகவு பிறந்தால், அக்குழந்தையைச் செல்லமாக வளர்ப்பார்கள். அல்லது இதற்கு நேர்மாருக இருந்து ஒரு பெண் குழவி பிறந்தால் அதற்குச் செல்லங் கொடுத்து வளர்ப்பர்.

இதைப்பற்றிக் கேட்டால், "நன்னயிருக்குடி நீ சொல்றது.

நானும் என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணினதிலிருந்து நாலு வருஷமாக ஒரு குழந்தை பிறக்குமா—பிறக்குமான்னு காத்திண்டுருக்கேன். ஆசைக்கு ஒரு பேரன்னு பிறந்திருக்கான். செல்லம் கொடுப்பதற்கென்னடி குறைச்சல்?" என்று நறுக்குத் தெறித்தாற்போல விடை கூறுவாள் பாட்டி.

செல்லம் கொடுப்பதினால் முதலிலே குழந்தைகளுக்குப் பிடிவாத குணம் அதிகமாகிறது. பிறகு வாசலில் எந்தப் பொருளைக் கண்டாலும், "அதை வாங்கிக்கொடு" என்று முரண்டு பிடிக்கும். பக்கத்துவீட்டுப் பிள்ளைகளிடம் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டு நிற்கும். எங்குச் சென்றாலும் தூக்கிச் செல்லும்படி அழும். பிடிவாதம் பிடிக்கும். கண்டகண்ட வேளைகளில், கண்டகண்ட பண்டங்களைத் தின்னும். முரட்டுக் குணமும், பிடிவாதமும் குழந்தைகளிடம் இளமையிலேயே முளைத்துவிடும். நாளாவட்டத்தில் பெற்றோர்க்கும் உறவினருக்கும் அடங்காத பிள்ளையாகி, நான்கு பேரிடம் கெட்டவனென்ற, பட்டப் பெயர் வாங்கி, பெற்றோர்களுக்கும் இழிசொல் தேடிக்கொடுக்கும்.

சிறப்பாகப் பெண் குழந்தைகளுக்கு செல்லமே கொடுத்து வளர்க்கக்கூடாது. இல்லெனில், பெண்களின் பண்புக்கே சிறப்பான நாணம், அடக்கம் முதலியவை போய்விடும். அது பிற்காலத்தில், அவர்கள் குடும்ப வாழ்க்கை ஏற்று நடத்தும் போது பெரும் இடையூறாக வந்து நிற்கும்.

சிலருக்கு இப்படிப்பட்ட பலன் ஏற்படாவிட்டாலும், 'சோம்பல்' குணம் ஏற்பட்டுவிடுகிறது. ஒரே பெண்ணாயிற்றே என்று தாய் தன் பெண்ணை எந்தக் காரியமும் செய்யவிடமாட்டாள். தானே எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு பெண்ணைச் சும்மா இருக்கச் சொல்வர். "நன்றாக இருக்கிறது. இருந்திருந்தும் ஒரே பெண், அவள் காரியம் செய்வதாவது? கிழங்கு கணக்காக நான் இருக்கிறேன்" என்பது அவர்களது வாதம்.

இதனால் பெண்களுக்கு எந்த வேலையையும் சுயமாகச் செய்வதற்கேற்ற தன்னம்பிக்கை குன்றிவிடுகின்றது. புக்ககத்தில் சென்றதும், மாமியாரிடமும், நாத்தனாரிடமும் இடர்ப்படும் இழி நிலை உண்டாகிவிடுகிறது.

ஆண்களுக்கும், செல்லத்தினால், 'சோம்பல்' ஏற்பட்டு விடுவதுண்டு. அதன் பலன் பள்ளி வாழ்க்கையில் 'மக்கு' என்ற பேரெடுப்பதாகும். பெரியவர்களானதும், தொழில் செய்கையில் இதே சோம்பல் குணம் குறுக்கிடுகிறது. வேலையைச் சரிவர முடிக்க இயலாமல் 'ஆபீஸரிடம்' கெட்ட எண்ணத்தை உண்டாக்கிவிடுகிறார்கள். முதலில்

கூறியதுபோல், பாட்டி தனது பேரனைப்பற்றிப் பெருமைகொள்வதில் பயனில்லை,

அருமையான, பேரனையிற்றே- பேத்தியாயிற்றே என்று செல்லம் கொடுக்கப்போய் அது அவர்களது எதிர்கால வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையையே தடுத்துவிடுவது எத்தகைய பயங்கரமானது!

குழந்தைகளுக்குச் சிறிதளவு செல்லங்கொடுக்க வேண்டியது தான். இல்லாவிட்டால், 'பயம்' என்பது அவர்களிடம் சூழ்ந்து விடும். ஆனால் கொடுக்கும் சலுகையின் அளவு மிதமிஞ்சித்தான் போகக்கூடாது. எந்தச் சமயத்தில் செல்லங் கொடுக்கலாமோ அந்த இடத்தில் கொடுக்கவேண்டும்.

வேளாவேளைக்குக் குழந்தைகளுக்கு, குறைக்காமல் தகுந்த அளவு உணவு கொடுக்கலாம். சுத்தமான நல்ல உடைகளைக் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு அழகாக அலங்காரம் செய்து, மாலை வேளைகளில் மனதுக்கு ரம்மியமான இடத்திற்கு உலாவ எடுத்துச் செல்லலாம்.

சத்து நிறைந்த பழங்களைத் தரலாம். எப்போதாவது 'பிஸ்கோத்து' போன்ற பண்டங்களை வாங்கிக் கொடுக்கலாம். படிக்கும் பருவம் வந்ததும் அவர்களது பொழுது போக்குக்கேற்ற அறிவு பயக்கும் புத்தகங்கள், செய்தித்தாள்கள் முதலியன கொடுக்கலாம்.

பெண்களுக்கும், ஊசி, நூல் போன்றவை கொடுத்து ஓய்வு நேரங்களில் கைத்தொழில் கற்கச் செய்யலாம். வீட்டு வேலைகளில் பங்குபெறச் செய்து, அனுபவம் பெறச் செய்யலாம்.

இது மாதிரியானவைகளினால் கேடொன்றுமில்லை. குழந்தைகள் சுறுசுறுப்புடன், அறிவுள்ள குழந்தைகளாக வளரும். குடும்பத்திலும் மகிழ்ச்சி பரவும்.

அவர்கள் தப்பான வழியிலே சென்றால் "நீ செல்வது தவறான வழி. அது கெடுதல் உண்டாக்கும். ஆகையால் நீ அப்படிச் செய்யக்கூடாது" என்று கண்டித்து நல்ல பாதையிலே அவர்களைச் செலுத்த வேண்டும்.

இப்படிச் செய்வதனால் தாய்மார்களுக்கோ, பாட்டிமார்களுக்கோ தனது குழந்தைகளிடம் அன்பில்லை என்று சொல்லிவிட முடியுமா?

அவர்களை நல்வழியில் திருத்துவதுதான் பெற்றோர்களின் தலையாய கடமையுங்கூட. இதைத் தாய்மார்கள் உணர்ந்து நடக்க வேண்டும்.

(சௌபாக்கியம்)

# ஆசிரியர் அறிவைப் பெருக்குவதன் அவசியமும்,—வழிகளும்

[N. R. ஜெகநாதன், ஆசிரியர்.]

இவ்வுலகின்கண் இற்றைய நாடு, நன்முறையில், நீதிநெறி தவறாமலும், நல்லொழுக்க சீலர்களாயும், பிறமக்கள் விரும்பும் முறையிலும் நாடு நவிலவும், பசிப்பிணியைப்போக்கவும், வறுமைப் பிணி அகலவும் வேண்டுமாயின் கற்றறிந்த அறிவாளிகள் வேண்டும் என்பது மிகையன்றோ!

உலகமெனும் இருள்பாதையில், தங்குதடையின்றி நடக்க, அறிவு எனும் துணைவன் வேண்டுவது அவசியம். அவ்வித அறிவை அளிப்பவன் ஆசிரியன் ஒருவனே! இறைவனைவிட முதல் இடம் பெறவேண்டியவன் யார் என்ற வினவுக்கு தமிழ்ப்பாட்டி ஔவையார், சீரிய முறையில் விடை பகர்ந்துள்ளதை நாம் யாவரும் கண்டது கண்கூடு. இறைவன் மக்களைப் படைத்து மண்ணுலகிற்கு அனுப்புகிறார் எதற்கு! அம்மக்கள் நீதியிலும், நேர்மையிலும் நின்று, பொருளீட்டியும், அதனை ஏனையோர்க்கு ஈந்தும், தான் அதுபாலாக கிடைக்கும் நற்புகழினை பெறுகிறான். பின் வீடு என்னுமிடத்தை அடைவதற்கு ஏற்ப திறவுகோலையும் பெற்று, தன்னில்லம் பெற்று பெருமிதத்துடன் வாழ பிரியப்படுகிறான். ஆனால் மக்களில் இம்முறையில் நடப்பது ஒரு சிலரே. பலனையும் பயிற்றுவிக்க பாடுபடுகிறான் ஆசிரியன். ஆசிரியன் நேர் முறையில் கற்பிப்பதனால், பெரும்பாலோர் நல்லொழுக்க சீலர்களாய் விளங்க முடிகிறது. ஆசிரியன் மக்களிடத்தில் காணும் அஞ்ஞானமெனும் இருளைப் போக்கி, மெய்ஞானமெனும் சுடரை ஏற்றி, வாழ்க்கையெனும் பாதையில் சீரிய முறையில் செல்ல வழித் துணையைச் செய்கிறான்.

இவ்வித ஆசிரியர் குடும்பம் மூன்று பிரிவாகப் பிரிந்து விவசாயம் என்னும் தொழிலை நடாத்த, விவசாயத்தின் பாகுபாடுகளை பிரித்து, விவசாயியின் மக்கள் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக்கொண்டு, அத்தொழிலின் முழுப் பலனை அடைவர். நாம் இங்ஙண் நிகழப்படுவதாகிய அறிவு பெருக்கமெனும் தொழிலை செய்து அதன் இறுதி பலனை அடையவேண்டும். ஒரு விவசாயியின் மக்கள் அறிவு திறமைக்கேற்ற வேலைகளை செய்வது போன்று, ஆசிரியர்களாக போகின்றவர்கள், தாம் பெற்ற கல்வித் திறனுக்கேற்ப, அறிவு பெருக்கத்துறையில் தனக்கேற்ற பாகத்தை எடுத்துக்கொண்டு தன் தொழிலை செய்து வருகின்

றனர். இவ்வித ஆசிரியர்கள் மூன்றையே **துவக்க, நடு, உயர்நிலை கலாசாலை** என நான்கு குழுவினர்களாய்பிரிந்து, தனக்கேற்ற பாகத்தை எடுத்துக்கொண்டு நடிக்கின்றனர். இவ்வித சிறந்த தொழிலை ஏற்றுக்கொண்ட ஆசிரியர்கள் எங்ஙனம் இருக்க வேண்டு மென்பதைக் கூறவும் வேண்டுமோ! மக்களின் நல் வாழ்வைச் சித்தரித்து, சீர்வளம் பொருந்தியதாக செய்பவன் யார் என்று வினவை விளிப்பின், தங்குதடையின்றி, மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஓடிவரும் நீரைப்போலவும், மின்னொளி போலவும், உடன் பதில் வருமாம், 'ஆசிரியன்' என்ற அமுத மொழி.

இவ்வித, இனிய ஆசிரியர்கள் தங்களது அறிவு குன்றாது, தன் வயது காலம் படிப்படியாக சேர்வதுபோன்று, ஒவ்வொரு நாளும் தன் அறிவை விருத்தி செய்து கொள்ளவேண்டு மென்பது அவசியம். இவ்வித ஆசிரியர் குடும்பத்தில் துவக்க அடிப்படை குடும்பமான (சிறப்பாக) துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் தங்களது அறிவை எங்ஙனம் சேமிக்கலாம் என்பதே இவண் கூற வந்த சிறப்பு நோக்கமும், இக் கட்டுரையின் தலைப்புமாகும் என்பதை இதைக் கண்ணுறும் நேயர்கள் அறியவேண்டும்.

**"பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையது"** என்பது போன்று, காலத்திற்கேற்ப தன் அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டும். அவசியம் ஒவ்வொருவரும் புத்துணர்வு பெற்று, ஒவ்வொரு நாளும் பொன்னாளாகக் கருதி, காலத்திற்கேற்ப அறிவை சேமிக்கவேண்டும். தங்களது அறிவு முனை செவ்வனே கூர்மை பெற வேண்டிய ஆயத்தங்களைப் பெற வேண்டும்.

**"கற்றலை விட கேட்டலே நன்று"** என்ற பொன்மொழியின் படி., அவ்வித அறிவு திறம்பட மனதில் பதியும் ஒவ்வொருவரும் கற்றறிந்த பெரியோர்கள் சொற்பொழிவுகள் நிகழுங்கால் அவ்வண் சென்று, அச் சொற்பொழிவு கேட்டு முக்கியத்துவம் எதுவோ, அதை குறிப்பு எழுதிவர வேண்டும். ஏனெனின் ஒவ்வொரு கூட்டத்திலும் பற்பல இனிய கருத்துக்களைப் பெற ஏதுவாகும். இவ்வினிய சொற்பொழிவின் கருத்துக்களை நாம் ஏற்ற சமயத்து மாணவர்களுக்கு எடுத்துக்காட்டி விளக்கவும், மாணவர்கள் அறிவை திறம்பட செய்யவும், அவர்களையும் சொற்பொழிவுகள் நடாத்தத் தூண்டவும் சொற்பொழிவின் பயனையும் அறிய ஏதுவாகும். அவைகள் ஒவ்வொன்றையும் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து, முக்கியம் வாய்ந்த அறிவு மணிகளை எடுத்து நமது அறிவு மணிக்கோர்வையில் இணைத்துக் கொண்டு, பயன்படுத்த வேண்டும்.

இவ்விதம் ஆசிரியர்கள் செய்து வருதலால் தாம் கொண்ட அரும்பணிக்கு, மேற் கூறியவைகள் உறுதுணையாகவும் தன் அறிவு, திறம்படவும், மாணவ, மாணவிகளின் அறிவு விசாலமடையவும், நாம் ஏற்ற சமயத்து சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், உதவுகிறது. நம் பகுத்தறிவை பயன்படுத்தி மக்களுக்கு சேவை செய்வதில் ஒரு ஊக்கமும், உணர்ச்சியும் உண்டாக்கும். இதனால் மாணவர்களுக்கும், மக்களிடத்தும் அன்பும், ஆர்வமும் ததும்ப ஆரம்பிக்கும். பேச்சின் வன்மையால் கூட உலகை ஆள முடியும் என்பதை நிரூபிக்கமுடியும் என்பது திண்ணம் என்பதை, கோவூர் கிழார், பெருந்தலை சாத்தனர், ஔவையார் என்னும் புலவர்களால் நாம் அறிகிறோம்.

முற்காலத்தில் செய்திகள் அனுப்பிய முறை வேறு. ஆனால் இக்காலமுறை வேறு. காரணம், காலசுழற்சியில் அறிவுத்துறையும் முன்னேற்றம் அடைந்து வருகிறது. இந்நிகழ்காலத்தில் 5000 மைலுக்கு அப்பாலுள்ள செய்திகளை மறுதினமோ அல்லது அன்றைய மாலையிலோ அங்கங்குள்ள செய்திகளைத் தெரிந்துக் கொள்கிறோம். நவீன விஞ்ஞானத்துறை முன்னேறிவரும் காலத்து, ஒரே சமயத்தில் நிகழ்ச்சியும், ஒலியையும் ஒரே காலத்து பார்ப்பதுபோன்று, செய்தித் தாளில் வரிவடிவத்தின் தன்மை, பொருள் இரண்டையும் கண்ணுறுகிறோம்!

இவ்வினிய நூதன முறையில் இயங்கும் உலகத்தில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும், அன்றாட செய்திகளை அன்றாடம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆசிரியத் தொழிலை மேற்கொண்டவர்களிடம் இவ்வித செய்தி இல்லையாயின் அன்னவர்கள் அச்சாணி இல்லாத தேரை ஒக்கும். ஆகவே கல்வியெனும் தேரை ஓட்டக் கூடிய ஆசிரியர்களிடம் செய்தித் தாள் திரட்டு எனும் அச்சாணி இல்லையாயின் அவ்விதத் தேர் எங்ஙனம் ஓடும் என்பதை இதைக் கண்ணுறும் தோழர்கள், தோழியர்கள் அறிந்துகொள்ள முடியும் என்பதை கூறுமலே கூறுகிறேன்.

அயல் நாட்டு செய்திகள், உள் நாட்டு செய்திகள், வார இதழ்கள், மாதாமாதம் மலரும், நம் பூங்கொத்து போன்ற புதிய மலர்கள், அன்றாடம் மலரும் செய்திகள் இவை அனைத்தும் பார்க்கவேண்டும். படிப்பறிவு இல்லாதவன்கூட, இவ்வித அறிவை, பிறர் கூற தான் ஓரளவு கல்வியெனும் கோபுரத்தை அடைய ஓர் படியாகும். இவ்வித பொது அறிவுத் திறமையின்றேல், இப்புனித உலகில் புன்னகையுடன் செல்ல முடியாது என்பது திண்மை!

நாம் செய்தித் திரட்டு பூவில் (மலரில்) உள்ள இதழ்களை, அரசியல்—கல்வி— பொருளாதாரம்

—போக்குவரவு—விஞ்ஞானம்—சட்டதிட்டங்கள் — இலக்கியச் சுவைகள்—உள், அயல்நாட்டுச் செய்திகள்—எதிர்பாரா நிகழ்ச்சிகள்—தபால் தந்தி செய்திகள்—போர்முனை செய்திகள்—எதிர்பாரா நிகழ்ச்சிகள்—நூதன செய்திகள்—சீர்திருத்த செய்திகள்—மேடை சொற்பொழிவுகள் போன்ற பிரிவுகளாகப் பிரித்து எழுதிவரவேண்டும்.

இவ்வித முறையில் செய்திகள் திரட்டுவதால், செய்திகளைப்பிரித்தறியும் தன்மையும் அதன் ஒவ்வொரு பிரிவைப்பற்றிய அறிவும் மனதில் பதியும் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகிறது. இதனால் பலநாட்டு மக்களின் கருத்து, ஒற்றுமை, வேற்றுமைகளை எடுத்து விளக்கி மாணவர்களுக்குப்பாடம்கற்பிக்குமிடத்து அயல்நாட்டு மக்களையும், நம் நாட்டு மக்களையும் ஒப்பிட்டு கற்பிக்க முடியும் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் உணரலாம்.

**(போதன விஷய பூங்கொத்து)**

---

(33–ம் பக்கத் தொடர்ச்சி)

முசுமுசுக்கை சாறு பிழிந்து 1 அல்லது $1\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் 3 நாள் காலையில் சாப்பிட்டு வர சுவாசம் காசம் போம்.

முசுமுசுக்கை இலை 1 பலம் நெய்யில் வதக்கி அரைத்து காலை மாலை மூன்று நாள் கொள்ள காசம், இருமல், ஈளை, இளைப்பு நீங்கும்.

பிறிதொரு முறை: சுடுகாப்பியில் ஆடாதோடை இலை இரண்டு, நொச்சி யிலை–5, நல்ல துளசி 1 பிடி, முசுமுசுக்கை 5 போட்டு 10 நிமிஷம் பொறுத்துச் சாப்பிட்டால் கப ரோகஞ் சாந்தியாகும். அந்த நாள் முழுதும் இந்தப் பச்சிலைகளையே உபயோகப்படுத்தலாம். இவைகளையே சுடு தண்ணீரிலும் போட்டுக் குடிக்கலாம்.

மேலும் இருமல், காச ரோகங்கள், இளைப்பிருமல் உள்ளவர்கள் கீழ்க்கண்ட சூரணத்தைச் சாப்பிட்டு வருவது நல்லது.

1. முசுமுசுக்கை (சமூலம்).
2. கண்டங்கத்திரி. ,,
3. ஆடாதோடை இலை.
4. தூதுவேளை. சமூலம்.
5. மிளகரணை வேர்மட்டும்.

இந்தப் பச்சிலைகளின் வேர் கொடி இலைகளுடன் சம அளவாக எடுத்துக்கொண்டு நிழலிலுலர்த்திப் பொடித்து வஸ்திரக்காயம் செய்து மருந்துக்கு சமனாக பனங்கற்கண்டு கூட்டி. காலை மாலை $\frac{1}{2}$ தேக்காண்டி சாப்பிட்டு வெந்நீர் குடிக்கவும்.

# ரவீந்திரநாத் தாகூர்

(தென்னாப்பிரிகா—டர்பன்—திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

ரவீந்திரநாத் தாகூர் இறந்து விட்டார். ஆனால் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். கவிஞர்களின் லட்சணமே இதுதான். அவர்களைப் பற்றி, அதாவது அவர்களுடைய சொந்த விவகாரங்கள், வாழ்க்கை அந்தரங்கள் முதலியவைகளைப் பற்றி யாரும் எப்பொழுதுமே அக்கரை கொள்வதில்லை. அவர்களுடைய சிருஷ்டிகளின் விஷயத்தில் தான் அதிகமான சிரத்தை காட்டுகிறார்கள். அப்படி ஜனங்கள் காட்டுகிற சிரத்தையானது அதிகப் பட அதிகப் பட அந்தக் கவிஞர்களினுடைய ஆயுளும் நீடித்துக் கொண்டு போகிறது. இதனால் தான் கவிஞர்கள் சிரஞ்சீவிப் பட்டம் பெற்று விடுகிறார்கள்.

கம்பன், காளிதாஸன் போன்ற மகா கவிகளின் உயிர் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் இந்தப் பூலோகத்தினின்று மறைந்து போய்விட்டது. ஆனால் அவர்களுடைய கவிகள் இப்பொழுதும் உயிரோடு மக்களின் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன; நாளுக்கு நாள் புதிய ஓசையையும் அடைந்து வருகின்றன. ரவீந்திரநாத் தாகூரும் இந்த மாதிரியான மகா கவிகளின் வர்க்கத்திலே சேர்ந்து விட்டார். தமது உத்தமமான கவிதைகள் புதிய வாழ்வு பெற வேண்டுமென்பதற்காக, அவர் தமது நைந்து போன சடலச் சட்டையைக் கழற்றி யெறிந்து விட்டார். அவர் உயிரோடிருந்த போது எப்படி பிறருக்காக வாழ்ந்தாரோ, அப்படியே இறந்த பிறகும் பிறருக்காக வாழ்கிறார்.

உலகத்தில் எத்தனையோ அரச பரம்பரைகள் தோன்றி, ஆதிக்கஞ் செலுத்தி விட்டு, அழிந்து போயிருக்கின்றன; எத்தனையோ மதக்கோட்பாடுகள், அரசியல் சித்தாந்தங்கள் முதலியன தலையெடுத்து, சிறிது காலம் ஆர்ப்பாட்டஞ் செய்து விட்டு அடங்கிப் போயிருக்கின்றன. இவைகளை ஜனங்கள் சுலபமாக மறந்து விடுகிறார்கள். ஆனால் கவிஞர்கள் மட்டும் எந்தக் காலத்திலும் மறக்கப்படுவதில்லை.

வள்ளுவர், எந்தக் காலத்துத் தமிழ் நாட்டில் தோன்றினாரோ அந்தக் காலத்துத் தமிழ் நாடு இன்றைய தினம் இல்லை. ஆனால் வள்ளுவர் மட்டும் இருந்து கொண்டிருக்கிறார். ஹோமருடைய கிரீஸ் தேசம் போய்விட்டது. ஆனால் ஹோமர் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இங்கிலாந்தில் முதல் எலிஜபெத் மகாராணியின் ஆட்சியை, மறதி என்னும் மேகம் மூடிக் கொண்டு விட்டது. ஆயினும் ஷேக்ஸ்பியர் என்னும் சூரியன் இன்னும் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்.

அதைப் போல், இந்தியாவை ஆண்டு வந்த ராஜப் பிரதிநிதிகளும், ஆட்டி வந்த அரசியல் தலைவர்களும் மறக்கப்பட்டுப் போகலாம். ஆனால் ரவீந்திரர் இந்தியா இருக்குமளவும் இருந்து கொண்டிருப்பார். அவர் மறக்கப்பட்டு விட்டாரென்றால், இந்தியா, இழக்கப்பட்டு விட்டதென்று தான் அர்த்தம்.

ரவீந்திரரின் கவி நயத்தைப் பற்றியோ, விசுவப் பிரேமையின் விஷயத்தில் அவர் வைத்திருந்த பரம நம்பிக்கையைப் பற்றியோ, பாராமுகத்தின் காரணமாக குப்பைக் கூடையிலே எறியப்பட்டு விட்ட "கீதாஞ்சலி" என்ற பிரபல கிரந்தமானது, அவருக்கு நோபல் வெகுமதி வாங்கிக் கொடுத்ததைப் பற்றியோ, "சாந்தி நிகேதன்" என்ற ஒரு ஸ்தாபனத்தைக் குருகுல முறையில் ஸ்தாபித்து அதனோடு தமது வாழ்க்கையை ஐக்கியப்படுத்திக் கொண்டு விட்டதைப் பற்றியோ, வைதிகம் என்ற பெயராலும் சநாதன தருமம் என்ற பெயராலும் இந்து மதத்தில் புகுந்து விட்ட மாசு மறுக்களைத் துடைக்கும் பொருட்டு, அவர் தாமே வலிய ஏற்று அநுபவித்த பல துன்பங்களைப் பற்றியோ நாம் இங்கு விஸ்தரித்துக் கூறப் போவதில்லை. ஏனென்றால் இவை யெல்லாம் எந்த ஓர் அரசியல் வாதியும், அல்லது எந்த ஒரு புலவரும், செய்திருக்கக் கூடிய காரியங்கள் தான்.

ஆனால் ரவீந்திரர், இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்றதொரு காரியத்தைச் செய்திருக்கிறார். அதுதான் நமக்கு முக்கியமாகப் படுகிறது. அஃதென்ன? அவர் தமது கவிதா சக்தியை, கற்பனைத் திறனைக் கடவுள் விஷயத்தில் மட்டும், இயற்கை விஷயத்தில் மட்டும் உபயோகிக்கவில்லை; தமது தாய் நாட்டின் விஷயத்திலும் உபயோகித்திருக்கிறார். அவர் ஒரு சிறந்த தேசியவாதி. அவருடைய உலக சகோதரத்துவ எண்ணமானது, அவருடைய தேச பக்தியைத் திரை போட்டு மூடிவிடவில்லை. உலக மேடையிலே தமது தாய் நாட்டுக்கு அளிக்கப்பட்டிருக்கும் தாழ்வான அந்தஸ்தைப் பற்றியும், தமது நாட்டு மக்கள் யாங்கணும் ஏசப்பட்டும் பேசப்பட்டும் வருவதைப் பற்றியும் அவர் மனம் வெதும்பினார். அந்நிய ஆதிக்கத்தினால், பாரதத் தாயின் தேகத்தில் புண்கள் பல ஏற்பட்டிருப்பதைக் கண்டு அவர் கண்ணீர் வடித்தார். பாரத ஜாதியின் இருதயமானது அழுகிப் போய் வருவதைக்கண்டு அவர் வாய்விட்டு அலறினார்.

1919-ம் வருஷம் ஏப்ரல் மாதம பஞ்சாபில் நடைபெற்ற படுகொலைக்குப் பிறகு அவர் தமது "ஸர்" பட்டத்தைத் துறந்து, லார்ட் செம்ஸ் போர்டுக்கு எழுதிய கடிதத்தின் வாசகம் இன்னும் நமது செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

செல்வக் குடும்பத்திலே பிறந்து, பட்டாடையே உடுத்தி போகங்களனைத்தையும் அனுபவித்து வந்த போதிலும், அவருடைய மனம் எப்பொழுதும் ஏழை மக்களின் எளிய வாழ்க்கையிலேயே தான் ஈடுபட்டிருந்தது. இதனால் அவருக்கு அந்நிய அரசாங்கத்தினரால் அளிக்கப்பட்டு வந்த ஆதரவு கூட சில சமயங்களில் குறைந்து விட்டதுண்டு. ஆனால் அதற்குப் பிரதியாக, கோடிக்கணக்கான பாரத மக்களின் நன்றிக்கும் பக்திக்கும் அவர் உரியவராகி விட்டார். ஜனங்களுடைய இந்த நன்றியும் பக்தியுமே அவருக்கு இறவாத் தன்மையை அளித்திருக்கின்றன. அப்படியானால் அவர் இறந்துவிட்டார் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

பாரத ஜாதியின் சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொடுக்கும் விஷயத்திலே முனைந்து நின்ற ஒரு வீரராகவே அவர் எப்பொழுதும், ஜனங்களுடைய இருதயத்தில் வாசஞ் செய்து கொண்டிருப்பார். இந்த ஒரு விஷயத்தை முன்னிலைப் படுத்திக் கொண்டு தான், அதாவது பாரத ஜாதியின் மதிப்பைக் காப்பாற்றிக்கொடுக்கும் பொறுப்பை ஏற்கத் தகுதியுடையவர் என்ற முறையில் தான், காந்தியடிகளுக்கு, அவர் "மகாத்மா" என்ற பட்டத்தை 1921-ம் வருஷத்தில் சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்றிருந்த போது சூட்டினார். அது முதற்கொண்டு, காந்தியடிகளுக்கு "மகாத்மா" வென்ற பட்டம் சர்வ சாதாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

ரவீந்திரர், தமது வாழ்க்கையைப் பரிபூரணமாக நிறைவேற்றி விட்டு, பாரத மக்களுக்கு, அவர்களுடைய கடமை என்ற பாதையைத் திறந்து விட்டுவிட்டு, ஓய்வு பெறச் சென்றிருக்கிறார். அவர் மன நிம்மதியுடன் ஓய்வு கொள்ள வேண்டுமென்ற எண்ணம் நமக்கு உண்மையிலேயே இருக்குமானால், அவர் செப்பனிட்டு வைத்திருக்கிற பாதையில், அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு செல்வது நமது கடமையாகும்.

---

## பொன் மொழிகள்

எவ்விதம் இறந்தான் என்பதன்று கேள்வி; எவ்விதம் வாழ்ந்தான் என்பதே.

— சாமுவேல் ஜான்சன்.

இளைஞர்களின் காதல், உண்மையில் அவர்கள் இதயத்தில் இல்லை; கண்பார்வையில்தான் இருக்கிறது.

— ஷேக்ஸ்பியர்.

# முசுமுசுக்கை

திரு. Rev. S. A. வேதநாயகம் எழுதியது.

முசுமுசுக்கை: இதற்கு இரு குரங்கு என்றும் இரு குரங்கின் கையென்றும் வேறு பெயர்கள். முசு என்றால் குரங்கு என்று பொருள். முசுமுசு என இரு முறை அச்சொல் வருவதால் இரு குரங்கு என்பதாயிற்று. முசுமுசு என்பதோடு கை என்ற வார்த்தையும் சேர்வதால் இரு குரங்கின் கை யென்றும் கூறப்படுகிறது.

முசுமுசுக்கை எனும் மூலிகை படரும் கொடியினத்தைச் சேர்ந்த சிறுகொடி. இக்கொடி நீர்த்தங்குமிடத்தில் செழித்து வளரும், வறண்ட காலத்தில் பட்டுப்போம். இது காய்ந்து போனாலும் அதில் கொஞ்சம் சத்து உண்டு.

ஆன்றோர் இதனை மாமூலி என்று சிறப்பித்துக் கூறியுள்ளனர். முசுமுசுக்கை இலை சிறந்த கோழையகற்றி (கபஹரகாரி). இதனால் காசம், கோழை, சுவாசம், நெஞ்சுப் புகைக் கம்மல், சல தோடம், பனியின் கொடுமை, மழையில் நனைதலால் ஏற்படும் தீங்கு ஆகியவை அகலும்.

இதன் வேரினால் காசம், வாந்தி, குன்மம், மார்பு நோய், பித்தாதிக்கம், துர் நாற்றத்துடன் இறுகிய கோழை, அற்ப வீரிய விஷாசல ரோகம் போம். இதன் ரசத்தில் கோரோசனை சேர்த்துக்கொடுக்க மேற்படி நோய்களை யகற்றி நல்ல பலன் அளிக்கும்.

வேரை உலர்த்தி சூரணமாக்கி அல்லது கியாழம் செய்து கொடுக்க வாந்தி, குன்மம், மார்பு நோய் விலகும்.

இளைப்பு, ஈளை, இருமலுக்கு ஒரு பிடி ஊறவைத்த புழுங்கல் அரிசியுடன் முசுமுசுக்கை இலை 1 பலம் சேர்த்து அரைத்து சிறிது உப்பிட்டு பசும்பால் 1 ஆழாக்கு மண் பானையில் விட்டு பானையின் வாய்க்கு துணியால் வேடுகட்டி அதன்மேல் முன் கூறியபடி சுத்தம் செய்த முசுமுசுக்கை கூட்டியரைத்த புழுங்கல் அரிசியை வைத்து இட்லி செய்கிற மாதிரி புட்டு அவிக்கவும். பானையில் விட்ட பசும்பாலில் கொஞ்சம் முசுமுசுக்கைச் சாறு பிழிந்துவிட்டு பின்னர் வேடு கட்டவும்.

மேற்கண்டவாறு செய்த பிட்டு ஒரு வேளையளவாக 3 நாள் இதே மாதிரி காலையில் செய்து சாப்பிடவும்.

அல்லது ஒரு பிடி ஊறவைத்த புழுங்கலரிசியுடன் முசுமுசுக்கை இலை சேர்த்து அரைத்து உப்பிட்டு அடையாகச் செய்து 3 நாள் காலை மாலை தின்ன கோழைக்கட்டு, இருமல், ஈளை நீங்கும்.

(29-ம் பக்கம் பார்க்க)

# நூறுண்டு வாழ்வது எவ்விதம்?

கடவுள் சகல மக்களும் நீடு வாழ வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நம்மைப் படைத்திருக்கிறார் என்று நாம் திடமாக நம்பவேண்டும்.

மனிதர்களுக்கு ஏற்படும் அல்ப ஆயுளுக்குக் காரணம் அவர்களது அனுஷ்டானமே. ஆதலால் நமது நடை, உடை, பாவனைகளையும், உணவுப் பழக்க வழக்கங்களையும் சீர்திருத்தம் செய்து கொண்டால், நூறு வயது வாழலாம்.

மெதுவாக மென்று சாப்பிட வேண்டும். அஜீரணத்திற்கு இடம் தரலாகாது. அளவுக்கு மிஞ்சியும் அடிக்கடியும் சாப்பிடுவதாலேயே, அஜீரணம் நம்மை வந்து அடைகிறது. அஜீரணம், வயிற்றுக்கடுப்பு, ஜுரம் முதலிய வியாதிகளால் கஷ்டப்படும் போது, இலேசான ஆகாரத்தையே சாப்பிட வேண்டும்.

காப்பி, டீ, கொக்கோ, கள், பீர், பிராந்தி, விஸ்கி, சாராயம், அபின், கஞ்சா, புகையிலை முதலிய கொடிய வஸ்துக்களை முற்றிலும் ஒழிக்க வேண்டும்.

சோடா, லெமனட்டு, சர்பத் போன்ற புட்டிப் பானங்களையும் விலக்க வேண்டும்.

மிளகாய், சர்க்கரை, கடுகு, மிளகு முதலிய பதார்த்தங்களை நமது உணவில் கூடியவரை குறைவாகவே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாமிச உணவை அறவே நீக்க வேண்டும்.

தீட்டிய அரிசியையும் ஒழிக்க வேண்டும். அதனால் மக்களுக்குப் பெரிபெரி, மகோதரம், வயிற்று வலி முதலிய அஜீரண வியாதிகள் உண்டாகின்றன. கைக்குத்தல் அரிசியை உபயோகிக்க வேண்டும்.

புசிக்கும் உணவில் தவிடு போகத் தீட்டாத அரிசிச் சாதம், முருங்கை, கத்தரி முதலிய இளங் காய்கள், பொன்னாங் கண்ணி, தூதுளை முதலிய இளங் கீரைகள், கருணை, சேனை, உருளைக்கிழங்குகள், துவரை, பாசிப் பயறு, கடலை முதலிய பருப்பு தினுசுகள், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, பழுத்த பழங்கள், தேங்காய் முதலிய இயற்கை ஆகாரங்கள், கோதுமை, கேப்பை, வரகு முதலிய தானியங்கள், எண்ணெய், மோர், நெய் இவைகளைத் தகுந்த அளவு சேர்த்துப் புசிக்க வேண்டும்.

சாப்பிட்டவுடன் பற்களைப் பிரஷினால், தேய்த்து, உப்பு நீரால் கழுவ வேண்டும்.

நல்ல பசியில்லாத நேரங்களில் ஆகாரம் புசிக்கலாகாது. வடை, வறுவல்கள், ஜிலேபி, மைசூர்ப் பாகு போன்ற சிற்றுண்டிகளை

ஆகாரங்களுக்கு மத்தியில் புசிக்கலாகாது.

ஒரு ஆகாரத்திற்கும் மற்றொரு ஆகாரத்திற்கும் மத்தியில் போதுமான ஜலத்தைப் பருகுக.

தினம் ஒழுங்காய் மலவிஸர்ஜனம் செய்ய வேண்டும். காலை மாலை குளித்து, தேகத்தைச் சுத்தி செய்துகொள்ள வேண்டும்.

நாம் வசிக்கும் அறையைக் காற்றோட்டமுள்ளதாகச் செய்துகொள்ள வேண்டும். காற்று புகும்படியானதும் இலேசானதுமான உடைகளை அணிய வேண்டும்.

நமது சுவாசாசயங்களை உபயோகித்து, இரவும் பகலும் சுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டும். தினம் சூரிய வெளிச்சத்தில் சிறிது நேரத்தைக் கழிக்க வேண்டும்.

உட்காரும் போதெல்லாம் நேராக நிமிர்ந்து உட்கார வேண்டும்.

தேகத்திற்கு அனுகூலமான சாஸ்திரீகமான தேகப் பயிற்சியைச் செய்ய வேண்டும்.

கூடுமானால் திறந்த வெளியில் படுக்கையை அமைத்துக்கொள்வது நல்லது.

இரவு பத்து மணிக்குள் படுக்கப் போய், காலை ஆறு மணிக்கெல்லாம் படுக்கையை விட்டு எழுந்து விட வேண்டும்.

உழைப்பு, ஓய்வு, விளையாட்டு, தூக்கம், இவற்றில் மிதமாக இருக்க வேண்டும்.

தொற்று வியாதி வாராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பற்கள், ஈறு, நாக்கு, இவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

தும்முவோரிடமும் மூக்கை அலட்சியமாகச் சிந்துவோரிடமும் நெருங்கித் தொற்று நோய்களுக்கு ஆளாகாதீர்கள்.

எப்பொழுதும் சரீரம் இளைத்துப் போகும்படி அலட்சியமாக இருந்து விடாதீர்கள். அடிக்கடி சிரம பரிகாரம் செய்துகொள்வது நல்லது.

(நல்வழி)

# என் சுய சரிதம்

**எம். எஸ். லட்சுமி**

சென்னை அரசாங்கம் செய்யும் பணிகளில் தலை சிறந்தது மாதர் குலத்திற்காகச் செய்யும் மகத்தான பணியேயாகும். அனாதைகளாய், ஆதரவற்றவர்களாய்த் துன்பக் கடலிலே வீழ்ந்து கடலினும் மிக்கக் கண்ணீர் வடித்துப் புயலினும் கொடிய கவலைகளால் கொடுமைப் பாறைகளில் தாக்கப்பட்ட மாதர்க்கு ஆறுதலளிக்க சேவையில்லத்தை அரசாங்கம் நடத்தி வருகிறது. சேவையில்லம் ஆறுதல் வழங்கும் ஆலயம்; அன்பு பரப்பும் அழகிய சோலை; கலையளிக்கும் கூடம்; தொழிற் கல்வி கொடுக்கும் கற்பகத்தரு; ஒழுக்கமும் உயர் பண்பும் உதவும் மாளிகை.

இத்தகைய சேவையில்லத்தை அடைந்து துயர் மறந்து மீண்டும் வாழ்வில் வளம் பெற்றவர் பலர்; வளம் பெறுவார் பலர். அவர்கள் —சேவையில்லத்தே வாழ்வார், தம் வரலாறு கூறுகின்றனர்— கேட்போம்.

[ஆசிரியர்.]

நீர் வளமும், நிலவளமும் இயற்கையாகவே அமையப் பெற்ற தென் இந்தியாவில் சேர, சோழ, பாண்டியன் என்னும் மூவேந்தருள் சோழனது வள நாடாகிய தஞ்சை ஜில்லாவில் மிலட்டூர் என்னும் கிராமத்தில் சிவ குலத்தில் அந்தணர் மரபில் என் பெற்றோர்களான சீனுவாச அய்யருக்கும் அவரது வாழ்க்கைத்துணைவியான நீலாயதாட்க்ஷி அம்மையாருக்கும், 1930-ம் ஆண்டில் புதல்வியாகத் தோன்றினேன்.

என் பெயர் **லக்ஷ்மி பாஹிரதி.** நான் மகா துர்பாக்கியசாலி. என் உடன் பிறந்தவர்கள் எட்டுப் பேர். அவர்களுள் நானே கடைசி. நான் பிறந்து சில மாதங்களில் என் தாய் மண்ணுலக வாழ்வைவிட்டு விண்ணுலகெய்தினாள்.

குழந்தைப் பருவத்திலேயே என் தாயை இழந்துவிட்டபடியால் என் தந்தை மிகவும் பாராட்டி வளர்த்து வந்தார். ஏனோ என் தந்தையின் உள்ளம் மாறுபட்டு, மறுவிவாகம் செய்து கொள்ள நிச்சயித்தது. விவாகமும் நடந்தேறியது. என் தந்தை உள்ளமும் அடியோடு மாறி எங்களைக் கவனியாமல் இருந்துவிட்டார். இது உலக இயல்புதானே!

நாட்களும் வாரங்களாகி, மாதங்களைக் கடந்து வருடங்கள் ஆறு சென்றன. இதற்குள் காலச் சக்கரம் சுழன்று கொண்டே போன

போதிலும் என் மட்டிலும் எனக்கு ஒரு கஷ்டமோ சுகமோ தோன்றவில்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்லச் சிற்றன்னையின் கொடுமைகளுக்கு ஆளாகி வந்தேன். என் துயரம் எண்ணி லடங்காதவை. இருந்தாலும்நான் எதையும் பொருட்படுத்தாமல் ஓர் சிட்டுக்குருவியைப் போல் ஆடிப்பாடி உல்லாசமாக இருந்ததோடும் பல இன்னல்களுக்கிடையில் இளமையிற் கல் என்ற முதுமொழிப்படி எங்கள் ஊரில் உள்ள எலிமெண்டரி பாடசாலையில் ஏழாம் வகுப்பு 13 வயதில் முடித்து விட்டேன். விபரம் அறிந்த நான் வெளி உலக வாழ்க்கையையும், என் வாழ்க்கையையும் எண்ணி எண்ணிக் கண்ணீரும் கம்பலையுமாகத் துன்பக் கடலில் தத்தளித்துக்கொண்டு மீளும் வழி காணாமல் ஏங்கி வீட்டில் அடைபட்டு இருந்தேன்.

எங்கள் குடும்பத்தில் என்னைப் போல் யாரும் இருந்ததில்லை. இந்த அபாக்கியவதிக்கு மணம் செய்ய வேண்டுமென்று பேச்சுக்கள் உலாவி வந்தன. சிறு வயதிலேயே மணம் முடிக்கவேண்டுமென்ற நியதி ஏற்பட்டுள்ளதால் என் தந்தை பெருமுயற்சியுடன் ஐந்து வருடங்கள் வரை வரன் தேடினார். பிராமண குலத்தில் வரதட்சணைக் கொடுமை உண்டு. அப் பணப்பேய் என் தந்தையைத் திணற அடித்தது; அது மட்டுமா? நான் தாயற்ற பெண்ணல்லவா? அதற்காகவும் மணம் புரிய யாரும் முன்வரவில்லை. அந்தோ, என் வாழ்வினைக்கு யார் என்ன செய்வார்கள். மற்றப் பொருட்களை விலைக்கு வாங்க முடியும். ஆனால், இறந்தவர்களைப் பெற முடியுமா? இதை அறிந்ததும் பாமர மக்கள் என்னை நிராகரித்து வந்தார்கள். இப்படியாக 17 வயதடைந்தேன். இறகில்லாப் பட்சிபோல் ஏங்கி உள்ளம் உடைந்தேன்.

முடிவாக என் அருமைச் சகோதரியின் மைத்துனருக்கு என்னைத் தகுந்த வரதட்சணையுடன் மணம் செய்ய நிச்சயித்தார்கள். ரூ. 6,000 வரதட்சணையுடன் திரு. பார்த்தசாரதி B. A.–க்கு என்னை வாழ்க்கைத் துணைவியாக்கினார்கள். நான் வந்த இரு மாதங்கள் வரை என்னை யாரும் எதுவும் சொல்லவில்லை. ஆனந்தமாகக் காலம் கழித்தேன். பின்னர் சீர்வரிசைகள் செய்தது ஒன்றும் போதாதென்று என்னைக் கொடுமைகள் பல புரியவும் ஆரம்பித்தனர். ஆயினும் என் தந்தையிடம் முதல் பிரஸவம் வரை ரூ. 2,300 வரைச் சிறிது சிறிதாக வாங்கி வந்த பின்னும் கொடுமைகள் குறையவில்லை. இருந்தாலும் சகித்து வந்தேன். பின்னர் என் கணவர் காரைக்காலில் ஜோதி சினிமா டாக்கீஸ் ஒன்றை ஏற்படுத்தி நடத்தி வந்தார். ஒரு சமயம் பிலிம் எடுக்க நாகை சென்று வருங்கால் எதிர்பாராத விதமாக லாரி ஓர் மதகின்மீது மோதி ஆபத்துக்குள்ளானார். அதன் விளைவாக கடவுளை வணங்கும் இரு கரங்களையும், தன்

புத்தியையும் இழந்தார். ஆனால் உயிர் மட்டும் ஊசலாடிக் கொண்டிருந்தது. பின்னர் மதராஸ் ஜெனரல் ஆஸ்பத்திரியில் நான்கு மாதம் வைத்தியம் செய்து தன் சுயபுத்தியை இழந்த கணவனுடன் திரும்பி மாயவரம் சென்றேன். மாளாத்துயரம் அமைதியின்மை; கண்ணீர் வெள்ளம் பெருகித் துயரக்கடலில் மீண்டும் குதித்து விட்டேன். இதற்கிடையில் இரு குழந்தைகளுக்குத் தாயாகி இருந்தேன். எனக்கு வாழ்க்கை வெறுப்பாயிற்று. என் உயிரை விடத் துணிந்தேன். என்னை இவ் வஞ்சனை உலகம் ஏமாற்றியது. என் வாழ் நாட்களை வீணாகக் கழித்தேன். நான் ஓர் நாள் மாயவரம் அருகிலுள்ள தருமபுரத்தில் ஓர் விழாவிற்குச் சென்றபோது அங்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மு. கருணாநிதி பெண்கள் முன்னேற்றம் என்பதைக் குறித்து பேசுகையில் இச் சேவா இல்லம் ஒன்று மதராஸில் நடந்து வருவதாய்ச் சொன்னார். நான் என்மாமனாரிடம்கூறினேன். முதலில்என்னைத் தடுத்தார்.நான் கணவரிடம் தெரிவித்ததற்கு யாதும்பதில் கூறவில்லை. தவிர என் குடும்பத்தைக் காப்பாற்றும் உத்தேசத்துடன்என் நகைகளைக் கழற்றி என் மாமனாரிடம் கொடுத்தேன். அப்போது 3-ம் குழந்தைக்குத் தாயாகும் தருணம். ஈசன் விட்டவழி என்று என் கணவருக்குத் தேறுதல் கூறி என் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு என் பிறந்த வீட்டுக்குச் சென்றேன். நான் சென்ற இரு தினங்களுக்கெல்லாம் என் இரண்டாவது குழந்தையை ஏதோ விஷம் தீண்டித் தொட்டிலில் படுக்க வைத்திருந்த குழந்தை இறந்துவிட்டது. குழந்தை இறந்த ஒரு மாதத்திற்கெல்லாம் ஓர் பெண் மகவை ஈன்றேன். ஓர் குழந்தை இறந்ததும் நான் மறு குழந்தையைப் பெற்றெடுத்ததும் என் கணவர் அறியார். சொல்லித்தான் என்ன பிரயோஜனம். என் கவலையும் துக்கமும் தாங்க முடியாமல் அலறி அலறி ஒரு வாரம் கழித்தேன். முன்கூறியபடி நானும் என் மாமனாரும் தஞ்சைசென்று மாதர் நல இலாகாவை அடைந்து நேரில் விசாரித்துக்கொண்டு எங்கள் ஊரை அடைந்தோம். ஓர் இரவு முற்றிலும் சிந்தித்தேன். கடவுளின் சித்தம் இதுவானால் விண்ணப்பம் போடாமல் நேராகச்சென்று கேட்பது. இடம் கிடைத்தால் சேருவது, இல்லையேல் மீண்டும் திரும்புவது என்ற உறுதியுடன் கடவுளை நம்பிக் கரங்களை இழந்த கணவனையும் விபரம் அறியா மூன்று வயதுப் பாலகனையும் பால்மணம் மாறாத முப்பது நாள் குழந்தையையும் என் சகோதரியிடம் விட்டு என் மாமனாரிடம் அவர்களைப் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு என் நகைகளை வைத்துக்கொண்டு அவர்களைக்காப்பாற்றும்பொருட்டும் நம்பிக்கையாகவும் 40 பவுன்

நகையைக் கழற்றிக் கொடுத்து விட்டு மதருஸ் வருவதற்குத் தயாரானேன். என் மூன்று வயதுப் பையனிடம் நான் டவுன் சென்று ஆரஞ்சியும் பிஸ்கட்டும் வாங்கி வருவதாகக் கூறி அக் குழந்தையை ஏமாற்றிவிட்டு மத ருஸ்வந்தேன்.

மதருஸ் வந்து மாதர் நல இலாகா ஆபீஸ் தெரியாமல் ஓர் நாள் பூராவும் சுற்றி அலைந்தேன். கடைசியாக இடத்தைக் கண்டு பிடித்து ஆபீஸரிடம் விவரங்களை ஆதியோடந்தமாகக் கூறினேன். அப்போது நாயுடு அம்மா அவர் கள் ஆபீஸராக இருந்தார்கள். அவர்கள் உடனே அநுமதிச் சீட்டை எழுதிக்கொடுத்தார்கள். நான் 1950-ம் ஆண்டு டிஸெம் பர் 18-ந்தேதி பிற்பகல் 2-மணிக் குச் சேவா இல்லத்தை அடைந் தேன். அப்போது அடைந்த மகிழ்ச்சி அளவிட முடியாது. நான் முதலில் இடத்தைக் கண்டு பயந்தேன். ஆச்சரியப்பட்டேன். என்னைப்போலுள்ள சகோதரி கள் எத்தனையோ பேர்! அவர வர் குழந்தைகளுடன் இருக்கிற தைப் பார்த்து என் குழந்தை களின் நினைவு ஓர் கணம் என் கண் முன் நின்றது. பிறகு சுவற் றில் கொட்டை எழுத்துக்களில் தன்கையே தனக்குதவி என்று பொறிக்கப்பட்டு இருந்ததைக் கண்டுவியப்பும், பயமும்ஒருங்கே சேர்ந்து சிறிது கவலை. அதாவது இவ்வளவு பேர்களிடமும் எப் படி நடந்து கொள்வது; ஹாஸ் டல் வாழ்க்கையையே அறியாத நான் எப்படி இருப்பது; எந்த விதமான சட்டதிட்டங்கள் இருக் குமோ, என்னென்ன ஜாதியார் இருப்பார்களோ, நாம் எப்படிப் படிக்கப் போகிறோம் என்றும் ஒரே திகில். நான் வந்து அநு மதிச் சீட்டை சூப்பரன்டெண்டு அம்மாவிடம் கொடுத்தபின் அவர் கள் பார்வையிட்டுவிட்டு ஓர் பெண்ணை (மந்திரியைக்) கூப்பிட் டுப் பெட்டியைச் சோதிக்கச் சொல் என்றதும் எனக்கு என் னவோ போலிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஓர் பெண் வந்து என் பெட்டியிலுள்ள வற்றை எழுதிக்கொண்டு ஹாஸ் டலில் உள்ள சட்டதிட்டங்களைக் கூறினாள். பிறகு படிக்கும் விஷ யத்தைக்கூறி விளக்கினாள். எனக்கு எங்குப் பார்த்தாலும் பயம். பேசவே மாட்டேன். அன்று முதல் எனக்கு ஒரு வாரம் வரை இரவில் நித்திரை வரவில்லை. எப்போதும் என் நினைவெல்லாம் என் கணவரைப் பற்றியும் என் எதிர்காலச் சின் னங்களாக விளங்கும் என் குழந் தைகளைப்பற்றியும் இருந்தன. மிகுதி வாழ் நாட்களை எவ்வாறு கழிப்பதென்ற கவலைதான் எனக் குப் படிப்பதிலேயே கவனம் செல்ல ஒட்டாமல் தடுத்தது.

பிறகு சிறிது சிறிதாக மன தில் ஓர் தைரியம் உண்டாயிற்று. இங்குள்ள மாணவிகளிடம் நன்கு படிக்க ஆரம்பித்தேன். எல்லோ ரிடமும் கலந்து படிக்கக் கற்றுக் கொண்டேன். ஓர் சமூகத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்

டும்; எப்படி இருந்தால் நம் எதிர்கால வாழ்க்கையை நடத்தமுடியும் என்றெல்லாம் கற்பனை செய்துகொண்டுஎதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய திட்டத்தை எடுத்துக்கொண்டேன்.

## சேவா இல்லத்தின் அனுபவம்

மாதர் நல இலாகாவால் ஏற்படுத்தப்பட்டுள்ள இச் சேவா இல்லத்தில் என் போன்ற சகோதரிகள் 140பேர் இருக்கிறார்கள். ஆசிரியரும், சூப்பரன்டெண்ட் அம்மா அவர்களும் மேட்டன் அம்மாவும் எங்களுடன் சமமாக எங்கள் நன்மை தீமைகளில் பங்கெடுத்துக் கொண்டு எங்களுக்கு நல்லுரைகளைப் புகட்டி அன்புடன் பரிபாலித்து வருகிறார்கள். இங்கு அநேக குடும்பங்கள் இருக்கின்றன. இங்கு வந்துள்ள பெண்கள் கணவனை இழந்தவர்கள்; கணவனால் கைவிடப்பட்ட பெண்கள். இல்லறத்தில் ஏழ்மை நிலையைச் சகிக்க வொண்ணமல் தங்கள் ஜீவிதத்தைத் தாமே நிர்வகிக்கும் நிலைமை இல்லாதவர்கள். கல்வி என்பது என்ன என்று அறவே அறியாதவர்கள். மற்றும் பலர் உளர்.

இங்குள்ள சகோதரிகள் யாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப்போல் எல்லோருடனும் அன்பு, நேசம், ஒற்றுமை, உழைப்பு முதலியவைகளைத் தங்கள் குணமாகக்கொண்டு உண்மையுடன் பாடுபட்டு முன்னேற்றத்தைக் கருதி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலைகளைக் குற்றங் குறைவின்றிச் செய்து வருகிறார்கள்.

இங்குக் கல்வியுடன் கைத்தொழில், சுகாதாரம் முதலியவைகள் கற்பிக்கப்படுகின்றன. அவரவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை எல்லோரும் ஒற்றுமையுடன் சேர்ந்து செய்துகொள்ளவேண்டும்.

இங்குள்ள சகோதரிகள் எட்டுக் குழுவினராகப் பிரிக்கப்பட்டு ஒவ்வோர் குழுவிற்கும் ஒவ்வோர் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. (அதாவது) பொது, இரவு, பகல், சமையல் பணி, தோட்டப்பணி, கிளாஸ் பணி, பாத்ரூம் பணி, சிற்றுண்டிப் பணி எனப் பல பணிகளை வரிசைக் கிரமமாக ஒவ்வோர் குரூப்பும் உண்மையுடன் செய்து வரவேண்டும். எங்களுக்கான வசதிகளுக்கும், உணவுக்கும்,உடைக்குமகவர்மெண்ட் பண உதவி செய்கிறது. எங்களுக்கு வேண்டிய பண்டிகைகள், பல விழாக்கள் முதலியவைகளையும் எங்கள் இல்லத்தில் குறைவின்றிக் கொண்டாடுவோம். எங்கள் தோட்டத்தில் நாங்களே பயிர் செய்து பலன்களைப் பெறுகிறோம். நாங்கள் துன்பங்களை மறந்து இன்பமாக வாழ்கிறோம். 1-வது முதல் 8-வது வகுப்பு வரை கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 8—வது படித்த பெண்களைக் கவர்ன்மெண்ட் பரீட்சை, E.S.L.C. பரீட்சைக்கு அனுப்

யித் தேர்வு பெற்றவர்களை ஆசிரியப் பயிற்சிக்காகவும் மருத்துவப் பயிற்சிக்காகவும் அவரவர் செளகர்யங்களுக்குத் தக்கபடி வெளியில் அனுப்புகிறார்கள்.

கைத்தொழில், தையல், துணி நெசவு, பாய்ப் பின்னுதல், பிரம்பு பின்னுதல் போன்ற வேலைகளைத் திறம்படக் கற்றுக்கொள்கிறோம். தையல் வேலைகளை நன்கு கற்ற பிறகு பப்ளிக் பரீட்சைக்கு லோயர், ஹையர் என இரு பரீட்சைக்கு அனுப்புகிறார்கள். மற்ற இதர கைவேலைகளையும் ஊக்கமுடன் கற்று வருகிறோம், குழந்தைகளின் பராமரிப்புக்கான மாணவிகளை ஏற்படுத்திப் பயிற்சி அளிக்கிறார்கள். குழந்தைகளுக்கும் உணவுக்கும் உடைக்கும் கல்விக்கான ஏற்பாடுகளும் நன்கு கவனித்து வருகிறார்கள்.

நான் இங்கு வந்து இரண்டு வருடம், மூன்று மாதமாகிவிட்டது. எனக்குத் துன்பமே தெரியவில்லை. நானும் ஊக்கமுடன் படித்து வருகிறேன். ஆயினும் என்னைக் கடவுள் மீண்டும் சோதித்து விட்டார். நான் வாழ்க்கையில் இடர்பட்டு வாழ வேண்டியவள்தான் போலும், ஹுமாயூன் என்னும் முகமதிய அரசனின் வாழ்க்கையைப் போல் இடர்ப்பட்டு வாழ்ந்து வருகிறேன்.

எனக்கு நற்காலமே இல்லை போலும், என் முடிவை எழுத எனக்கே பயங்கரமாக இருக்கின்றது.

நான் இங்கு வந்து ஒரு வருடத்திற்கெல்லாம் நான் விட்டு விட்டு வந்த குழந்தை இறந்தது. சமீபத்தில் என் கணவர் என்னையும் என் குழந்தைகளையும் நிர்க்கதியாக்கிவிட்டு உயிர் நீத்தார். இவ்விபரம் அறிந்து அலறினேன், துடித்தேன். மனம் புழுங்கி என் சரீரத்திற்கு நோயைத் தருவித்துக்கொண்டேன். பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்றபடி என்விதி ஆகிவிட்டது. ஆனால், என் மனம் கல்லாகிவிட்டது. சகோதரிகளில் யாருக்கும் தெரியாது. சூப்ரன்டெண்டு அம்மாவுக்கும் எங்கள் ஆசிரியருக்கும் மட்டுமே தெரியும். என் உயிர்த் தோழிக்குக்கூட என் வாழ்க்கை விவரம், தற்போது நடந்துள்ள துயர்ம் யாவும் கூறவில்லை. கூறி என்ன பிரயோஜனம் ? இக் கவலை நேர்ந்தபோது எனக்கு 8-வது வகுப்பு முடிந்து E.S.L.C. பரீட்சைக்குப் பணம் கட்ட தேர்வு நடத்தினார்கள். அப்போது என் மனக்குமுறல்களை அடக்கிக் கொண்டுதான் ஏதோ எழுதி வைத்தேன். கடவுள் காப்பாற்றினார். பரீட்சைக்குப் பணம் கட்டிவிட்டார்கள் நான் என் நிலையை யாரிடம் கூறுவது. என்னை ஆதரிக்கும் என் அன்பரை இழந்தேன். என் இரு கண்மணிகள்போன்ற இரு குழந்தைகளை இழந்தேன், உலக அபவாதத்திற்கு ஆளாகினேன். பயித்தியம் பிடித்தவளைப்போல் ஆகிவிட்டேன். இனி என்ன செய்வேன். எனக்கு என்ன வழி. நான்

உயிர் வாழ்வது அவசியமா? என்ற கேள்வியே என் மனதில் நிற்கிறதே தவிர வேறு ஒன்றிலும் என் உள்ளம் நாடவில்லை. என் வாழ்க்கை சிதறிவிட்டது. உள்ளம் உடைந்து சுக்கு நூறாகிவிட்டது. அந்தோ என்னே 'என் விதி'! என் வாழ்க்கை வறண்ட பாலைவனமாகிவிட்டது. என்ன செய்வேன். யாரிடம் முறையிடுவேன்........என் விதி ஈசன் செயல்.

## முடிவு.

நான் என் மனத்தைத் தைரியம் செய்துகொண்டேன். என் கவலைகளைவிட்டு மாயா உலகில் என்னைப்போன்ற பெண்களுடன் ஒற்றுமையாக தேசசேவை புரிய என் மனம், துடிக்கின்றது. உண்மையுடனும் சத்தியத்துடனும், இனி என் சொந்தமான வேலைகளில் ஈடுபடாமல், பொது நலத்திற்கே நம் தேசத்தில் பாமர மக்களுக்கு என்னாலியன்ற உதவி புரிந்து, அவர்களை நல்வழியில் செல்லத்தூண்டி இன்புறச் செய்வதே என் நோக்கம். இச் சமூகத்தில் என்போன்ற துர்பாக்கியசாலிகளை நான் காணவில்லை. வரதட்க்ஷிணைக் கொடுமைகளினாலும், இளமையில் சிற்றன்னையின் கொடுமையினாலும், புருஷனின் புத்திநிலை தடுமாறிய காலத்திலும் என் மனம் என் உயிரை வெறுத்தது. தற்போதுள்ள நிலையோ எனக்கு என்ன சொல்வதுஎன்று தெரியவில்லை. யாரிடம் சென்று அண்டிப் பிழைப்பது என்ற ஏக்கம்; இரவு பகல் வாட்டுகிறது—சகோதரிகளே! என்னைப் போல் பல இன்னல்களுக்கும், வறுமைகளுக்கும் ஆளாகாமல், தங்கள் ஜீவிதத்தைத் தாம் காப்பாற்றிக் கொள்ளக் கல்வி மிக்க அவசியம். கண் எவ்வாறு அவசியமாகிறதோ அதுபோல் நமக்கு கல்வி மிக்க அவசியம்: கல்வி கண் போன்றது. நம் ஜீவிதத்திற்காக யாரிடமும் கைகட்டி நிற்கக் கூடாது. அடிமையாக வாழக் கூடாது. துர்நடத்தையில் பொருளீட்டல் கூடாது. நியாயமான வழியிலே பொருளீட்டி நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளல் வேண்டும். வஞ்சனை உலகில் ஏமாறாதீர்கள். கருத்தோடும் விழிப்போடும் உண்மையாய், ஊழியம் செய்து நல்ல பயன் அடையத்தக்க இடத்தை நாடுங்கள்.

நம் போன்ற ஏழை மக்களைக் காப்பாற்ற இச்சேவா இல்லம், நமக்குப் பெரிதும் நன்மையளிக்கின்றது. சகோதரிகளே, என்ன கஷ்டம் வந்தபோதிலும், எங்கள் இல்லத்தில் கஷ்டங்கள் நீங்கி சுகமடைந்தவர்கள் . எவ்வளவு பேர் தெரியுமா? அவர்களைப் பின்பற்றியே நாமும் சென்றால் நலமுண்டாகும், அஞ்சாதீர்கள்; நம்போன்ற பெண்களைச் சீர்படுத்திமுன்னுக்குவரப் பாடுபடும் சேவை இல்லம் நீடூழி வாழ்க!

(சௌபாக்கியம்)

# வீட்டு முற்றத்தில் பல்கலைக் கழகம்

## பாஸ்டன்:

அமெரிக்காவில் பல கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் மேற்படிப்பை நாட்டுப் புறத்து வீட்டு முற்றங்களில் சொல்லிக் கொடுக்கத் தொடங்கிவிட்டன. இவ்வாறு முதியோர் கல்வி பரவுகிறது. எந்த இடத்துக்கும் கல்லூரிப் பேராசிரியர் சென்று மக்களுக்கு ஆலோசனை கூறுகின்றனர். கல்வியூட்டுகின்றனர். பிள்ளைகளுக்கு விளையாட்டுகள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன; நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. இது ஜனநாயகத்தில் ஒரு முக்கியமான சோதனை. அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் பல்கலைக் கழகம் இத்துறையில் முதன்மையான பணி செய்கிறது. பின்வருவது "கிறிஸ்டியன் சயன்ஸ் மானிட்டர்" தினசரியில் இதுபற்றி வெளியாகியுள்ள செய்தி.

அமெரிக்காவில் கல்லூரி வகுப்பறைகளில் படிக்கும் பாடத்தை நாட்டுப் புறங்களிலுள்ள வீட்டு முற்றங்களில் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கல்லூரிகளுக்கும் சமுதாயத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாவதற்கு அது துணை செய்கிறது.

பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்கள் சிறிய நகரங்களுக்குப் போய் அங்குள்ள பாடசாலை ஆசிரியருக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அவர்கள் பள்ளிக் கூடங்களை மேற்பார்க்கிறவர்களோடும் ஆசிரியர்களோடும்பெற்றோர்களோடும் ஒன்றாய் அமர்ந்து உண்கிறார்கள்.

இவ்வாறு நாட்டுப்புறங்களிலுள்ள ஊர்களுக்குச் சென்று கல்வியறிவு ஊட்டும் முக்கியமான பல்கலைக் கழகங்களுள் ஒன்று பாஸ்டன் பல்கலைக் கழகம். 1953-ல் அந்த சர்வகலாசாலை அதன் ஸ்தாபகர் விழாவை ஐந்து நாள் கொண்டாடியது; பல்கலைக் கழகம் மக்களுக்குச் செய்துவரும் காரியங்கள் நடித்துக் காட்டப்பட்டன. அந்த சர்வகலாசாலையைச் சேர்ந்த 16 கல்லூரிகளும் பாடசாலைகளும் இலவசமாக மக்களுக்குச் சேவை செய்கின்றன; ஆகும் செலவை மட்டும் பெற்றுக் கொள்வதும் உண்டு.

இந்தப் பணி செய்யும் பேராசிரியர்கள் 1952-53 கல்வி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 46,000 மைல் பிரயாணம் செய்ய வேண்டியதிருந்தது. கல்லூரி அநுபவமும் அறிவும் நாட்டுப் புறங்களிலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் பொருட்டு அவர்கள் பனியையும் குளிரையும் பொருட்படுத்தாமல் பிரயாணம் செய்திருக்கிறார்கள்.

பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் அரசாங்கம் செய்ய வேண்டிய ஆராய்ச்சியைத் தாங்களே செய்து உதவுகிறார்கள். உடற்குறையுள்ள பிள்ளைகளுக்கு வைத்தியசாலை வைத்து உதவுகிறார்கள். நாட்டுப் புறங்களில் பல ஊர்களுக்குச் சென்று அவர்கள் பல வகுப்புகள் நடத்துவது பல்கலைக் கழகமே வீடு தேடி வந்தது போலாகும். பல்கலைக் கழக ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பல ஊர்களில் நாடகங்கள் நடித்துக் காட்டுகிறார்கள்.

சர்வகலாசாலைகள் இவ்விதமான பணி செய்வதால், பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் நல்ல தொண்டு செய்கின்றனவென்ற நம்பிக்கை பொது மக்களுக்கு உண்டாகிறது.

## டெலிபோன் மூலம் படிப்பு

தங்கள் வீடுகளை விட்டு வெளியே போய்ப் படிக்க முடியாத உடற் குறையுள்ள இளைஞர் படிப்பதற்கும் ஒரு வழி செய்யப்பட்டுள்ளது. டெலிபோன் மூலமாய் அவர்கள் கல்லூரிப் பாடங்களைப் படிக்கிறார்கள். யுத்த சேவை செய்ய உடற்குறையுள்ளவர்களான வீரர்கள் கிராமபோன் ரிக்கார்டுகளைக் கேட்டுப் படித்துக் கல்லூரிப் பட்டம் பெறுகிறார்கள். பேராசிரியர்கள் அவர்கள் இருக்கும் இடம் போய் அவர்களைப் பார்ப்பதால் அவர்கள் நன்றாய்ப் படிக்கக் கூடியதாகிறது. பாஸ்ட்டன் பல்கலைக் கழகத்தைக் சேர்ந்த பொதுக் கல்விக் கல்லூரியால் இந்தப் பணி நடைபெறுகிறது.

காரியாலயங்களில் விற்பனையாளராக வேலை செய்வோர் படிக்க வருகின்றனர். பேச்சுக்கலை பயில்வதற்காக வெளியூர்க் கடைகளில் வேலை செய்வோர் வருகின்றனர். சிறு நகரங்களில் தலைவராகவும், உத்தியோகஸ்தராகவும் இருப்போரும் படிப்பதற்கு வருகின்றனர். பள்ளிக்கூடத்திற்குப் போகாத பிள்ளைகள் வந்து பியானோ வாசிக்கப் படிக்கிறார்கள். பாஸ்ட்டன் சர்வகலாசாலையின் கல்வித் துறைப் பகுதியைச் சேர்ந்தவர்களிடம் படித்த பாஸ்ட்டன் பாடசாலை ஒன்றின் ஆசிரியர்களைப் பாடசாலை ஆட்சிக் குழு பாராட்டி, அவர்களது சம்பளத்தை உயர்த்தியது.

## பல்கலைக் கழகத்தில் படிக்கும் தாத்தா

ஸ்வீடன் நாட்டினின்று அமெரிக்காவில் குடியேறிய தாத்தா ஒருவர் பாஸ்ட்டன் சர்வகலாசாலையில் இப்பொழுது படித்துக் கொண்டிருக்கிறார். அவர் இளமையில் செக்கண்டரிப் பாடசாலைப் படிப்பும் முடித்தவரல்ல. அவரது மனைவி மக்கள் கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள். அவர் கல்லூரிக்கே போகாதவர். அவர் இப்பொழுது உபகாரச் சம்பளம் பெற்று, கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறார்.

“ஆரம்பப் பாடசாலைகளில் படித்துக் கொடுக்கும் முறை

யைப்" படிப்போர் பலர் இருக்கின்றனர். "தன்னைப் பகுத்தறிதல்" என்னும் பாடத்தைப் பலர் விருப்பமாய்ப் படிக்கிறார்கள். ஆசிரியரும் பாடசாலைத் தலைவர்களும் தங்கள் பாடசாலைகளின் உண்மை நிலையை அறிந்து, பாடசாலைகளுக்கு வேண்டியவை யாவை எனக் காண அப்படிப்பு துணை செய்யும்.

## பட்டிக்காட்டில் பல்கலைக் கழகம்

நாட்டுப்புறம் ஒன்றில் பாஸ்டன் சர்வகலாசாலை நடத்தும் வகுப்புகளுக்குப் போன எட்டு வயது சிறுமி ஒருத்தி, தான் விளையாட்டும் வேடிக்கையுமாய்ப் பாடம் படித்ததாகவும், அவ்வாறு அதற்குமுன் படித்ததில்லை என்றும் சொன்னாள். அவ்வூர்ப் பாடசாலைகளிலுள்ள எல்லா மாணவர்களையும் அழைத்து அவர்களுக்குப் பந்தய விளையாட்டுகள் முதலியன படித்துக் கொடுக்கிறார்கள், பல்கலைக் கழக ஆசிரியர்கள். 1951 ஜூலைக்குப் பின் இவ்வாறு நாட்டுப் புறத்தில் நடைபெறும் பாஸ்டன் பல்கலைக் கழக வகுப்புகளில் பிள்ளைகளும் பெரியோருமாக 1,300 பேர் படித்திருக்கிறார்கள்.

பாஸ்டனைச் சுற்றி ஐம்பது மைல் வரைக்குமுள்ள இடங்களுக்குச் சொந்த ரேடியோ மூலமாய் பாஸ்டன் சர்வகலாசாலை அறிவைப் பரப்புகிறது. பாஸ்டனிலுள்ள மற்றக் கல்லூரிகளோடு ஒத்துழைத்து, பாஸ்டன் சர்வகலாசாலை டெலிவிஷன், மூலமாய்க் கல்லூரிப் பாடங்களைப் போதிப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறது; அதற்ால் 10 லக்ஷம் வீடுகளில் பாஸ்டன் சர்வகலாசாலைப் படிப்புக்கு வழியுண்டாகும்.

## மாணவருக்கு வேலைக்கு வழிகாட்டல்

1952-ம் ஆண்டு பாஸ்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்தவர்கள் பல இடங்களுக்கும் சென்று உயர்தரப் பாடசாலை மாணவர் 24,000 பேரைச் சோதித்து, அவர்கள் மன நிலையையும் தொழில் நோக்கத்தையும் கண்டுபிடித்துச்சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் எந்த வேலை செய்யக்கூடிய திறமையுள்ளவர்கள் என்பதைக் கண்டு சொல்வது அவர்களுக்குப் பயன் விளைக்கிறது. கலக்க முற்றிருப்பவர்களுக்கும், கணவன்மாரோடு பிணக்குக் கொண்டுள்ள பெண்களுக்கும், தொழிலில் தோல்வி கண்ட ஆண்களுக்கும் குருமாரா யுள்ள பேராசிரியர் ஆலோசனை கூறுகின்றனர். இவ்வாறு 800 பேருக்கு ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

வைத்தியக் கல்லூரியிலுள்ளவர்கள் இலவசமாக ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பணம் கொடுத்தால், 10 லக்ஷம் டாலர் கொடுக்க வேண்டியதாகும்.

பாஸ்டன் பலகலைக கழகததுக

(46-ம் பக்கம் பார்க்க).

# G. O. No. 93, 30th January 1954

## Order–No. 93, Education, dated 30th January 1954.

In G. O. Ms. No. 1280, Education, dated 6th May 1939, it was ordered that members of the staff of aided schools and colleges should not stand as candidates for elections to a legislative body or local authority or take part in election campaigns. On a further examination of the subject with reference to representations received by them, the Government decided in 1940, that the restriction in question should apply only to the staff of aided elementary schools including higher elementary schools and that members of the staff of secondary shools and colleges and other institutions under private managements, which receive Government aid, might, if permitted by the management concerned, stand as candidates in any election to a legislative body or local authority and might take part in election campaigns.

2. As several representations for a reconsideration of the orders, so far as they related to teachers in aided elementary schools, were received, the Government re-examined the whole question and in G. O. Ms. No. 1557, Education, dated 30th June 1953, orders were issued permitting teachers in aided elementary schools including higher elementary schools which receive Government aid, to stand as candidates in any election to a legislative body or local authority and take part in election campaign subject to the following conditions:—

---

(45-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் டாக்டர் ஹெரால்ட் சி. கேஸ் பின்வருமாறு கருதுகிறார்: "மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு மேற்படிப்பு நடைபெறுகிறது. தனித்தும் கூட்டமாகவும் மக்கள் பல்கலைக் கழகத்துக்கு வந்து அவர்களது வருங்காலப் பிரச்னைகளைச் சொல்லி ஆலோசனை கேட்கிறார்கள்."

(i) If a teacher gets elected to a legislative body or local authority, he or she should cease to continue as teacher from the date of election and no grant should be assessed on his or her behalf from that date; and

(ii) the teacher entitled to stand for the election should be asked to take leave till the elections are over and exercise his or her right to stand for election, to canvass and to get elected. Such a person shall, however, be allowed to retain his or her lien on the post held in the school in which he or she is employed till the results of the elections are announced, so that the defeated candidate may be reappointed to his or her post.

The conditions laid down above for the participation of aided elementary school teachers in the elections, were made applicable also to teachers of aided secondary schools and colleges in regard to their participation in elections.

3. As representations have since been received seeking a clarification of these decisions of the Government, the following clarifications regarding the scope and intention of the orders conveyed in G. O. Ms. No. 1557, Education, dated 30th June 1953, is issued:—

(i) The Teacher's constituency of the Madras Legislative Council will be kept outside the purview of the G. O. in view of the provision made for such a constituency in pursuance of Article 171 (3) of the Consititution of India. The managements will, however, have the right to compel a teacher elected to the state Legislative Council, to take. leave for the whole period of his membership of the Council or for specified shorter terms, if they consider that such a person cannot do full justice to his work as a teacher. Where the managements do not exercise this right, they may allow him to continue to be a teacher even while he is a member of the Legislative Council. Necessary provisions to this effect will be embodied in

the model form of contract between teachers and their managements.

(2) The G. O. will not have any retrospective effect, i. e., it will not apply to teachers elected to a legislative body other than the Teacher's Constituency of the State Legislative Council, or to a local body prior to the date of issue of the G. O. or to the payment of grant in respect of a teacher so elected.

(3) The managements of aided schools and colleges will have the right to either grant leave or refuse leave when a teacher wants to exercise his or her right as a citizen to stand for elections other than those for the Teacher's Constituency of the State Legislative Council.

4. The Government have taken this opportunity to examine *de novo* the question of the need to permit teachers in aided educational institutions to stand for elections to any local body or legislative body other than elections for the Teacher's Constituency of the State Legislative Council. Under the existing orders, teachers in educational institutions run by the Government are disqualified for standing for election to any legislative body as they are Government servants. In the case of teacher in the employ of local bodies, the statutory disciplinary rules prohibit them from standing for elections to the Legislature and to local bodies. Practically, therefore, only teachers in aided educational institutions and unaided private educational institutions are free to stand for elections. The Government consider that it is neither necessary nor desirable to permit teachers in aided institutions to stand for elections to local bodies or to legislative bodies other than elections for the Teachers' Constituency of the State Legislative Council. The Government accordingly direct, in modification of the previous orders, that Government aid should not be extended to any private educational institution which allows any of its teachers to stand for elections to a local body or

to a legislative body other than elections for the Teachers's Constituency of the Madras Legislative Council. This order will take effect from the date of these Proceedings.

5. In their agreements with their teachers, the private managements can legally stipulate that their teachers should not stand for election to any local body or to any legislative body otherwise than from a Teacher's Constituency of the State Legislative Council, and they are advised to do so.

6. The Director of Public Instruction is requested to submit at an early date, draft amendments to the rules relating to elementary schools and the Grant-in-aid Code with reference to the orders in paragraphs 3 to 5 above.

(By order of the Governor)

S. VENKATESWARAN,

*Secretary to Government.*

---

## துண்டு துணுக்குகள்

வெம்பிலியிலுள்ள 'பிரிட்டிஷ் தொழில் ஸ்தாபனமொன்று கப்பல்களைச் சுரண்டி சுத்தம்செய்ய (பிளேட், அடித்தளம்) இயந்திர மனிதன் செய்துள்ளனர்.

காலத்துக்கு முந்திப்பிறக்கும் குழந்தைகளைக் காப்பாற்ற அமெரிக்க கிளீவ்லாந்தில் கார்டன் ஆம்ஸ்ராங் என்பவர் "இன்கு பேட்டர்" என்ற செயற்கைக் கருப்பையை (கருவி) அமைத்துள்ளார்.

தென்கலிபோர்னியோவில் பருத்தியைப் பறித்து ஒன்று சேர்க்க ஆட்களுக்குப் பதில் யந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன.

பைத்தியத்தை ஆபரேஷன் மூலம் குணப்படுத்தலாமாம். பிரஞ்சு டாக்டர் கண்டு பிடித்துள்ளார்.

"நியோப்ரின்" என்னும் ரப்பர் கலந்த காகிதத்தை வில்மிங்டன் கண்டு பிடித்தார். நனைந்தால் கெடாது; சோப்புப் போட்டுக் கழுவலாம்.

# முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் 4-வது மாகாண மாநாடு.

---

## மாயூரம் 16—5—54.

---

மாயவரத்தில், 16–5–54 அன்று நடைபெற்ற மேற்படி மாநாட்டில் தமிழ் நாட்டு முனிசிபல் ஆசிரியர் மத்திய சங்கத் தலைவர்

**திருவாளர் சி. கோவிந்தசாமி பிள்ளை**

அவர்கள் ஆற்றிய வரவேற்புரை :—

மாநாடு கூடுவதென்றால் சம்பள உயர்வு கோருவது, சலுகைகள் கேட்பது என்பதே பெரும்பான்மையோரின் அபிப்பிராயமாகும். நாம் என்ன தான் தீர்மானங்கள் நிறைவேற்றி, சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவந்தாலும் சர்க்காரின் பொருளாதார நிலை திருப்திகரமாயிராததால் சந்தர்ப்பம் நேரிடும் பொழுது பொருளாதார நிலை அபிவிருத்தியடைந்தால், நமது குறைகள் அனுதாபத்துடன் கவனிக்கப்படுமென்கிற ஒரே பல்லவி தான் சர்க்காரால் பாடப்பட்டு வருகிறது. பொருளாதார நிலை அபிவிருத்தியடைவது எப்பொழுது? ஆசிரியரின் குறைகள் நிவர்த்திக்கப்படுவது எப்பொழுது? அலை ஓய்ந்த பிறகு சமுத்திர ஸ்நானம் செய்ய விரும்புவோரின் கதை தான் இதற்கு உதாரணமாகும்.

## ஆசிரியத் தொழில்.

**அறிஞர்களே !**

தொழில்களில் ஆசிரியத் தொழில் ஒப்பற்ற சிறந்த தொழிலாகும். சாக்ரடீஸ் முதல் பல அறிஞர்கள் ஆசிரியத் தொழிலைப் பலவாறு போற்றியுள்ளனர். குழந்தைகளைப் பண்படுத்துவதில் பெற்றோர்களைவிட ஆசிரியர்களின் பங்கு அதிகம். ஆகவே ஆசிரியர்களை, ஐங்குரவர்களில் சேர்த்துள்ளனர். ஆசிரியரான சீனிவாச சாஸ்திரியார், மகாத்மா காந்தி, அமெரிக்க பிரசிடெண்ட் வில்சன், சேலம் விஜயராகவாச்சாரியார் முதலியவர்களெல்லாம் ஆதியில் ஆசிரியர்களாயிருந்து பின்னர் தான் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள்

நாட்டிலேயுள்ள மற்றெல்லா உத்தியோகங்களையும் விட, முக்கியமான உபயோகமுள்ள தொழிலைச் செய்கிறவர்கள் பள்ளிக்கூட ஆசிரியர்களே. ஏனெனில் அவர்கள்தான் சின்னஞ்சிறு குழந்தைகளை உருப்படுத்தி, அவர்களுடைய அறிவை வளர்த்து, மனத்தை விசாலிக்கச் செய்து, அவர்களை வருங்காலத்துப் பிரஜைகளாகச் செய்கிறார்கள். மற்றெந்தத் தொழிலையும் விட கஷ்டமான தொழிலைச் செய்பவர்கள் ஆசிரியர்கள் தான். சிறு குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பது, அதிலும் நாற்பது பிள்ளைகளை வைத்துக் கொண்டு வகுப்பு நடத்துவதென்பது எவ்வளவோ கஷ்டமான

காரியம் அதற்கு எவ்வளவோ பொறுமையும், சகிப்புத்தன்மையும், சாதுரியமும், திறமையும் வேண்டும். அப்படிப்பட்ட ஆரம்ப ஆசிரியர்கள் மிக மிகக் குறைந்த சம்பளம் பெற்றாலும், மற்ற உத்தியோக வர்க்கங்களையும் தொழிலாளி வர்க்கங்களையும் போல், தங்களுடைய சொந்த நலனுக்காகக் கிளர்ச்சி செய்ய முன்வருவதில்லை. இதற்குக் காரணம் முதலாவதாகப் பள்ளிக்கூடங்களிலேயே அவர்களுடைய மனோசக்தியெல்லாம் செலவழிந்து வெளியில் வரும்போது அவர்கள் உடல், உள்ளம் சோர்ந்து, நடைப்பிணங்களாய் வருவதுதான். இரண்டாவது காரணம், ஆசிரியர்களின் பொறுப்பு உணர்ச்சியேயாகும். மற்றவர்களைப்போல் பள்ளிக்கூட ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தஞ் செய்வது, ஊர்வலம் போவது, கோஷம் இடுவது முதலான காரியங்களைச் செய்வதால் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு ஒரு தீய உதாரணமாகும் என்றும், பாடசாலைகளில் இப்பொழுது உள்ள கட்டுப்பாடும் குலைந்துவிடும் என்றும் கருதுகிறார்கள். இவ்வாறு கடமையை யுணர்ந்து நடந்துகொள்வதற்காக ஆசிரியர்களைச் சர்க்கார் பாராட்ட வேண்டும். அவர்களுடைய கட்சியைப் பொதுமக்களே எடுத்துக்கொண்டு போராடவேண்டும். அதற்குப் பதிலாக, பள்ளிக்கூட ஆசிரியர்களை ஊருக்கு இளைத்தவர்களாகப் பாவித்து அவர்களை அலட்சியம் செய்வது பாவம். அவர்களுக்கு அநீதி செய்வது கொடுமை. ஆசிரியர்களுக்குச் சமூகம் செய்யும் கொடுமையும் அநீதியும் ஒன்றுக்குப் பத்துமடங்காகப் பெருகி சமூகத்தையே திரும்பப்பாதிக்கும்.

## குடும்பத்தொல்லை.

வீட்டிலே தரித்திரம் பிடுங்கித் தின்றால் சாதாரண மனிதன் எவனுக்கும் கோபமும், ஆத்திரமும் பொங்குவது இயல்பு. அந்தக் கோபத்தையும் ஆத்திரத்தையும் மற்றவர்கள் மேல் காண்பிப்பதும் இயல்புதான். ஆசிரியர்களுடைய வீட்டிலே தரித்திரம் பிடுங்கித் தின்றால் குடும்ப வாழ்க்கையே நரகமாய்த்தானிருக்கும். அதன் பயனைப் பள்ளிக்கூடத்துக் குழந்தைகள்தான் அனுபவிக்க நேரிடும். குழந்தைகள் நன்றாகப் படித்து, நல்ல குணங்களைப் பயின்று, நல்ல பிரஜைகளாக வேண்டுமென்றால் அதற்கு அடிப்படை பள்ளிக்கூட ஆசிரியர்கள் பிள்ளைகளிடம் அன்புடனே நடந்துகொள்வதுதான். எரிந்து விழுகிற ஆசிரியர்களிடம் படிக்கிற குழந்தைகளுக்கு முதலாவதாக பாடம் சரியாய் வராது. இரண்டாவதாக குணம் சரியாக அமையாது. மூன்றாவது வருங்காலத்தில் அவர்கள் நல்ல பிரஜைகளாவதும் அபூர்வம். ஆசிரியர்கள் பிள்ளைகளிடம் அன்பாக இருக்க வேண்டுமானால் அவர்களுக்கு வீட்டுத்

தொல்லைகள் இருக்கக் கூடாது. கௌரவ ஜீவனத்துக்கு அவசியமான சம்பள விகிதம் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். சமூகத்தின் நன்மைக்காகவும், குழந்தைகளின் க்ஷேமத்துக்காகவும் இதைச் செய்யவேண்டும். வருங்காலத்தில் பாரத நாட்டின் மேன்மைத்துக்காக இதை அவசியம் செய்தே யாக வேண்டும். எண்ணும் எழுத்தும் கண்ணுக்கிணையானவையென்று ஔவைப் பிராட்டியும், பொய்யாமொழிப் புலவரும் கூறினார்கள். எண்ணும் எழுத்தும் கற்பிக்கும் உபாத்தியாயர்களைக் கண்ணைத் திறந்து வைப்பவர்கள் என்று நமது பெரியோர்கள் கூறினார்கள். அதிலும், கண்ணைத் திறந்து வைப்பவர்கள் இறைவனுக்கே சமமானவர்கள் எனக்கருதி, எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்றும் அருளினார்கள். அப்படியெல்லாம் நமது முன்னோர்களால் போற்றப்பட்ட ஆசிரியர்மார்கள், இன்று உண்ணும் உணவுக்கும், உடுத்தும் உடைக்கும், இருக்கும் இடத்துக்கும் கஷ்டப்பட்டுக் கொண்டு, நாட்டிலேயே எந்த உத்தியோகஸ்தர் அல்லது தொழிலாளர் இனத்தையும்விடச் சொற்ப சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தும் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு, அதிகார வர்க்க இந்தியா கவர்ன்மெண்டார், சார்ஜண்ட் என்னும் ஆங்கிலேயர் தலைமையில் கல்வி சீர்திருத்தத்துக்காக, ஆலோசனை சொல்லும்படி நியமித்த கமிட்டியார், ஆரம்பப்பாடசாலை ஆசிரியர் எவருக்கும் குறைந்த சம்பளம் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். ஆசிரியரின் சம்பளமானது, அவரது குடும்பம் நடத்துவதற்குப் போதுமான அளவில் கணிசமாக ஏற்படுத்தப்படவேண்டும். எவ்வித ஆடம்பரமுமின்றி எளிய வாழ்க்கை நடத்துவதற்காவது சாத்தியமான முறையில் சம்பளம் நிர்ணயிக்கப்படவேண்டும்.

சர்க்காரால் நியமிக்கப்பட்ட மத்திய கல்வி ஆலோசனைக் கமிட்டியார் (Central Advisory Board of Education), நன்கு ஆராய்ச்சி செய்து, தீர்க்க தரிசனத்துடன் வெளியிட்டுள்ள உண்மைகளைச் சர்க்கார் கவனித்து, ஆவன செய்ய வேண்டும். ஷை கமிட்டியார் குறிப்பிட்டுள்ள உண்மைகளாவன :

"கல்விநிலை உண்மையில் சீர்பெற வேண்டுமாயின், ஆசிரியரின் தொழில்நிலை உயரவேண்டும். ஊதியம் கவர்ச்சி தரத்தக்க நிலைமையில் அமைக்கப்பட வேண்டும். ஆரம்பக்கல்வி சம்பந்தப்பட்டவரையில், அத்தகைய சீர்திருத்தங்கள் செய்யப்படாமல், பரிகசிக்கத்தக்க கேவல முறையில் இருந்து வருகிறதென்பதை கமிட்டியார் உணருகின்றனர். ஆசிரியரின்நிலை இவ்விஷயத்தில் திருப்திகரமாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும்" என்பதே

யாகும். இது சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட மத்திய ஆலோசனைக் கமிட்டியின் அறிக்கை.

1947ஆம் பிப்ரவரி 5உ சுதேசமித்திரன் பத்திரிகையானது தன் தலையங்கத்தில் "பொறுமையா? பலவீனமா?" என்கிற மகுடமிட்டு, சர்க்காரின் புதிய சம்பள திட்டத்தைக் கண்டித்தது. ஷை பத்திரிகை குறிப்பிட்டதாவது :—

"சென்னை சர்க்கார் சம்பளத்திருத்தத் திட்டத்தில், பல விபரீதங்களைச் சுட்டிக் காட்டலாம். ஆனால் மற்றவைனத்தையும் விட அதிகமாகக் கண்ணை உறுத்துவது, ஆசிரியர்களுக்கு இழைத்துள்ள அநீதியே. கல்வியின் மகிமையையும், அதில் ஆசிரியருக்குள்ள முக்ய ஸ்தானத்தையும் பற்றி, அதிகாரிகள் உள்பட பலரும் அளவளாத நாளில்லை. ஆசிரியருக்குத் தற்போதுள்ள அந்தஸ்தோ, ஊதியமோ அவர்கள் செய்யும் சேவைக்குப் பொருத்தமானவையல்லவென்பதும் அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மையெனினும், பொதுவாக சம்பள திருத்தம் பற்றித் தாங்கள் பட்டவர்த்தனமாக்கியுள்ள கொள்கைகளை சர்க்கார் ஆசிரியர் விஷயத்தில் எந்த அளவில் கடைபிடித்திருக்கின்றனர்? ஆரம்ப ஆசிரியர் சம்பந்தப்பட்ட வரையில், சர்க்காரின் புதிய திட்டத்தில் காணப்படும் சம்பள விகிதம், அவர்களது நிலைமையில் ஒருவித மாறுதலையும்விளைவித்துவிடப்போவதில்லை இவ்விகிதம், முன்பு, ஆலோசக சர்க்காரது கமிட்டி சிபார்சு செய்த அளவையும் விடக் குறைவு. பொதுவாக ஆசிரியர்கள் விஷயத்திலுள்ள அலக்ஷிய புத்திதான் இத்தகைய அநீதிகளுக்கெல்லாம் காரணமோ வென்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. சகிக்க முடியாத கஷ்டங்களுக்கிடையே, அவர்கள் இதுவரை காட்டிவந்திருக்கும் சகிப்புத் தன்மை பிரமிக்கத் தக்கதாகும். வடக்கே பலவிடங்களில், அவர்களுடைய சகாக்கள், ஊதிய உயர்வுக்காக நேரடி முறையைக் கையாண்டு, வெற்றி பெற்றதைக் கண்டபின்னரும், நம் மாகாண ஆசிரியர்கள், அம்முறையைப் பின்பற்றவில்லை. அந்த அபாரமான பொறுமைக்காக அவர்கள் அவ்வளவுக்கவ்வளவு நமது பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர்களாவர். ஆனால், சர்க்கார் அவர்களுடைய பொறுமையை, பலவீனத்துக்கே அறிகுறியாகக் கொண்டு விட்டனரோ வெனத் தோன்றுகிறது. அவ்வாறாயின், அது நிலைமையை வீணாக விகாரமாக்குவதிலேயே போய் முடியும். அதனால் யாருக்கும் லாபமில்லை. சமுதாயம் முழுதுக்கும் மகத்தான நஷ்டமே ஏற்படும் என்று எச்சரிப்பது நமது கடமை."

ஷை பத்திரிகையில் கூறியுள்ளது போல, நம் மாகாணத்திலுள்ள ஆசிரியர்களும் எவ்வளவோ பொறுமையுடன் தான் இருக்கின்றனர். ஆயினும் ஆசிரியத்தொழிலில் தாங்கள் ஈடுபட நேர்ந்

தைதப்பற்றி மிகவும் வருந்துகின்றனர். தமக்குப் பிற்பட்டு வரும் இளைஞர்களும் இத்தொழிலில் ஈடுபட்டு தம்மைப் போல மனம் நொந்து மடியக் கூடாதே என்னும் கவலைப்படுகின்றனர். சர்க்காரிடம் பல தடவைகளிலும் முறையிட்டு முறையிட்டு அலுத்துப்போன ஆசிரியர்கள், ஒரு நூதன வகையில் கிளர்ச்சி செய்யவும்துணிந்தனர். அதாவது உபாத்திமைத் தொழிலுக்கு யாரும் வரக் கூடாது என்பதேயாகும். ஆசிரியத் தொழிலில் ஈடுபடுவோரைத் தடுப்பதற்காக துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டனர். சினிமாக் கொட்டகைகளில் விளம்பரம் செய்யவும் ஆரம்பித்தனர். அவ்விளம்பரமாவது:—

> "வறுமையில் ஆழ்த்தி வாட்டி வதைப்பது,
> உயிருக்கே உலை வைப்பது எது? ஆசிரியத் தொழிலே.
>
> இளைஞர்களே ஏமாறுதீர்கள்!
>
> ஆசிரியத் தொழிலுக்கு ஆளாகாதீர்கள்!
>
> மானிட வாழ்க்கைக்கே மாபெரும் நஷ்டம்"
>
> ஆசிரியர் சங்கத்தார்.

ஷை விளம்பரமானது பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டன. தமிழ் நாட்டில் தலைசிறந்த ஒரு பத்திரிகையானது ஷை விளம்பரத்தைப் பிரசுரித்து, "சேராதீர்கள்" என்கிற தலைப்புடன் கீழ்க்கண்ட குறிப்பை வெளியிட்டது.

"இந்தப் பக்கத்தின் அடியிலுள்ள விளம்பரத்தைத் துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு மாயூரம் ஆசிரியர் சங்கத்தார் வினியோகித்து வருகிறார்கள். நமக்கும் ஒரு பிரதி அனுப்பி வைத்திருக்கிறார்கள். எல்லோரும் அவரவர்களின் உத்தியோகத்தைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொள்வதுதான் இயற்கை. பாடப் புத்தகங்களில் "வண்ணான்" என்ற வார்த்தையை உபயோகிக்கக் கூடாதென்றும், சலவைத் தொழிலாளி என்று குறிப்பிட வேண்டுமென்றும், அந்தத் தொழில் செய்வோர் கிளர்ச்சி செய்கிறார்கள். இந்த மனித இயற்கைக்கு மாறாகப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் தங்கள் தொழிலைத் தாழ்த்திக்கொண்டு, அதில் ஒருவரும் "சேர்ந்து விடாதீர்கள்" என்று பிரச்சாரம் செய்யவேண்டுமென்றால், இதிலிருந்தே அவர்களுடைய மனம் எவ்வளவு புண்ணாயிருக்க வேண்டுமென்பது தெரிந்து கொள்ளலாம் இத்தகைய மனப்புண்ணுடன் அவர்கள் குழந்தைகளுக்கு என்ன பாடம் சொல்லிக் கொடுக்க முடியும் என்பு

தைக் கவனிக்கவேண்டும். அதாவது நமது காங்கிரஸ் மந்திரிகள் முக்கியமாகக் கல்வி மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டும்.''

## பெரியோர்களே!

இதுகாறும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு வந்துள்ளவர்களுடைய தாங்கவொண்ணுக் கஷ்டங்களை, கனம் அமைச்சர்கள் முன்னிலையில் இப்பொழுது எடுத்துக் கூறுவதற்குக் காரணம், நமது காங்கிரஸ் சர்க்கார் ஏழைப் பங்காளரைப் பிரதமராகக்கொண்ட தேசிய சர்க்கார், பாட்டாளி மக்களின் பரம தந்தையாகிய தனிப் பெரும் தலைவரைக்கொண்ட இராச்சிய சர்க்கார், இனிமேலாவது, ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் அந்தஸ்தை உயர்த்துவதற்கான, தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கேயாகும். சர்க்காரின் பொருளாதார நிலையில் நெருக்கடி ஏற்படுமென்பது உண்மையே. அதை எவரும் மறுக்க முடியாது. பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதற்கான சிறந்த பல திட்டங்களை சர்க்கார் உடனடியாக வகுக்கவேண்டும். நமது காங்கிரஸ் சர்க்கார், இந்நாள் வரையில் ஏதோ ஒருவாறு அலக்ஷியமாய் இருந்துவிட்ட போதிலும், இவ்வாண்டு ஏப்ரல் 21-ம் தேதி, நமது கனம் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில், ஆசிரியரின் நிலையைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமித்தது பாராட்டத்தக்க விஷயமேயாகும். இத்தகைய நியமனம் ஏற்பட்டது, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி சரித்திரத்திலேயே இது தான் முதல் தடவையாகும். ஆசிரியரின் அந்தஸ்து உயருவதற்கு, நமது மாபெருந் தலைவர், ஆவன செய்வாரென்பதற்கும் இதுவே ஓர் சிறந்த அறிகுறியுமாகும்.

பொருளாதார நிலை பாதிக்கக் கூடாத வகையில், சர்க்கார் சில சலுகைகளையேனும் உடனடியாக அளிக்க முன்வரலாம். அவற்றைக் கொண்டாவது, ஆசிரியர் கொஞ்சம் திருப்தியடைவர். அவ்வாறு உடனடியாக அளிக்கக் கூடிய சலுகைகளாவன :—

1. 1933ம் வருடத்திற்கு முன்னர் வேலைக்கமர்ந்த ஆசிரியருக்கும், 1933க்குப் பிறகு வேலைக்கமரும் ஆசிரியருக்கும் தற்போது அளிக்கப்பட்டு அமுலிலுள்ள பாரபக்ஷமான ரஜா விதிகளைத்திருத்தியமைத்து, எல்லோருக்கும் ஒரே விதமான ரஜா விதிகளை அளித்து அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

2. தற்போது ஆசிரியர்களுக்கு தனித்தனியாக அளிக்கப்படும் சம்பளம், பஞ்சப்படி இரண்டையும் ஒன்று சேர்த்து, ஒரே அடிப்படைச் சம்பளமாக நிர்ணயம் செய்ய வேண்டும்.

3. ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் குழந்தைகளுக்கு மட்டுமாவது கல்லூரிப் படிப்பு முடிய, இலவசக் கல்வி வசதி அளிக்கப்பட வேண்டும்.

4. மாகாணத்தில் ஒரு லட்சத்திற்கு அதிகமாயுள்ள ஆரம்ப ஆசிரியர்களுக்கு சட்டசபை, மேல் சபைகளில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். ஷை பிரதிநிதித்துவமும், நாமினேஷன் மூலகமாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

இந் நான்கு சலுகைகளையும் நமது காங்கிரஸ் சர்க்கார் உடனடியாக அளித்துவிட்டு, பிறகேனும் நிதி வருவாயைப் பெருக்கி, ஆசிரியரின் வாழ்க்கைத் தரத்துக்கு உகந்தவாறு, கணிசமான ஊதிய உயர்வு ஏற்படுத்த வேண்டுமென்று மிக்க தாழ்மையுடன், கனம் முதலமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர்

### பிராஞ்சு போஸ்ட்மாஸ்டர் வேலை பார்க்கலாம்

#### சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை போஸ்ட் மாஸ்டர் ஜெனரலையும், கல்வி இலாகா டைரக்டரையும் கலந்து கொண்டு ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆரம்ப ஆசிரியர்கள் தங்களது கிராமங்களில் பிராஞ்சு போஸ்ட்மாஸ்டர்களாக வேலை பார்க்கலாம் என்று சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

ஆசிரியர்களின் வேலைக்குத் தடங்கல் ஏற்படாதவாறுதான் பிராஞ்சு போஸ்ட்மாஸ்டர்களின் வேலை நேரம் இருப்பதாக போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் கூறுவதை கல்வி இலாகா டைரக்டர் அங்கீகரித்திருக்கிறார்.

ஏதாவது கஷ்டமேற்படக்கூடிய குறிப்பிட்ட சில கேஸ்கள் பற்றிச் சர்க்கார் தனியாகவும் உத்தரவு பிறப்பித்து அவற்றை நீக்குவர்.

சென்ற ஜனவரியில் சேலம் ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீஸர் புதிய ஆரம்பக் கல்வி திட்டத்தின் இரு ஷிப்ட்களை ஆரம்ப ஆசிரியர் கவனிக்கும்போது போஸ்ட் மாஸ்டர் வேலையையும் கவனிக்க முடியாது என்றும் அவ்விதம் செய்யக் கூடாது என்றும் உத்தரவிட்டிருந்தார். அதன் விளைவாகவே இப்பொழுது இந்தப் புதிய உத்தரவு வெளியாகியிருக்கிறது.

# செய்திச் சுருள்

## சமாதான மாநாடு!

ஐரோப்பாவில் உள்ள ஜெனிவாவில் சென்ற ஒரு மாத காலமாக சமாதான மாநாடு நடைபெற்று வருகிறது. பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய ஐந்து நாடுகளின் வெளிநாட்டிலாகா அமைச்சர்களாகிய தோழர்கள் அந்தோனி ஈடன், பாஸ்டர் டல்லஸ், ஜியார்ஜஸ் பிடால்ட், மாலடோவ், சோஎன்லாய் ஆகிய ஐவரும், அந்தந்த நாடுகளின் சார்பாக அங்கே பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றனர். பொதுவாக உலகத்தில் போர் வெறியைக் குறைத்து சமாதான சூழ்நிலையை அருபபச் செய்வது எப்படி என்பதைப் பற்றியும், குறிப்பாக இந்தோ சீனாவில் நடைபெற்று வருகிற உள்நாட்டுப் போராட்டத்தை நிறுத்த என்ன வழி என்பதைப் பற்றியும் மேற்படி மந்திரிகள் பேசி வருகின்றனர். மாநாடு தொடங்கி மாதம் ஒன்றாகியும் இன்னமும் உருவான முடிவு எதுவும் ஏற்படவில்லை.

## இலவசக் கல்வி

ஜூன் மாதம் பள்ளிக்கூடங்கள் திறந்ததும், தங்கள் எல்லைக்குள் இருக்கிற எல்லாப் பள்ளிகளிலும் ஏழாவது வகுப்பு வரையில் கல்விப் போதனையை இலவசமாக அளிப்பது என்று திருவாங்கூர் கொச்சி அரசாங்கம் முடிவு செய்து, தேவையான உத்தரவுகளையும் பிறப்பித்து விட்டது. ஏற்கனவே அந்த மாநிலத்தில் ஐந்தாவது வகுப்பு வரையில் கல்வி இலவசமாக அளிக்கப் பட்டு வந்தது. இப்போது அந்த இலவச வசதி, ஆறு—ஏழாவது வகுப்புகளுக்கும் தரப்பட விருக்கிறது. இந்த ஏற்பாட்டிற்காக சுமார் 26 லட்சம் ரூபாயை திருவாங்கூர் கொச்சி அரசாங்கம் செலவிட இருக்கிறதாம். இந்த ஏர்பாடு வெற்றி பெற்றால், அடுத்த ஆண்டிலிருந்து, எட்டாவது வகுப்புக்கும் இலவசக் கல்வியை அளிக்க அரசாங்கம் முயலுமாம்.

## கொடுக்கத்தான் வேண்டும்!

ஆரம்ப ஆசிரியர்கள், தங்களுடைய ஊதியத்தை உயர்த்தும்படிக் கேட்பது முற்றிலும் நியாயம் என்றும், அதிக ஊதியம் கொடுக்கத்தான் வேண்டும் என்றும், ஆந்திர மாநில அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கிற கல்வி நிபுணர் கமிட்டி கருத்துரை வழங்கியிருக்கிறது.

## இப்படியும் ஒரு விசித்திரம்!

காஷ்மீர் நாட்டில் தற்போது தேர்தல் நடைபெற்று வருகிறது. இந்தத் தேர்தலின் போது, காஷ்மீரில், இராமபான் என்ற நகரத்தில் விசித்திரமான தேர் நிலைமை இருப்பது தெளிவாகியிருக்கிறது. இந்த நகரத்தில் ஒரு தேர்தல் தொகுதி

இருக்கிறது. அந்தத் தொகுதியில் உள்ள மொத்தஓட்டர்களின் எண்ணிக்கை நான்கே நான்கு பேர்தான். எப்படி இருக்கிறது இந்த விசித்திரம்! நான்கு பேர் தான் ஒரு தொகுதியில்! அந்த நான்கு பேருக்கு ஒரு பிரதிநிதி! வேடிக்கையாக இல்லையா சமாசாரம்?

## மின்சாரம்! இங்கே!!

ஆந்திர மாநிலம் உள்ளிட்ட சென்னை ராஜ்யப் பகுதியில், மின்சார உற்பத்தித் தொழிலில், 1953–ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ம் தேதிக் கணக்குப்படி, மொத்தம் 4017 லட்சம் ரூபாய் மூலதனம் போடப் பட்டிருக்கிறது. இந்த மின்சார உற்பத்தி நிலையங்களின் மொத்த மதிப்பு 59 கோடியே 56 லட்சம் ரூபாய் ஆகும். 1952–53–ம் ஆண்டில் மட்டும், இந்த நிலையங்கள், 79 கோடியே 74 லட்சம் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கிறது. தற்போது சென்னை மாநிலத்தில் 2456 கிராமங்களுக்கு மின்சார வசதி இருக்கிறது. மேற்படி ஆண்டில், இந்த மின்சார நிலையங்களிலிருந்து அரசாங்கத்துக்குக் கிடைத்த நிகர லாபம், 130 லட்சம் ரூபாய் ஆகும்.

## 12லட்சம்–கடற்கரையில்!

பம்பாய் நகரக் கடற்கரையில், மணலுக்குக் கீழ், 12 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நோட்டுக்கள் புதைக்கப்பட்டுக் கிடந்தனவாம். பம்பாய் நகர சுங்க – இலாகா அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். வெளி நாடுகளிலிருந்து யாரோ சில வியாபாரிகள் திருட்டுத்தனமாகத் தங்கம் வாங்கியிருக்க வேண்டுமென்றும், அந்தத் தங்கத்திற்கு விலையாக இந்தப் பணத்தை அவர்கள் அங்கே புதைத்து வைத்திருப்பார் என்றும், எவரும் காணாத நேரத்தில், பிற நாட்டு வியாபாரிகள் இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு நடந்திருக்கும் என்றும், சுங்க அதிகாரிகள் கருதுகின்றனர்.

## மருந்துச்செடி–வெளிநாட்டுக்கு!

பாம்புக் கலவா என்கிற பெயருடைய மருந்துச் செடி, தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 53 டன், அமெரிக்காவுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறதாம். அமைச்சர் பக்தவத்சலம் அறிவிக்கிறார். இரத்தக் கொதிப்பை அடக்குவதில் இந்த மருந்து மிகவும் பயன்படுகிறதாம். மிகவும் சரி. ஆனால் இந்தச் செடியை வெளி நாட்டுக்கு அனுப்பி, அவர்கள் அதனைக் கொண்டு தயாரித்த மருந்துகளை இங்கே அனுப்பி, அவற்றை அதிக விலை கொடுத்து வாங்குவதற்குப் பதிலாக நாமே அச் செடியிலிருந்து மருந்துகளை இங்கேயே ஏன் தயாரிக்கக் கூடாது? எவரும் கேட்பர் இக் கேள்வியை! கவனிக்க வேண்டும் அரசாங்கம்.

## நியாயம் தானே அவர்கள் கூறுவது!

ஐதராபாத் மாநிலத்தை மூன்று துண்டுகளாக உடைத்து, மராட்டியப் பகுதியை மராட்டிய மாநிலத்தோடும், கன்னடப் பகுதியைக் கன்னட மாநிலத்தோடும், தெலுங்குப் பகுதியை ஆந்திர மாநிலத்தோடும் இணைத்துவிட வேண்டும்—அதுதான் முறை என்று, ஐதராபாத் காங்கிரஸ் கமிட்டி, மாகாணப் பிரிவினைக் கமிஷனிடம் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். நியாயம் தானே அவர்கள் கூறுவது! அந்தந்த மொழிவழிப் பகுதிகள் அதனதன் மாகாணத்தோடு இணைவதுதானே ஒழுங்கு! அப்போதுதானே மொழிவழி மாகாணங்கள் உருவாகும்! அத்தகு மாநிலங்கள் அமைந்தால் தானே நாடு நலனடையும்! ஐதராபாத் காங்கிரஸ் கமிட்டியின் கருத்து விரைவில் நிறைவேறட்டும்!

## அப்பப்பா! பதவி வேண்டாம்!

"நான் ஒரு சாதாரணத் தொண்டனாக இருப்பதைத்தான் விரும்புகிறேன். மந்திரி வேலையை அல்ல. நான் மந்திரியான பிறகு என்னுடைய மதிப்பு எவ்வளவோ குறைந்து போய் விட்டது. கண்டவர்கள் கண்டபடி பேசுகிறார்கள். நாலா புறங்களிலிருந்தும் நாள் தோறும் கண்டனக் கணைகள் பலநூறு என்னைத் தாக்கியபடி இருக்கின்றன. எனவேதான் நான் கூறுகிறேன்—இந்தப் பதவி வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!" என்று பேசியிருக்கிறார் தோழர் சஞ்சீவி ரெட்டி—ஆந்திர மாநிலத் துணை முதலமைச்சர். மந்திரிப் பதவி! அதிலும் எத்தனை சங்கடம்!!

## மாதா மாதம் 400!

அனைத்திந்தியப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு இனி மாதா மாதம் 400 ரூபாய் சம்பளம். அதுவன்றி, பாராளுமன்றம் கூடுகிற நேரங்களில், நாள் ஒன்றுக்கு 21 ரூபாய் அலவன்ஸ். அவ்வளவுதானா சலுகைகள்? இன்னமும் உண்டு. எந்த சமயத்திலும், இந்தியாவில் உள்ள எந்த ரயில்வேயிலும், இலவசமாக, இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்யும் உரிமையும் இனி அவர்களுக்கு உண்டு. இந்த அகில இந்திய இலவச பாசைத் தவிர்த்து, பாராளுமன்றக் கூட்டத்திற்கோ அல்லது அதன் வேலையைக் கவனிக்கவோ வரும் அதன் உறுப்பினர்கட்கு, ஒரு இரண்டாம் வகுப்பு டிக்கட் ஒரு மூன்றாம் வகுப்பு டிக்கட் ஆகிய இரு டிக்கட்டுகளுக்குரிய கட்டணத் தொகையைப் பெறவும் உரிமை உண்டாம். இத்தனை உரிமைகளையும் அவர்களுக்குத் தருகிற சட்டம், 13-5-54 அன்று, பாராளுமன்றத்தில் நிறைவேறிவிட்டது.

## அருமையான ஏற்பாடு

பிரிட்டனில் இருக்கிற அமெரிக்கப் படை வீரர்கள், அங்கே ஒவ்வொரு முறை ஒரு லாரியை ஓட்டுகிறபோதும் அந்த லாரியின்மீது, அதன் விலை எவ்வளவு என்று எழுதப்பட்டிருப்பதைப் படிக்க நேரிடுகிறது. அது போலவே அவர்கள் டைப் அடிக்கிற ஒவ்வொரு தடவையும், அந்த டைப்ரைடிங் மிஷின் மீது அதன் விலை தீட்டப்பட்டிருப்பதைக் காணவேண்டியிருக்கிறது. அவ்வாறே அவர்கள் உட்காருகிற நாற்காலியின்மீதும் எழுதுகிற மேஜைமீதும் அவ்வவற்றின் விலை எழுதப்பட்டிருப்பதை அவர்கள் பார்க்க வேண்டியிருக்கிறதாம், அமெரிக்க அரசாங்கம் இந்த ஏற்பாட்டை என் செய்திருக்கிறதாம் தெரியுமா? "தம்பி! நீயுந்க லாரியில் ஏறிக் கொண்டு ஊரைச் 'சுற்றுதே!" அவசியமில்லாதபோது டைப் அடிக்காதே! தேவையில்லாத சமயங்களில் மேஜை நாற்காலிகளை வாங்கிக் குவிக்காதே. ஒவ்வொரு முறை இவற்றைப் பயன் படுத்துகிறபோதும், உன் நாட்டு மக்கள் பாடுபட்டுத் தேடிக் கொடுத்திருக்கிற வரித் தொகையிலிருந்துதான் இவை வாங்கப்பட்டிருக்கின்றன. எனவே உன் செலவில் சுருக்கமாயிரு—சுருக்கமாயிரு—இல்லையேல், உன் நாட்டுப் பிரஜைகள்—வரி கொடுக்கும் மக்கள், உன்னைப் பழிப்பார்கள். நினைவிருக்கட்டும்" என்று கூறுமல்கூறுவதற்குத் தான் இந்த ஏற்பாடாம். மிகவும் அருமையான ஏற்பாடல்லவா இது? இந்த வகையான ஒரு திட்டம் இந்த நாட்டிலும் வந்தால்? எவ்வளவோ நன்றாயிருக்கும்! ஆனால் வருமா?

## பட்டாபிராமன் பேசுகிறார்!

"இன்னும் நூறு ஆண்டுகள் கழிந்தாலும்சரி,இந்திமொழியால் இந்தியாவின் தேசிய மொழியாக ஆகவே முடியாது. ஏனெனில், இந்தியில், அன்றன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சொற்கள் ஏராளமாகக் கிடையாது. சிறப்புள்ள இலக்கியங்களோ துளியும் இல்லை. தேசிய மொழியாக இருப்பதற்குத் தேவையான தகுதி இல்லாத இந்த மொழி எப்படி இந்தியாவின் தேசிய மொழியாக இருக்க முடியும்?" என்று முழக்கமிட்டிருக்கிறார் தோழர் பட்டாபிராமன்! அவர் ஓர் 'ஏனோதானோ' அல்ல, எவரும் அறியாதவரல்ல—காங்கிரஸ் கட்சியின் பிரபலஸ்தர். அந்தக் கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக வீற்றிருப்பவர். அவர் இதனைக் கூறியிருப்பதும் வீதியின் ஓரத்திலல்ல; ஆல்மரத்து அடியிலுமல்ல; பாராளுமன்றத்தில்! புதுடில்லியில்!! தெளிவாகப் பேசியிருக்கிறார்! உண்மையான வாசகங்கள் அவை! எடுத்ததற்கெல்லாம் இந்தி—இந்தி என்று அங்கலாய்ப்பவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும் பட்டாபிராமனின் தெளிவுரையை.

## வேண்டாம் இந்த இறுதிப் பரீட்சை!

"இப்போது உயர் நிலைப் பள்ளி இறுதிவகுப்புகளில் (எஸ். எஸ். எல். ஸி.) நடத்தப்படும் சர்க்கார் பரீட்சைகளை ஒழித்து விட்டு, அதற்கு மாறாக, மாணவர்கள் பயிலும் பள்ளிகளில் அவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைகளில் அவர்கள் பெறும் தேர்வையும், பள்ளியின் குறிப்புகளையும் கொண்டு, மாணவர்களைத் தேர்வு செய்யலாம்" என்று, அனைத்திந்தியத் தலைமையாசிரியர்கள் தனி மாநாட்டில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தனி மாநாடு, சிம்லாவில், 1953 மே 17-ம் தேதி முதல் ஜூன் 25 வரை நடைபெற்றது.

## ஏன் இந்த அலட்சியம்?

இந்திய அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்களில், 1952-ம் ஆண்டில் மட்டும், சுமார் 30 லட்சம் ரூபாய் நஷ்ட மேற்பட்டிருக்கிறது என்று, 1952-ம் ஆண்டின் சிவில் ஆடிட் அறிக்கை தெரிவிக்கிறது. இந்த நஷ்டத் தொகையில், 18 லட்சம் ரூபாய் வெளி நாட்டு இலாகாவையும், 6 லட்சம் ரூபாய் அகதிகள் புனர் வாழ்வு இலாகாவையும், மிச்சத் தொகை, சமஸ்தான இலாகாவையும் சேர்ந்தனவாம். பண விவகாரத்தில் ஏன் இவ்வளவு அலட்சியம்? எவரும் கேட்பர். எப்படிக் கேட்காமல் இருப்பர்! இந்தியா என்ன அமெரிக்காவா—எவ்வளவு பணம் பாழானாலும் கவலையில்லை—மலைபோலத் தங்கம் குவிந்துகிடக்கிறதென்று கூற! ஏழைகள் நாடாயிற்றே இது! இங்கா, இவ்வளவு அலட்சியம்?

## மற்றுமோர் ஆபத்து!

ஜப்பானுக்கு அருகே உள்ள பிக்கினி என்னும் தீவில், இந்த ஆண்டில், அமெரிக்க அரசாங்கம், மூன்று ஜலவாயுக் குண்டுகளை வெடித்துப் பார்த்தது அல்லவா? அந்த விபரீதப் பரிசோதனைகளால் ஏற்பட்ட பயங்கர விளைவுகளில் ஒன்று, விஷ மழை. மே 17 அன்று, ஜப்பானில், காகோஷிமா என்கிற பகுதியில், விஷ மழை பொழிந்ததாம். இதிலே, நாசம் விளைவிக்கும் சக்தி நிறைய இருக்கிறதாக ஜப்பானிய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந்த மழைத் தண்ணீரை யாரும் பருகுதல் கூடாது என்று அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## அங்கேயும் கிடையாது!

முன்னாள் அமைச்சர் ஆச்சாரியார் கொண்டுவந்த புதிய கல்வித் திட்டம், சென்னை மாநிலத்தில் கைவிடப்பட்டதல்லவா? ஆந்திர மாநிலத்திலும், இது போலவே தான், அந்தத் திட்டம் ஒழிக்கப் பட்டுவிட்டது. வருகிற ஜூன் மாதம் முதல் ஆச்சாரியாரின் திட்டம் அமுலில் இருக்காது என்று ஆந்திர அரசாங்கம் அறிவித்துவிட்டது.

## தேர்தல்கள் வருகின்றன!

1954 ஆகஸ்டு கடைசியிலிருந்து அக்டோபர் மாதம் வரையில், சென்னை மாகில ஜில்லா போர்டு தேர்தல்கள் நடைபெறும் என்று ஸ்தல ஸ்தாபன அமைச்சர் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

## புதிய மேயர்!

இதுவரை சென்னை நகர மேயராக இருந்துவந்த திருவாளர் பரமேஸ்வரன் இப்போது அமைச்சராகி விட்டதால், அவருக்குப் பதிலாக, தோழர் ஆர். முனுசாமி என்னும் கவுன்சிலர், புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தோழர் முனிசாமி, ஆதித்திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இந்த ஆண்டின் மேயர் பதவி, ஓர் ஆதித் திராவிடருக்கு இருக்க வேண்டும் என்பது சம்பிரதாயம்.

## தமிழ் நாட்டுக்குப் பெருமை

இந்தியாவில் உள்ள வேறு எம் மொழிகளுக்கும் ஏற்படாத ஒரு பெருமை தமிழ் மொழிக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில், என்சைக்கிளோபீடியா பிரிட்டானிகா" என்கிற பெயரில், உலகத்தில் வளர்ந்துள்ள பல்வேறு கலைகளையும் சுருக்கித் தந்திருக்கிற பெரிய நூல் வெளியாகியிருப்பதுபோல, தமிழிலும் வெளியிட வேண்டும் என்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் சில ஆண்டுகளுக்கு முன் முடிவு செய்யப்பட்டது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தை, பத்துப் பகுதிகளாக வெளியிடுவதென்றும், மொத்தச் செலவு 9 லட்சம் ரூபாய் ஆகும் என்றும் முன்பே அறிவிக்கப்பட்டது. அதன்படி, முதல் பகுதி, அண்மையில் வெளி வந்திருக்கிறது. சிறந்த முறையிலும் அழகிய வடிவிலும் வெளிவந்திருக்கிறது இந்த நூல். இந்த நூலின் ஒரு பிரதியை, இதனை வெளியிட்ட தமிழ் வளர்ச்சிக் கழகத்தார், பண்டித நேருவிடம் கொடுத்தபோது, அதனைக்கண்ட அவர், தமிழ் நாட்டின்மகத்தான சாதனை இது என்று தெரிவித்தாராம். உண்மைதானே அது! தமிழ் நாடு, இந்தியாவுக்கே வழிகாட்டியிருக்கிறது இத் துறையில்! இந்தியாவில் உள்ள வேறு எம் மொழிகளிலும் கலைக் களஞ்சியம் இதுவரை வெளிவரவில்லை. தமிழில் தான் வெளிவந்திருக்கிறது!

## உங்களுக்குத் தெரியுமா?

1954 ஜனவரி முதல் தேதியில் எடுக்கப்பட்ட கணக்குப்படி, இந்தியாவில் அந்நியநாட்டு மதப் பிரசாரகர்கள் மொத்தம் 5063 பேர் இருக்கின்றனர்.

சென்னை மாகிலத்தில், 1951–52ம் ஆண்டில் 46,142 டன்களும், 52–53ல் 34,807 டன்களும், 53–54ல் 75,945 டன்களும் சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டது.

மைசூர் ராஜ்யத்தில் மொத்த மக்கள் தொகையில், தமிழர்கள், 100க்கு 7—தான் என்றாலும், மைசூர்—பெங்களூர்—கோலார் ஆகிய மூன்று நகரங்களில், குறிப்பிடத்தக்க அளவு உள்ளனர். பெங்களூர் நகரில் தமிழர்கள் 100க்கு 31 பங்கு உள்ளனர். பெங்களூர், மைசூர் மாநிலத்தில் நிர்வாகத் தலைநகரம். கன்னடர்களைவிட தமிழர்களின் எண்ணிக்கை இங்கே அதிகம். கன்னடர்கள் 100க்கு 23 பங்குதான் உள்ளனர்.

சராசரிக் கணக்குப்படி, தினசரி ஏடுகளைப் படிப்பவர்களின் தொகை பிரிட்டனில் தான் மிக அதிகம். அங்கே, 1000 பேரில் 611பேர் வீதம் தின இதழ்களைப் படிக்கின்றனர். ஏனைய நாடுகளின் சராசரி விவரம் வருமாறு:— ஸ்வீடன்: 1000-ல் 490 பேர். லக்சம்பர்க்: 447 பேர். ஐஸ்லாந்த். 439 பே. அமெரிக்கா—353 பேர். பிரான்ஸ்—239 பேர். மொத்த உலக எண்ணிக்கையில் 1000 க்கு 88 பேர்தான் நாள் இதழ்களைப் படிக்கின்றனர்.

பிற நாடுகளுக்கு விற்கும் மோட்டார் கார்களின் விலையாக, பிரிட்டன், நாள் ஒன்றுக்கு 10 லட்சம் பவுண்ட் வீதம், பிற நாடுகளிலிருந்து பணம் பெறுகிறது. ஒரே ஒரு தொழில்! அதிலிருந்து இவ்வளவு பெரிய வருமானம்! அதுவும் பிற நாடுகளிலிருந்து! எவ்வளவு களிப்பூட்டும் சேதி இது பிரிட்டனுக்கு?

---

## துண்டும் துணுக்கும்

ஒருவன் குடித்திருக்கிறான் என அறிய "டிரிங்கோமீடர்" (குடிமானி) என்ற கருவியும், அவன் பொய் சொல்லுகிறானா எனத் தெரிந்துகொள்ள "லைடிடெக்டர்" என்ற கருவியையும் கண்டுபிடிக்கப்பட்டு, உபயோகிக்கப்படுகிறது. பம்பாயில் ரகசிய போலீஸார் இதை உபயோகிக்கின்றனர்.

சைக்கிள் விடும்போதே ரேடியோ கேட்க, ஹாண்டிலாரில் பொருத்தக் கூடிய சிறு ரேடியோ செய்யப்படுகிறதாம்.

"ஹெலிகாப்டர்" என்ற விமானங்கள் வீட்டு மாடியிலிருந்தே கிளம்பி அங்கேயே இறங்கிவிடுமாம். எந்த மெதுவான வேகத்திலும் பறக்கும்.

ஓர் அமெரிக்க கம்பெனி மின்சார மூளையைத் தயாரித்துள்ளது.

(போதனா விஷயப் பூங்கொத்து)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

7. ஆதாரக் கல்விப் பள்ளிகளில் ஒரு மாணவனுக்கு 15 சதுர அடி வீதம் இடம் தேவையென சட்டம் உள்ளது. இதனால் இட வசதி அதிகமாய்த் தேவைப் படுவதால், அப்பள்ளிகளுக்கு கட்டிட வாடகையை அரசியலார் கொடுக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

8. "போதனா முறைப் பயிலாத ஆசிரியர்களை நியமிக்கும் விஷயத்தில் ஜில்லாக் கல்வி அதிகாரியின் முன் உத்தரவுப் பெற்ற பிறகுதான் நியமிக்கவேண்டும்" என்ற நிபந்தனையை நீக்க வேண்டுமெனவும்; அவ்வாசிரியர்களுக்கு தவிர்ப்பு விண்ணப்பம் தாக்கலான வுடனே அந்த மாத கிராண்டிலேயே கிராண்டைக் கொடுத்துவிடும் படியும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

9. உதவி பெறும் பள்ளிகளின் கட்டிட கிராண்டுக்காக பல தடவைகள் மனுக்கள் அனுப்பினபோதும் பதில் கிடைப்பதில்லை. எனவே அம்மனுக்களை அவ்வப்போது கவனித்து கட்டிட கிராண்டை அளிக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

10. 1952—53 ஆண்டுகளில் வேலை செய்த போதனா முறைப் பயிலாத சில ஆசிரியர்களுக்கு. கொடுக்காமலிருக்கும் கிராண்டைக் கொடுக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

11. (a) தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை குறித்த காலத்தில் நிறுத்த டெபுடி இன்ஸ்பெக்டர் அவர்களின் முன் உத்தரவு பெற்றும் 3 மாத நோட்டீஸ் கொடுத்தும் நீக்க வேண்டுமென்றுள்ள உத்தரவை ரத்து செய்யுமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(b) "காயமாக வேலை செய்யும் ஆசிரியர்கள் தனக்கிஷ்டமில்லாவிடில் மானேஜ்மெண்டுக்கு 3 மாத நோட்டீஸ் கொடுத்து விட்டு நின்றுவிடலாமென்று" சட்டமுள்ளது. அதுபோல் மானேஜ்மெண்டாரும் தனக்கிஷ்டமில்லா ஆசிரியர்களுக்கு 3 மாத நோட்டீஸ் கொடுத்து, நிறுத்த உத்தரவு அளிக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

12. மானேஜர்களுடைய பிள்ளைகளை போதனா முறைப் பள்ளிகளில் சேர்க்க முன்சலுகைகள் அளிக்குமாறு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**R. மகாதேவ ஐயர்,**
பொறுப்பாளர்.

**Y. முத்துகிருஷ்ண ஐயர்,**
செயலாளர்.

இராமலிங்கம் உயர்நிலைத் தொடக்கப்பள்ளி,
முத்துப்பிள்ளைத் தெரு, வேலூர். (வ.ஆ.)

# முக்கிய அறிவிப்பு

## "ஆரம்பக் கல்வி பத்திரிகை" இனும்.

சென்ற ஆண்டு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், பஞ்சாயத்து போர்டு தலைமை ஆசிரியர்களும், எமது **புதுமுறை சங்க வாசகங்களை** ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புவரை பாடப் புத்தகங்களாக வைத்தும், சிலர் எமது இதர பாடப் புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1954–55 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்துவைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1954–55-க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு மே 31–ம் தேதிக்குள் ஒரு கார்டு மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலைகளின் பெயர்கள் 1954–55 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம்போல் நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை இனமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக் கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1954 ஜூன் மாதம் 30–ம் தேதிக்குள் அவசியம் அனுப்பிவிடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Bill கள் அனுப்பத்தேவையில்லை. ஆர்டர்களைக்கொண்டே பெயர்களை ரிஜிஸ்டர் செய்யப்படும்.

### ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்க வேண்டியவை :

முன்பு தபால் கட்டணம் 5 தோலாவுக்கு அரையணாவாகயிருந்தது தற்போது ஓரணாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சுமார் 20 ரூபாய்க்குப் பெறுமான, சுமார் நாற்பது

புத்தகங்களை தபால் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதற்கு தபாற் செலவு 5 அல்லது 6 ரூபாயாகின்றது. அதாவது 20 ரூபாய்க்குக்கொடுக்கப்படும் 20% கமிஷன் ரூபாய் 4–க்குமேல் தபாற் செலவாகிறது. ஆதலால் புத்தகங்களை ரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. இரயில்வே செலவு 20 ரூபாய் பெறுமான புத்தகத்துக்கு 1 ரூபாய்க்கு மேல் ஆகாது.

ஆதலால் நேரிடையாகச் சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறக்காமல் அருகிலுள்ள (Railway Station) இரயில்வே நிலையத்தின் பெயரை ஆர்டரில் குறிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அப்படிக் குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுத் தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பாவாயில்லை தபால் மூலம்தான் அனுப்பப்பட வேண்டுமென விரும்புபவர்கள் தங்கள் ஆர்டர்களிலேயே அவ்விதம் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரயில்வே நிலையம் (Railway Station) அருகாமையில் இல்லாதவர்களும், மொத்தமாகச் சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்துச் சில்லரையாக வாங்கிக்கொள்வது இலாபகரமானதாகும்.

எல்லாப் புத்தக வியாபாரிகளுக்கும் 20% கமிஷன் கொடுக்கின்றோம். அவர்கள் செலவும், இலாபமும் போகக் குறைந்தது ரூபாய்க்கு 1 அணு ($6\frac{1}{4}$%) கமிஷன் கொடுக்கும்படியாவது கேட்டு வாங்கலாம். 20% கமிஷன் வேண்டுமென்று விரும்புபவர்கள் சென்னை அலுவலகத்திற்கே ஆர்டர்களை அனுப்பி இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரையும் தவறாமல் குறித்தனுப்பவும். செலவு 5% போக 15% ஆசிரியர்களுக்கு அவசியம் இலாபம் கிடைக்கும்.

நமது பத்திரிகையில், நமது புத்தகங்களை வாங்கி விற்கும் வியாபாரிகளின் பெயர்களை ஜில்லா வாரியாகப் பிரசுரித்திருக்கின்றோம். அவர்கள் மூலம் புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம்; தக்க கமிஷன் கொடுப்பார்கள். இன்னும் எங்கள் புத்தகங்கள் அகப்படாத இடங்களில் ஆங்காங்குள்ள வியாபாரிகளை நமது புத்தகங்களை வரவழைத்து விற்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளவும்.

# மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் கவனிக்க வேண்டியவை

நமது அலுவலகத்தில் ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் ஆரம்பப்பாடசாலைகளுக்குத் தேவையான எல்லாப் பாடபுத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பாடசாலைகளுக்கு 22 புத்தகங்களும், உயர்தரப் பாடசாலைகளுக்கு 11 புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பாட புத்தகங்களை மாற்றலாமென அரசாங்க உத்தரவில் கண்டிருக்கிறது. ஆதலால் சில பாடசாலைகளில் சிற்சில புத்தகங்களையே மாற்ற வசதியிருக்கும். சில ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாப் புத்தகங்களையும் மாற்றவசதியிருக்கும். அப்பாடசாலைகளுக்கு 22 மாதிரிப் புத்தகங்களை அனுப்புவதென்றால் தபாற்கட்டணம் அதிகமாகின்றது. அப்படி முழு செட்டையும் தபால்மூலம் அனுப்ப எண்ணுபவர்கள் ரூபாய் 5 மணியார்டர் (M. O.) அனுப்பவும். இரயில்வே நிலையம் அருகே உள்ளவர்கள் ரூபாய் 4 அனுப்பினால் முழுசெட் இரயில்வே Paid பார்சல் மூலம் அனுப்பப்படும்.

குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டும் வேண்டுபவர்கள் ஆரம்பக் கல்விப் பத்திரிகையில் வெளியிட்ட அளவு தபால் பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தபால் மூலம் அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகளை ரிஜிஸ்டர் செய்து வருகிறோம். குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஒரு முறைக்குமேல் எக்காரணத்தைக்கொண்டும் மறுமுறை மாதிரிப் பிரதிகளாக அனுப்ப முடியாது. அப்படி மறுபடியும் அனுப்ப பணம் அனுப்பப்பட்டால் தபாற்செலவு கழித்துக்கொண்டு மீதித் தொகையைத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

---

## அறிஞர் வாயுறை

நாடு நலம்பெற வேண்டுமா ஆம் எனில், சாதிச்சண்டை சமயச் சண்டை—பிற மூடச் சண்டைகள் அனைத்தையும் கட்டிச் சுருட்டி வங்காளக் குடாக் கடலில் எறிதல் வேண்டும்.

— திரு. வி. க.

# நமது புதிய வெளியீடு

# வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

## (1-முதல்—7-வது வகுப்பு வரை)

இவ்வாண்டு **வீரபாண்டியன் தமிழ் வாசகம்** என்னும் மகுடம் புனைந்த தமிழ் வாசகங்கள், ஒன்று முதல் ஏழாவது வகுப்பு வரையில் வெளியிடப்பட்டு அரசியலார் அங்கீகாரமும் பெற்றிருக்கின்றன. இவை சென்னை **லேடி, M.C. T.** பெண்கள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் **ஸ்ரீமதி இராஜாம்பாள் கோவிந்தராஜன் M. A, L. T.,** அவர்களால் எழுதப்பட்டு, வித்துவான் **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை திரு. த. சே. உமாபதி M. A., L. T.,** அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இப் புத்தகங்கள் டெம்மி $\frac{1}{8}$ (Demmy $\frac{1}{8}$) பெரிய அளவில் நல்ல காகிதத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்புப் புத்தகங்களிலும் ஏராளமான படங்களும் தற்காலத்திற்கேற்றவாறு புதிய முறையிலும், நடையிலும், பல பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுவரை நமது **சங்க வாசகங்களை** இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வைத்து நடத்தி வரும் ஆசிரியர்கள், அதற்குப் பதிலாக **வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை** வைத்து ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இப்புதிய வாசகங்களில் காணப்படும் சில பாடங்களை மாதிரிக்காக ஆரம்பக் கல்வியில் பிரசுரித்துள்ளோம். இதைக் கவனித்தால் புதிய வாசகங்கள் எந்த முறையில் அமைந்திருக்கின்றன என்பது ஆசிரியர்களுக்கு நன்குக விளங்கும்.

ஒன்று முதல் ஐந்து வரையில் வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் பன்னிரண்டணாவும், ஏழெட்டு வகுப்புகளுக்கு மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் பத்தணாவும் தபால் பில்லைகள் அனுப்பி மாதிரிப் பிரதிகளை தபால் மூலம் பெற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்

**ஆரம்பக்கல்வி ஆபீஸ்**

தபால் பெட்டி நெ. 1818

சென்னை.



## 4. பாரதியார்

ஓடி விளையாடு பாப்பா !—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா !—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !
காலை எழுந்தவுடன் படிப்பு,—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு ;
மாலை முழுதும்விளை யாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா !

1. நீ இந்தப் பாட்டைப் படி. இதை நீ இரண்டாம் வகுப்பிலேயே படித்திருக்கிருய் அல்லவா ? இது எவ்வளவு சுலபமாய் இருக்கிறது! எவ்வளவு அழகாய் இருக்கிறது ! இதைப் பாடிஞல் உனக்கு இன்பம் உண்டாகிறது அல்லவா ? இம்

மாதிரியான அழகிய பாட்டைப் படிக்கும் போது, 'இதை எழுதியவர் யார்?' என்பதை நீ தெரிந்து கொள்வது நல்லது. இந்தப் பாட்டைப் பாடியவர் **பாரதியார்.** அவரது உருவப்படத்தை முன் பக்கத்தில் பார்.

2. பாரதியார் என்பது அவர் முழுப்பெயர் அன்று; அவரது பட்டப் பெயர். அவரது முழுப் பெயர் **சுப்பிரமணிய பாரதியார்** என்பது. பாரதியாரின் தந்தையார் பெயர் **சின்னசாமி ஐயர்;** தாயாரின் பெயர் **இலக்குமி அம்மாள்.**

3. பாரதியார் **எட்டையபுரத்தில்** பிறந்தார். நமது தமிழ் நாட்டின் தென்பக்கம் திருநெல்வேலி ஜில்லா இருக்கிறது. அங்கேதான் எட்டையபுரம் இருக்கிறது.

4. பாரதியார் சிறந்த தமிழ்ப் புலவர். 'புலவர்' என்னும் சொல்லுக்குச் 'சிறந்த அறிவு உடையவர்' என்பது பொருள். பாரதியார் நூற்றுக் கணக்கில் பாட்டுக்களைப் பாடினார். அப்பாட்டுக்கள் பல வகைப்படும். அவருக்குத் தமிழின் மீது அன்பு அதிகம். ஆதலால், அவர் தமிழைப் பற்றியும் பல பாட்டுக்களைப் பாடினார்.

5. நாம் வசிப்பது **பாரத தேசம்.** இதன் தென்பகுதி **தமிழ் நாடு.** இவற்றின் மீது நமக்குப் பற்று இருக்க வேண்டும். இவ்விதமான பற்று, பாரதியாரிடம் அதிகம் இருந்தது. ஆகையால், அவர் பாரத தேசத்தைப்பற்றிப் பல பாடல்களைப் பாடினார்; தமிழ் நாட்டைப்பற்றியும் பல பாட்டுக்களை இயற்றினார். இதனால், அவருக்குத் **'தேசீய கவிஞர்'** என்னும் பட்டம் வழங்கி வருகிறது.

6. நீ மேல் வகுப்புகளில் பாரதியாரின் பாடல்களை எல்லாம் படிக்க வேண்டும். அவை எளியவை; பொருள் நிரம்பியவை. ஆதலால், அவைகளைத் தமிழ் படித்தவர் எல்லாரும் போற்று-கின்றனர்.

## பயிற்சி :

**1. விடை எழுது :—**

அ. பாரதியாரின் முழுப் பெயர் யாது?

ஆ. பாரதியாருடைய தாயார், தந்தையார் பெயர்கள் யாவை?

இ. பாரதியார் எங்கே பிறந்தார்?

ஈ. பாரதியாருக்குத் 'தேசிய கவிஞர்', என்னும் பட்டம் ஏன் வழங்கி வருகிறது?


உ. உனக்குத் தெரிந்த பாரதியார் பாடல் ஒன்றை எழுது.

**2. எதிர்ச்சொற்களை நேருக்கு நேர் எழுது :—**

| | |
|---|---|
| சுலபம் | கீழ் வகுப்பு |
| இன்பம் | இறந்தார் |
| அழகு | கெட்டது |
| நல்லது | விகாரம் |
| பிறந்தார் | துன்பம் |
| மேல் வகுப்பு | கஷ்டம் |

**3. கீழ் வருவதில் உள்ள பெயர்ச்சொற்களை எடுத்து எழுது :**

பாரதியார் என்ற புலவர் எட்டையபுரத்தில் சின்னசாமி ஐயர் மைந்தராய்ப் பிறந்தார்.



# எமது புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

## சென்னை

1. M. துரைசாமி முதலியார் & ஸன்ஸ்
1, மலையபெருமாள் தெரு
சென்னை–1

2. C. குமாரசாமி நாயுடு & சன்ஸ்
சைனுபஜார், சென்னை–1

3. P. K. நாயுடு & சன்ஸ்
1, பத்ரையன் தெரு
சென்னை–1

4. தாமோதரம் & கோ
புக் செல்லர்
சைனுபஜார், மதராஸ்

5. பாலகுமார்
புக் செல்லர்
சைனுபஜார், மதராஸ்

6. ராஜன் வித்தியா எம்போரியம்
புக் செல்லர்
16 கரியப்ப முதலி தெருவு
வேப்பேரி, சென்னை–7

## செங்கற்பட்டு

1. V. கோவிந்தராஜ்
புக் செல்லர்
செங்கற்பட்டு

2. T. K. முனிரத்தினம்
புக் செல்லர்
திருக்கழுக்குன்றம்,செங்கற்பட்டு

3. P. T. மாசிலாமணி முதலியார்
புக் செல்லர்
காஞ்சீபுரம், செங்கற்பட்டு

## வட ஆற்காடு

1. A. சுப்ரமணியம்
புக் செல்லர்
ஆற்காடு

2. K. M. சுவாமி & சன்ஸ்
புக் செல்லர்
ஆற்காடு

3. A. M. ஜெயராமன்
புக் செல்லர்
திருப்பத்தூர்

4. V. M. ராஜமாணிக்கம்
புக் செல்லர்
திருப்பத்தூர்

5. T. நடராஜன்
புக் செல்லர்
திருப்பத்தூர்

6. தி. ஸ்டேஷனரி மார்ட்
புக் செல்லர்
சந்தபேட்டை, குடியாத்தம்

7. எவர் கிரீன் ஷாப்
புக் செல்லர்
குடியாத்தம்

8. A. பாக்கியம் முதலியார் & சன்ஸ்
புக் ஷாப்
வேலூர்

9. K. V. பிரஸ்
புக் டிப்போ
வேலூர்

10. K. M. பாட்சா & கோ
புக் செல்லர்
வந்தவாசி

11. C. தனபால் செட்டியார்
மளிகை வியாபாரம்

சாலவேடு, வந்தவாசி தாலுக்கா
வடஆற்காடு ஜில்லா

12. V. S. நடேச உடையார்
புத்தக வியாபாரம்
ஜோலார்பேட்டை

13. சிதம்பர முதலியார்
புக் செல்லர்
செய்யார்

14. A. M. முனிரத்தின
முதலியார்
புக் செல்லர்
ஆம்பூர்

15. A. G. சிகப்துல்லா ஊல்வி
புத்தக வியாபாரம்
ஆம்பூர்

16. அண்ணுமலை
புக் செல்லர்
திருவண்ணுமலை

17. P. தங்கவேல் பிள்ளை
புக் செல்லர்
திருவண்ணுமலை

18. T. V. C. கண்ணன்
புக் டிப்போ
மண்டபம்
திருவண்ணுமலை

19. T. V. C. முனிரத்தின
செட்டி
புக் ஷாப்
திருவண்ணுமலை

20. கிருஷ்ணு ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
வாணியம்பாடி

21. டைடா. சி. டி. வெங்கட்ராம
செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
போளூர்.

22. ஜெயின் ஜெனரல்
ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
செங்கம்

23. V. V. செஞ்சய்ய செட்டி
& சன்ஸ்
சோளிங்கபுரம்

## தென் ஆற்காடு

1. V. B. கணேசன்
புக் ஷாப்
விழுப்புரம்

2. கமலா ஸ்டோர்ஸ்
பஜார் தெரு
விழுப்புரம்

3. P. முனுசாமி நாயுடு
& சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்

4. கேசவலு செட்டியார்
புக் செல்லர்
திண்டிவனம்

5. V. K. M. அருணுசல
செட்டி
புக் ஷாப்
திருப்பாபுலியூர்

6. C. G. இராமானுஜம்
செட்டியார்
புக் செல்லர்
சிதம்பரம்

7. C. பார்த்தசாரதி ஐயர்
புக் செல்லர்
சிதம்பரம்

8. S. R. வெங்கட்டராம
செட்டி
ஷாப் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

9. K. V. இராஜா செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
வெள்ளையன்குப்பம்
நெய்வேலி

10. C. N. R. செந்திவிநாயகம்
ஷாப் & ஜெனரல்
வளவனூர்

11. S. V. சாரங்கபாணி செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

12. P. S. ராஜன் & கோ
புக் செல்லர்
பண்ருட்டி

13. ஸ்ரீ ராமலிங்கா ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிப்பாடி

14. கணபதி புக் செல்லர்
நெல்லிகுப்பம்

15. T. ராஜகோபால்
புக் செல்லர்
கிருஷ்ணபுரம்
செஞ்சி தாலுக்கா

16. M. P. சந்தான செட்டி
புக் செல்லர்
உளுந்தூர்பேட்டை

17. R. ஜெயராம் நாயுடு
மளிகை
ஆண்டிமடம் p. o.

## திருச்சி

1. தெ. பெரியசாமி பிள்ளை
ஷாப் & மளிகை
பெரம்பலூர், திருச்சி

2. முருகன் & கோ
புக் செல்லர்
தெப்பகுளம், திருச்சி

3. S. B. பாலநாகமய்ய செட்டி
புக் ஷாப்
கரூர், திருச்சி

4. பழனியப்பா பிரதர்ஸ்
புக் செல்லர்
தெப்பகுளம், திருச்சி

5. சின்னப்பா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
தாத்தயங்கார்பேட்டை, திருச்சி

## தஞ்சாவூர்

1. R. சீனுவாசலு நாயுடு
புக் செல்லர்
மாயவரம்

2. V. ஜகதீசன்
புக் செல்லர்
பெரிய தெரு
பட்டுக்கோட்டை

3. ராமலிங்க சுவாமி புக் டிப்போ
விஜயபுரம் p. o.
திருவாரூர்

4. பிரகாஷ் டிரேடர்ஸ்
புக் செல்லர்
திருவாரூர்

5. K. S. சிவராம கிருஷ்ணன்
ஜெனரல் மர்ச்சண்ட்
பெரிய பஜார் தெரு
பட்டுக்கோட்டை

6. M. கணபதி
புக் செல்லர்
காசி கடைதெரு
திருத்துறைப்பூண்டி p. o.

7. ஸ்ரீ வெங்கட்டேஸ்வரா
பிரிண்டிங் ஒர்க்ஸ்
டவுன் உயர்தரப் பாடசாலை ரோடு
கும்பகோணம்

8. P. V. நாதன் & கம்பெனி
புக் செல்லர்
கும்பகோணம்

9. சந்திரா & கோ
புக் செல்லர்

அய்யன் கடைத்தெரு
தஞ்சாவூர் p. o.

10. பாரதமாதா புக் டிப்போ
93-எல்லையம்மன் கோயில் தெரு
தஞ்சாவூர்

11. கு. கோவிந்தசாமி பிள்ளை
அண்டு பிரதர்ஸ்
மளிகை
பந்தணை நல்லூர்
(via) குத்தாலம்

## மதுரை

1. M. தக்ஷிணாமூர்த்திகோன்
புக் செல்லர்
புது மண்டபம், மதுரை

2. E. M. கோபாலகிருஷ்ண
கோன்
புக் செல்லர்
மதுரை

3. M. நடனசுந்தரம் பிரதர்ஸ்
புக் செல்லர்
புதுமண்டபம், மதுரை

4. S. S. ராஜன் புக் டிப்போ
புதுமண்டபம், மதுரை

5. P. L. அருணாசல முதலியார்
புக் செல்லர்
புதுமண்டபம், மதுரை

6. V. M. S. & சன்ஸ்
புக் ஷாப்
புதுமண்டபம், மதுரை

7. லியோபுக்டிப்போ
புக்செல்லர்
56 தலைவாய் தெரு
மதுரை

8. S. V. S. நாடார்
புக்செல்லர்
திருமங்கலம்
மதுரை.

9. அமீதியா ஸ்டோர்ஸ்
ஷாப் மர்ச்சண்ட்
பேரையூர் p. o.
திருமங்கலம் தாலுக்கா
மதுரை

10. S. முத்துசாமி
புக்செல்லர்
போடி நாயக்கனூர்
மதுரை

11. K. V. நாராயண ஐயர் &
சன்ஸ்
புக்ஷாப்
திண்டுக்கல்

12. P. K. A. குழந்தைவேலு
நாடார்
புக்செல்லர்
திண்டுக்கல்

13. S. P. சூர்ய நாராயண
பிள்ளை
புக்ஷாப்
மெயின்ரோடு
திண்டுக்கல்

14. K. P. K. சாரங்கபாணி
செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
பழனி

15. கணேஷன் ஸ்டோர்
கண்டிரோடு
பழனி

16. K. கிருஷ்ணமாச்சாரி
இரும்புவியாபாரம்
கோடைக்கானல் ரோடு
கிலைக்கோட்டை p. o.

17. V. ஆறுமுகம் பிள்ளை
ஷாப்மர்ச்சண்ட்
பெரியகுளம்

18. V. முத்துதேவர், வியா
பாரி

சில்வார்பட்டி
பெரியகுளம்

19. T. S. குருசாமி நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
கள்ளிகுடி
மதுரை

20. காகாஷாப்
உசிலம்பட்டி
மதுரை

21. அப்துல் வகாப்
ஷாப் வியாபாரம்
உசிலம்பட்டி
மதுரை

## இராமனதபுரம்

1. அருணஸ்டோர்ஸ்
இராமனதபுரம்

2. S. T. சுவாமி & சன்ஸ்
புக்ஷாப்
பெரியபஜார்
இராமனதபுரம்

3. K. M. S. சோமசுந்தரம்
செட்டியார்
ஷாப்மர்ச்சண்ட்
இராமனதபுரம்

4. K. S. பிள்ளை & சன்ஸ்
புக்செல்லர்
ராஜபாளையம்

5. அமிர்தம் புக்டிப்போ
கல்லூரணி p. o.
(via) அருப்புக்கோட்டை

6. அப்பன் & கோ
புக்செல்லர்
விருதுநகர்

7. மாரியப்பன் ஸ்டோர்ஸ்
புக்செல்லர்
விருதுநகர்

8. S. P. M. தங்கவேல்
கள்ளிகுடி
விருதுநகர்

9. A. R. முத்துபானுசெட்டி
புக்செல்லர்
சாலையூர்
இளையான்குடி

10. S. ராஜேந்திரன் செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
இளையான்குடி

11. P. V. ரெத்தினசபாபதி
செட்டி
புக்ஷாப்
இளையான்குடி

12. M. S. அண்ணமலை
நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
சாத்தூர்

13. ஜவஹர் புக் டிப்போ
மெயின் ரோடு
சாத்தூர்

14. M. M. சின்னசாமி பிள்ளை
ஜெனரல் மர்ச்சண்ட்
ஸ்ரீ வில்லிபுத்தூர்

15. கலா நிலையம்
காரைக்குடி

16. S. V. S. வெள்ளைச்சாமி
செட்டியார்
ஜெனரல்மர்ச்சண்ட்
பரமகுடி

17. R. கருப்பையா
புக் ஸ்டால்
சாயல்குடி

18. M. M. S. ராமசாமி
செட்டி
புக்செல்லர்
பரமகுடி.

19. வே. வி. வேல்முருக
நாடார்
ஷாப் வியாபாரம்
கன்னிசேரி
துலுக்கப்பட்டி

## கோயமுத்தூர்

1. பாலகங்காதர செட்டி
புக்ஷாப்
32, பஜார் தெரு
பொள்ளாச்சி

2. P. மாணிக்கம்
புக்செல்லர்
ஈரோடு.

3. சிவலிங்க விலாஸ்
புக்டிப்போ
ஈரோடு

4. C. R. நடராஜன்
புக்செல்லர்
கோயமுத்தூர்

5. K. O. பெட்டை கவுடர்
புக்செல்லர்
கோயமுத்தூர்

6. A நஞ்சப்பா
புக்செல்லர்
கோயமுத்தூர்

7. கவிஞர் பதிப்பகம்
கோயமுத்தூர்

8. A. K. மாணிக்கம்
செட்டியார் & சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

9. K. U. N. கவுண்டர் & Co
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

10. M. S. & Mv. பிரதர்ஸ்
புக்ஷாப்
பொள்ளாச்சி

11. பாலதண்டாயுதம்
செட்டியார்
புக்செல்லர்
பொள்ளாச்சி

12. S. S. பாலசாமி செட்டி
புக்செல்லர்
சத்தியமங்கலம்

13. A. L. M. பொன்னுசாமி
ஜெனரல் மர்ச்சண்ட்
அந்தியூர்
(via) பவானி

14. A. A. குட்டியப்ப
முதலியார்
ஜெனரல்மர்ச்சண்ட்
ராஜவீதி
அந்தியூர்

15. M. K. சுப்ரமணியன்
புக்செல்லர்
வால்பாறை பஜார்
கோயமுத்தூர்

16. P. R. S. மணியம்
ஸ்டோர்ஸ்
புக்செல்லர்
பல்லடம் ரோடு
திருப்பூர்

17. தண்டபாணி ஸ்டோர்ஸ்
தாராபுரம்

18. K. விஜயராமன்
வாசவி ஸ்டோர்ஸ்
நெகமம் P. O.
(Via) பொள்ளாச்சி

19. லக்ஷ்மி ஸ்டோர்ஸ்
ஜெனரல்மர்ச்சண்ட்
பவானி

20. சண்முகாநந்தா புத்தக
நிலையம்
கோபிசெட்டி பாளையம்

21. லட்சுமி ஸ்டேஷனரி
மார்ட்
கோபிசெட்டி பாளையம்
(கோயமுத்தூர்)

22. S. நாகமாணிக்கம் செட்டி
புக்ஷாப்
தல்லிரோடு
உடுமலைப்பேட்டை

23. ராஜா புக்ஷாப்
தல்லி ரோடு
உடுமலைப்பேட்டை

## சேலம்

1. A. K. சந்திரய்ய
செட்டியார்
புக்செல்லர்
கோட்டை, சேலம்

2. M. V. A. நாராயணன்
ஜெனரல்மர்ச்சண்ட்
ராயகோட்டை

3. N. T. கோவிந்த செட்டி
புக்செல்லர்
ராயகோட்டை

4. T. V. பரமசிவம் பிள்ளை
புக்செல்லர்
சேலம்

5. நிர்மலா பப்ளிஷிங்
ஹௌஸ்
47, முதல் அக்ராகாரம்
சேலம் டவுன்

6. L. M. நாகமைய்ய செட்டி
புக்செல்லர்
ஆத்தூர், சேலம்

7. K. வெங்கடப்ப செட்டி
& சன்ஸ்
புக்செல்லர்
டென்கனி கோட்டை

8. ஸ்ரீ சூர்யநாராயண காபி
ஒர்க்ஸ்
புக்செல்லர்
ஹோசூர், சேலம்

9. S. S. R. ஸ்ரீனிவாச
செட்டி
மளிகை
சூளிகிரி P. o.
ஹோசூர் தாலுக்கா

## நீலகிரி

1. S. நாகப்ப செட்டியார்
சகுந்தலா புக்டிப்போ
மார்க்கட்
கூனூர்

2. M. குமாரசுவாமி &சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
கூனூர்

3. I. B. J. நந்திக் கவுண்டர்
ஜெனரல் மர்ச்சண்ட்
மார்க்கட்
உதகமண்டலம்

4. M. A இருதயசாமி
புக்செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

5. T. M. ஆரோக்கியசாமி
புக்செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

6. C. தாத்தன்
முள்ளிமலை
குண்டா P. o.
நீலகிரி

## திருநெல்வேலி

1. ஸ்ரீ கோபாலன் அண்டு கோ
புக் செல்லர்

கோயில்பட்டி

2. ஸ்ரீ சண்பகவல்லி புக் ஷாப், தெற்கு பஜார், கோயில்பட்டி

3. சண்முகம் பிள்ளை புக் ஷாப் கோயில்பட்டி

4. ஸ்ரீ கோபாலன் ஸ்டோர்ஸ் புக் செல்லர் சங்கரன் கோயில்

5. ஸ்ரீ முருகன் ஜெனரல் ஸ்டோர்ஸ் தென்காசி

6. U. R. பாவநாசம் பிள்ளை ஸ்கூல் புக் சப்ளையர் வீரவநல்லூர்

7. டயோசிசன் புக் டிப்போ பாளையம்கோட்டை

8. திரு. வள்ளலார் புத்தகசாலை தா. பழூர் p. o. (via) ஜெயம் கொண்டான்

9. நேஷனல் ஸ்டோர்ஸ் மெயின்ரோடு ஏர்வாடி

10. P. M. ஆதிநாராயணன் வியாபாரி குரங்கணி தென்திருப்பேரை p. o. திருநெல்வேலி

---


## "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

**94–95, புதுத் தெரு, மண்ணடி சென்னை–1**

| | |
|---|---|
| மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 | ரூ. 2–8 |
| ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 | ரூ. 2–0 |
| பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 | ரூ. 2–0 |
| பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 | ரூ. 1–0 |
| வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 | ரூ. 2–0 |

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

## உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

### வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan - V. Subramaniam)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 26 | 13-5-'53 |
| ஏழாம் வகுப்பு | 0 | 14 | 0 | R.C. No.3/54 | 17-3'-54 |

மாதிரிப் பிரதிகளுக்கு 0-10-0 அனுப்பவும்.

### புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B.A; L.T., & V. S. Leela B.A; B.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 | 2 | 0 | 2 | 13-1-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 4 | 0 | 2 | 13-1-'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 4 | 0 | 2 | 13-1-'54 |

மாதிரிப் பிரதிகளுக்கு 1-4-0 அனுப்பவும்.

### சமூக நூல்

(T. S. Umapathy, M.A., L.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 | 1 | 0 | R.C.No.3/54 | 17-3-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 8 | 0 | ,, | ,, |
| எட்டாம் வகுப்பு | 1 | 8 | 0 | ,, | ,, |

மாதிரிப் பிரதிகளுக்கு 1-8-0 அனுப்பவும்.

### அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13-5-'53 |
| ஏழாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13-5-'53 |
| எட்டாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13-5-'53 |

மாதிரிப் பிரதிகளுக்கு 0-12-0 அனுப்பவும்.


Edited, Printed and Published, by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95, New St. Mannady Madras—1.